

# கிருபையும், சத்தியமும்

# GRACE AND TRUTH

***J.C. Choate***

கிருபை என்பது "தகுதியில்லாதவனுக்குக் காட்டப்படும் தயை" அல்லது "அதைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருப்பவனுக்குக் கொடுக் கப்படும் ஈவு" என்று விளக்கப்படுகிறது.

*நாம் நன்கறிந்த வார்த்தைகளில் கிருபையைக் கிறிஸ்து இவ்விதமாக விளக்குகிறார். " தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படித் தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவர் அனுப்பினார்" (யோவான் 3:16,17). அப்போஸ்தலன் பவுல் இவ்விதமாக விளக்கினார், " நாம் பாவிகளாயி ருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்"* (ரோமர் 5:8)

*பவுல் அப்போஸ்தலன் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். " எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபை யினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படு கிறார்கள் ". (ரோமர் 3:23,24) " அன்றியும், ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமை யினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும் பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று; ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது " (ரோமர் 5:19-21). நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக் கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது (ரோமர் 6:14). இதோடு சேர்த்து யோவான் எழுதினதையும் நினைவில் கொள்ளுங்கள், " எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின " (யோவான் 1:17). அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளோடு நாமும் சேர்ந்து இவ்விதமாகச் செய்வோம், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை*

*அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே " (2 கொரி. 8:9).*

வேறுவிதமாகச் சொன்னால், இந்த வசனங்களெல்லாம் நாம் பாவத்தில் இருக்கிறோமென்றும், இழந்துபோன நிலையில் இருக்கிறோமென்றும், நம்பிக்கையற்றவர்களாயிருக்கிறோமென்றும், நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாதவர்ளென்றும், நம் இரட்சிப்பை நாமாகவே சம்பாதித்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோமென்றும் சொல்கின்றன. மாறாக, கிறிஸ்துவின் மரணம், அவருடைய இரத்தம் சிந்துதல் அந்த ஈவின் மூலமாகக் கிடைக்கும் கிருபையும், இரக்கமும் இவ்வுலகிலும், இனிவரும் உலகத்திலும் நமக்கு இரட்சிப்பைச் சாத்தியமாக்குகிறது.

பவுல் இவ்வுண்மையை இவ்விதமாக எழுதுகிறார். " கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல என்று (எபே. 2:8,9). இங்கே அப்போஸ்தலன் பவுல் நாம் கிருபை யினாலே **(தேவனுடைய பங்கு)**, விசுவாசத்தைக் கொண்டு **(மனிதனுடைய பங்கு)** இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்.

இங்கே, கிருபை தேவனுடைய பங்காக இருப்பதால் உண்மையாகவே, மனிதனுக்கென்று வகிக்க வேண்டிய பங்கு எதுவுமில்லை என்று சிலர் வாதிடலாம். அப்போஸ்தலன் பவுல் தொடர்ந்து வெளிப்படுத்துவது போல், நிச்சயமாகவே நம்மை நாம் இரட்சித்துக்கொள்ள முடியாது அல்லது நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நாம் இரட்சிப்படைய முடியாது என்பதெல்லாம் உண்மையாக இருந்தாலும் கூட, இரட்சிப்பில் மனிதன் ஆற்ற வேண்டிய பங்கும் இருக்கிறது. வேதாகமம், இரட்சிப்பு கிருபையினால் மாத்திரம் அல்லது விசுவாசத்தினால் மாத்திரம் என்று எங்குமே போதிக்கவில்லை. நம் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும்படிக்கு, நாம் இருக்கும் இடத்தில் நமக்காக மரிக்கும்படி தம்முடைய குமாரனையே அனுப்பிக் கொடுத்து, இரட்சிப்பிற்கான வழியை உண்டாக்கின படியால் தேவனுடைய கிருபை அங்கே இருக்கிறதை நாம் காண முடியும். அங்கே விசுவாசமும் இருக்கிறது. அதில் நாம் தேவனை விசுவாசிக்க வேண்டும். அதன் பின்பு கர்த்தருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாயிருக்கும் அளவுக்கு, கிறிஸ்து நமக்காகச் செய்த தியாகங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் இரட்சிக்கப்படும்படியாகவும், அவருடைய சபையில் சேர்க்கப்படும்படியாகவும் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தாலும், அதன் மூலம் நாம் ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்து, உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தினாலும், நம்மை இரட்சிப்பதற்கு இவைகள் மாத்திரம் போதுமானதல்ல. தேவன் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் செய்த பிறகு, நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமென்றால், அது தேவனுடைய கிருபையினால் தான்.

நாம், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய மறுத்து, வாழ்நாள் முழுவதும் நாம் அவருடைய வழிகளில் நடக்க மறுப்போமானால், தேவனுடைய கிருபை கூட நம்மை இரட்சிக்க முடியாது. பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 2:8,9 வசனங்களில், நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் படுகிறோம் என்று மாத்திரம் சொல்லவில்லை. எபே. 2:10ல் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். ***ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.***

தீத்து 3:3-7 வசனங்களில் அப்போஸ்தலன் பவுல் இவ்வண்ணமாக எழுது கிறார். ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும், அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும், பொறாமையோடும், ஜீவனம் பண்ணு கிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர் களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும், மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கி னாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் அந்த பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார். மனிதன் இழந்து போய்விட்டான். ஆனால், தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கத்தினால் ஞானஸ்நானத்தின் மூலம் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினால், பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொண்டு (மாற்கு 16:16; அப். 2:38), தேவனுடைய கிருபையினால் மனிதன் இரட்சிக்கப்படுகிறான். இதன் மூலம் நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது என தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் இங்கே கூறுகிறார். இது நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் நிறைவேற்றப்படுவதில்லையென்றும் மாறாக, தேவனுடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும் நிறைவேற்றப்படுகிறது என்றும் பவுல் வலியுறுத்துகிறார். மறுபடியும், நாம் இங்கே பார்க்கின்ற காரியம் என்ன வென்றால், நாம் கர்த்தருடைய சித்தத்தின்படி நடந்துகொள்ளும் போது மட்டுமே அந்தக் கிருபை நம்மை இரட்சிக்கிறது.

சிலர், நாம் தேவனுடைய கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்படுகிறோம் என்று போதித்து, நம்மால் செய்ய முடிகின்ற எல்லாவற்றிலுமிருந்து நம்மைப் பிரித்து விடுகிறார்கள். வேறு சிலர் மத உலகமும், கர்த்தருடைய பிள்ளைகளும் சரியாக இல்லாதபடியால், தேவ கிருபையானது அவர்கள் எப்படிப்பட்ட தவறில்

இருந்தாலும் இறுதியில் இரட்சிக்கும் என்று வாதிடுகின்றனர். இவைகளெல்லாம் கர்த்தருடைய உபதேசங்களுக்கு மாறான, தவறான உபதேசங்களாயிருக்கிறது. தம்முடைய குடும்பத்தில் ஆவிக்குரிய ரீதியில் பிறந்து, பூரணமான தம்முடைய பிள்ளைகளிடத்தில் தேவன் நடந்துகொள்ளும் விதத்திற்கும், மறுபிறப்பை ஒரு போதும் அனுபவித்திராதவர்களிடத்தில் தேவன் நடந்து கொள்ளும் விதத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது.

பவுல் அப்போஸ்தலன், இதே வாதத்தை தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கள்ளப் போதகர்கள் சம்மந்தமாகவும், தவறிழைத்த எல்லோர் சம்பந்தமாகவும் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. மாறாக, அவர் கலாத்தியர்களைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார். *உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல், வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்* (கலா. 1:6-9).

இந்த வசனங்களிலிருந்து, கிருபையானது சத்தியத்தை அறிந்து கொள்ளாமலிருப்பது, அதற்குக் கீழ்ப்படிய மறுப்பது, பக்தி ரீதியாகத் தவறிழைப்பது, உபதேசத்திற்கு உண்மையில்லாதிருப்பது போன்றவைகளை ஒன்றும் செய்யாது என்ற முடிவுக்கு வருகிறோம்.

ஆகையால் தான், தேவன் தம்முடைய கிருபையை நீட்டித்து, நமக்கு இரட்சிப்பை நல்கியிருக்கிறார். ஆனால், அவர் அளிக்கும் இரட்சிப்பை ஏற்றுக் கொள்வதற்குப் போதுமான அளவு நாம் அவரில் விசுவாசத்தை வைக்க வேண்டும். அவர் நமக்குக் கட்டளையிடும் எல்லாவற்றையும் செய்து முடித்த பிறகும் கூட, பரலோகத்தில் நமக்கு ஒரு வீட்டைத் தருவதற்கு அவருடைய கிருபை அவசியம். *நாம் அவருடைய சித்தத்தின்படி நடக்க மறுத்தால், அவருடைய கிருபை கூட நமக்கு அந்தப் பரலோக பலனைப் பெற்றுத்தராது.* ❋

**உங்கள் பிள்ளைகள் கிறிஸ்துவைப் போல் வாழ நீங்கள் விரும்பினால், அவர்களுக்கு முன்பாக ஒரு நடமாடும் கிறிஸ்துவாக நீங்கள் வாழுங்கள்!**

# பரமதரிசனம்

## Heavenly Vision

*E.Z.S. Rajanayagam*

*"அவன் பிரயாணமாய்ப் போய் தமஸ்குவுக்குச் சமீபித்த போது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர், நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்"* (அப். 9:3-6).

இந்தத் தரிசனம் குறித்து, தான் ஒரு விசாரணைக் கைதியாக அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிற்கையில், கொஞ்சம் விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டு, அகிரிப்பா ராஜாவே *"நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை"* என்று கூறுகிறார்.

தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் அவர் கண்ட தரிசனம், அவர் மனதில் எப்பொழுதும் பசுமையாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில், இங்கே, பவுலடியார் அகிரிப்பாவிற்கு முன்பாக நிற்கும் போது, தான் அழிக்கத் தேடின விசுவாசத்திற்காகப் பல ஆண்டுகள் வெற்றிகரமாக ஊழியம் செய்து முடித்து விட்டார். மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டு நாடுகள் பல சுற்றியும் வந்து, தன்னை அழைத்த கிறிஸ்துவுக்காக மிக அதிகமாகவே செய்து முடித்து விட்டார். ஆயினும், அந்தத் தரிசனத்தின் அனல் அவர் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதன் தாக்கம் மனதை விட்டு அகலவில்லை. வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் அதைக் குறித்துப் பேசிக்கொண்டேயிருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்தும், தான் எப்படிக் கிறிஸ்தவனாக மாறினேன் என்பது குறித்தும் அவருக்கு மிக உயர்ந்த எண்ணம் எப்பொழுதும் இருந்திருக்கிறதென்பதையே இது காட்டுகிறது. ஆகவே தான், இது குறித்துப் பெருமையாக எங்கு வேண்டுமானாலும், யாரிடத்தில் வேண்டுமானாலும் பேசிக் கொண்டேயிருக்கிறார்.

பொதுவாக தரிசனம் என்றாலே காட்சிதான். பவுலடியார், அகிரிப்பா ராஜாவிடம், தான் கண்ட தரிசனத்தைக் குறித்துச் சொல்லும் போது, *அந்த தரிசனத்தில் என்ன காட்டப்பட்டது அல்லது தான் என்ன கண்டேன் என்பதற்கு முக்கியத்துவம் தராமல், தனக்கு என்ன சொல்லப்பட்டது என்பதற்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார்.* நன்றாகக் கவனித்தால், அப்பொழுது அவருக்குக்

கிடைத்த தனிப்பட்ட அனுபவங்களைக் குறித்து வாயே திறக்காமல், இயேசுவுடன் நடந்த உரையாடலுக்கே, அவரின் வார்த்தைகளுக்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். ஆம், தான் தரையில் விழுந்தது பற்றியோ, மற்றவர்கள் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றது பற்றியோ, மூன்று நாள் புசியாமலும், குடியாமலும் இருந்தது பற்றியோ மனிதர் ஒன்றுமே பேசவில்லை. மாறாக, தான் யாரிடத்தில் பேசுகிறோம், அவருடைய ஆன்மீகத் தேவை என்ன? அவருடைய இரட்சிப்புக்கு எது அவசியம் என்பதைத் தெரிந்துகொண்டு அவைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பேசியுள்ளார். இது இன்றைய தரிசனக்காரர்களின் செயலுக்கு நேர் விரோதமாக இருக்கிறது. நான் சொல்வது சரிதானே.

ஆகையால், தேவனுடைய மகத்தான ஊழியனாகிய பவுல், அந்த தரிசனத்தின் மூலம் எதையெல்லாம் கண்டுகொண்டான் என்பதைத் தெரிந்து கொள்வது நமக்குப் பிரயோஜனமாயிருக்குமாதலால் அவை என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I. தன்னுடைய அறியாமையையும், தான் பாவியென்பதையும் கண்டு கொண்டான்.

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், மெத்தப்படித்த பவுல், மோசேயின் பிரமாணத்தின்படி நீதிமானாக வாழ்ந்த பவுல், தான் அறிய வேண்டியதை அறிய வேண்டிய அளவு அறியாதவன் என்பதையும், தான் ஒரு பாவி என்பதையும் கண்டு கொண்டான் என்பது.

பொதுவாகவே படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு உண்டு. மற்றவர்களுக்கும் அவர்கள் அறிவு பெருத்தவர்கள், ஆகவே, அவர்கள் செய்வ தெல்லாம் சரியாயிருக்கும் என்று எண்ணத் தோன்றும். *படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பும் படித்தவர்கள் எப்பொழுதுமே சரியாகவே செய்வார்கள் என்ற எண்ணமும் சரியாக இருக்குமானால், படிப்பாளியாகவும், நியாயப் பிரமாணத்தின்படி நீதிமானாகவும் வாழ்ந்த பவுல், பரமதரிசனத்துக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டும்?* தனக்குத் தெரிந்தது தான் சரி என்றும், தன்னுடைய பக்திதான் நீதியானது என்றும் சொல்லி பரம தரிசனத்தை அலட்சியம் செய்திருக்கலாமே! அவர் அப்படிச் செய்யாமல் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார் என்று நமக்குத் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், நமக்கு ஓர் உண்மை இங்கே பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. அது, தேவனுடைய திட்டத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உலக அறிவு போதுமானதாக இல்லையென்பது.

ஆகையால், அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஞானத்தின்படி எல்லாம் அறிந்தவர்களென்ற நினைப்பையும், நமக்குத் தெரிந்தவை களின்படி நான் நீதிமான், பக்திமான் என்ற நினைப்பையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அப்போஸ்தலன் பவுல் போல், இயேசுவானவர் எனக்கு என்ன சொல்லியிருக்கிறார், என்னிடத்தில் இப்பொழுது என்ன எதிர்பார்க்கிறார், நான் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன என்று பார்த்து, அதின்படி செய்யத் தயாராயிருக்க வேண்டும். எவ்விதத்திலும் குறைவற்றவனாக வாழ்ந்த பவுலடியாரே, தன் அறியாமையை உணர்ந்து, தான் பாவியென்பதை ஒத்துக்கொண்டு அவருக்குத் தன்னை உடனடி யாக ஒப்புக்கொடுத்திருக்கும்போது, நாம் எவ்வளவு சீக்கிரம் அதைச் செய்ய வேண்டுமென்பதை எண்ணிப் பார்த்துச் செய்ய வேண்டியதைச் சீக்கிரம் செய்வோம்.

**II தனக்குப் போதித்தவர்கள் தவறு என்பதைக் கண்டு கொண்டான்.**

பவுலடியாரின் பரமதரிசனத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்கின்ற இரண்டாம் பாடம், அவன் தனக்குப் போதித்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொண்டான் என்பது.

கமாலியேல் அந்நாளில் புகழ்பெற்ற ஒரு நியாயசாஸ்திரி. இவன், மகாகீர்த்தி பெற்ற வேத சாஸ்திரியாகிய “இல்லேல்” என்பவனுடைய பேரன். தங்களுடைய ஞானத்திற்கு மூன்று தலைமுறையாகப் பெயர் பெற்ற குடும்பம் இந்தக் குடும்பம். இவன் பாதம் அமர்ந்து பாடம் கற்பது அந்நாளில் அவ்வளவு சுலபமாய் கிடைக்கும் ஒரு சிலாக்கியமல்ல. ஆனாலும், அந்தப்பாக்கியம் நம்முடைய பவுலுக்குக் கிடைத்தது. தனக்குக் கிடைத்த அந்த சிலாக்கியம் பற்றி பவுலடியாரே என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள். “ *நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப் பட்டேன்” என்று* (அப். 22:3).

புகழ்பெற்ற ஓர் ஆசானாலே, மிகத் திட்டமாகப் போதிக்கப்பட்ட பவுல், ஏன், அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தார்? என்ன காரணம் சிந்தியுங்கள். தனக்குப் போதித்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை அன்றைய தினம் அவன் திட்டமாகக் கண்டுகொண்டான். ஆகவே தான் கீழ்ப்படிந்துள்ளான்.

இதை வாசிக்கும் அருமையானவர்களே, நாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்பது புரிகிறதா? எங்க பாதர், எங்க ரெவரெண்ட், எங்க பாஸ்டர், எங்க பிரதர் நன்றாகப் பிரசங்கம் பண்ணுவார், எல்லா வசனங்களையும் அப்படியே எடுத்துச் சொல்வார் என்று சொல்லி, மனிதர்களுக்கு மாமரியாதை கொடுத்து அவர்களுக்குப் பின்னால் செம்மறியாட்டுக் கூட்டங்கள் போல் அநேகர் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர், எங்களுக்குப் போதிக்க வேண்டிய அனைத்தும் போதிக்கப்பட்டிருக் கிறது, இனி எதுவும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று தலைக்கனத்தோடு சொல்லிக்கொள்கிறார்கள். தயவு செய்து இங்கே கவனியுங்கள். அறிவு பெருத்த கமாலியேலே, போதிக்க வேண்டியவைகளைப் போதிக்கத் தவறியிருக்கும் போது, நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றச்சாட்டப்படாதவன் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பவுலடியாரே, தான் கற்க வேண்டியவைகளைக் கற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கும் போது, *நமக்குப் போதிக்கிறவர்களின் தகுதியும், நம்முடைய நிலையும் எம்மாத்திரம்* என்று தயவு செய்து எண்ணிப்பாருங்கள்!

“ *அவருக்குச் செவிகொடுங்கள்* ” என்று (மத். 17:5) மறுரூப மலைக் காட்சியின் போது மேகத்திலிருந்து வந்த சத்தம் சொல்லுகிறபடியால், நாம் எந்த ஒரு மனிதனுக்கும், மனிதர்களுடைய உபதேசங்களுக்கும் செவி கொடுக்காமல் இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு மாத்திரம் செவி கொடுத்து அதன்படி வாழ வேண்டும்.

**III பாரம்பரியம் தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதைக் கண்டு கொண்டான்.**

பவுலடியாரின் பரமதரிசனத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்ற இன்னு மொரு பாடம். முன்னோர்களுடைய பாரம்பரியம் தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை அத்தரிசனத்தின் மூலம் கண்டு கொண்டான் என்பது.

அப்போஸ்தலன் பவுல், தான் இயேசுவால் சந்திக்கப்பட்டு மனமாற்றப் பட்டதைக் குறித்து, பின்னாளில் "*புத்தியில்லாத கலாத்தியருக்குச்*" சொல்லும் போது, "*அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனைபண்ணாமல் அதற்குக் கீழ்ப்படிந்தேன்*" என்று கூறுகிறார் (கலா. 1:16). அதாவது, இதுதான் இரட்சிப்புக்கான தேவதிட்டம், இதுதான் கிறிஸ்துவின் உபதேசம் என்று சொல்லப்பட்டபோது, அவன் தனது முன்னோர்கள் பற்றியோ, பாரம்பரியம் பற்றியோ, தன்னுடைய முந்தின நிலை பற்றியோ, தகுதி பற்றியோ கவலைப்படாமல், தனக்கு போதிக்கப்பட்டவை களுக்குத் தன்னை ஒப்புக் கொடுத்துள்ளான்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் பவுலடியார், தனக்கு லாபமாயிருந்த வைகள் எவையென்று பெருமையோடு ஒரு ப்ட்டியல் கொடுக்கிறார். அதில், தன்னை "*நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்*" என்று மார்தட்டிச் சொல்லுகிறார். அத்தோடு இந்தப் பரிசேயர் யார் என்பதற்கு அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக உத்தரவு சொல்லும்போது, அதற்கு விளக்கமும் கொடுக்கிறார். "*நம்முடைய மார்க்கத்தி லுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்த பரிசேயன்* என்று (அப். 26:5). மோசேயின் பிரமாணத்திலுள்ளவைகளை அட்சரம் பிசகாமல் கடைப்பிடிப்பவர்கள் தான் பரிசேயர்கள். இன்னும் முன்னோர்களுடைய பாரம் பரியத்தைக் கடைப்பிடிப்பதிலும் மிகத் தீவிரமானவர்கள். இதினிமித்தம் நமதாண்டவர் இவர்களை அடிக்கடி கடுமையாகச் சாடியிருக்கிறார்" (மத். 5:3,9; மாற்கு 7:13) பாரம்பரியம் என்பது, "*முன்னோர்களிடமிருந்து தலை தலைமுறையாகப் பெறப்படும் நடைமுறைக் கோட்பாடுகள்*". *அவை தேவ வெளிப்பாட்டினால் பெறப் படுபவை அல்ல.* அவைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வேத போதனை எதுவுமில்லை. ஆனால், அவைகளுக்கு மோசேயின் பிராமாணத்துக்கு இணையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மதிக்கப்பட்டது. மோசேயின் பிரமாணம் "*வரி வேதம்*" என்றும், வாய்வழியாகப் பெறப்பட்ட பாரம்பரியங்கள் "*ஒலி வேதம்*" என்றும் அவர்களால் அழைக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டது.

அருமையான தேவப்பிள்ளையே, பரிசுத்த வேதாகமத்துக்குச் சம்பந்த மில்லாத பாரம்பரியக் காரியங்களைக் கடைப்பிடிப்பதில் நம்முடைய நிலை எப்படி உள்ளது? பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பது தவறு என்றும், அது தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்றும், பவுல் அந்தத் தரிசனத்தின் போதும், அதைத் தொடர்ந்து சொல்லப்பட்ட வார்த்தைகளின் மூலமும் கண்டு கொண்டது உங்களுக்கு விளங்குகிறதா? அப்படியானால் நாம் ஏன் இன்னும் அவைகளை உடும்புப் பிடியாய்ப் பிடித்து, தேவ கட்டளையை அவமதிக்க வேண்டும்? சிந்தியுங்கள். பாரம்பரியம் மட்டுமல்ல, தேவனுக்கு விரோதமான காரியங்கள் எதுவாக இருந் தாலும் அவைகளுக்கு ஒரு முடிவு கட்டுவோம். அப்போஸ்தலன் பவுல் இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தது போல, நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவோம். பவுல் பரமதரிசனத்தின் மூலம் கண்டு கொண்டவைகளை நாமும் நம்முடைய வாழ்வில் கண்டு, பவுலைப் போல் பரம கானானுக்குப் பங்காளிகளாக மாறுவோம். ஆமென்.

# உள்ளடக்கம்

நிறுவன ஆசிரியர் உரை .... 1

நிர்வாக ஆசிரியர் உரை .... 5

சிறப்பு ஆசிரியர் உரை .... 11

## தேவன்

தெய்வீக துக்கம் .....14

ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் மாபெரும் போதகர் மட்டும் தானா? .....16

## சாட்சியங்கள்

தேவன் இருக்கிறார் .....19

தேவ பிரசன்னத்தின் நீடித்த நிலை .....20

## வாழ்வதற்கான உபதேசங்கள்

நம் எதிர்கால சரீரம் .....22

விசுவாசமுள்ள ஜெபம் .....24

பரிசுத்தமாக்குதல் என்பதன் பொருள் என்ன? .....27

மீனவனாகிய பேதுரு .....30

சுயாதீனப் பிரமாணம் .....33

## தேவனுடைய வார்த்தை

நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்போம் .....35

வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகளா? .....37

வசனத்தைப் பிரசங்கித்தல் .....39

## சபை

பிரிவினையற்ற கிறிஸ்தவம் .....42

கிறிஸ்துவை சேர்ந்தவனா? .....45

தேவனுடைய ஜனங்களை விவரித்தல்.....48

உண்மைக் கிறிஸ்தவம் பிளவுபடாதது .....51

தம்முடைய ஜனங்களுக்கான நோக்கங்கள் .....55

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

இவருக்குச் செவிகொடுங்கள் .....57

நியாயாதிபதி .....60

அகந்தையின் விலை .....64

ஜெயங்கொள்ளுகிறவனாக கிறிஸ்தவன் .....67

திருப்தி .....69

தேவனுடைய சொந்த ஜனம் .....71

தேவனிடத்திலிருந்து வரும் ஈவு .....73

தூக்கு நூலின்படி கட்டுதல் .....75


## கிறிஸ்தவ குடும்பம்


குழந்தைகளை வளர்ப்பது எப்படி? .....77


## செயலில் கிறிஸ்தவம்


ராஜ்யத்தின் விதையைத்தான் விதைக்கிறீர்களா? .....79

இழந்து போனவர்களுக்குப் போதிக்கஎளிய முறை .....80


## இரட்சிப்பு


சவாலாக எடுத்துக்கொள்ளுங்கள் ..... 82

வாழ்க்கையின் மேன்மை ..... 84

நான் பாவம் செய்தேன் ..... 87

ஐயோ என் ஆண்டவனே, இது இரவலாக வாங்கப்பட்டதே ..... 89


## வசனப்பகுதி பாடங்கள்


மேகம் போன்ற திரளான சாட்சிகள் .... 92

ஆவிக்குரிய தன்மையை விளக்குதல்.... 95


## வேதாகமக் கதாப்பாத்திரங்கள்


அநேக காலேப்கள் தேவை .... 98

மோசேயின் வாழ்க்கைப் பற்றி விரிவான பார்வை .... 100

யோனா .... 103

கொர்நேலியு .... 107


## வேதாகமக் கேள்விகள்


பாவங்களை அறிக்கையிடுதல் .... 108

தர்மமும், கொடுத்தலும் .... 111

**சிறப்பு ஆசிரியர் உரை**

# நாம் எதைப் பிரசங்கிக்க வேண்டும்?

## What Should We Preach

*Byron Nichols*

நாம் தேவனுக்குச் சொந்தமானவர்களாகவும், அவருடைய குமாரனுடைய இரத்தத்தாலே வாங்கப்பட்டவர்களாகவும் இருக்கிறபடியால் நம் பிரசங்கத்தாலும், போதனையாலும் அவரைப் பிரியப்படுத்த விரும்புவோம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், இங்கே கேள்வியென்னவென்றால், நாம் எதைப் பிரசங்கிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதே.

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முயற்சிக்கும் போது மிக எளிமையாகப் பதிலளிக்கிறேன் என்கிற குற்ற உணர்வுள்ளவனாக இருக்க நான் விரும்பவில்லை. அதேவேளையில், மிக முக்கியமான இந்தக் கேள்விக்கு மிக எளிமையான பதில் இருக்கிறதென்று நான் நம்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக் கேள்விக்கான பதிலைத் தருகிறார். *நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது; சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு; ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்* (2 தீமோத். 4:1-4).

நம் கேள்விக்கான பதில் இங்கே இருக்கிறது. திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு என்று. இங்கே உடனடியாக இன்னொரு கேள்வி எழும்புகிறது. அது, ஏன் திருவசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்பது. மூன்று நல்ல காரணங்கள் இதற்காக நம் மனதில் தோன்றுகின்றன (1) தேவன் அப்படி செய்யச் சொல்லியிருக்கிறார். நாம் பிரசங்கிப்பதற்கு அது போதுமானது தான். மற்றுமொரு நல்ல காரணம் (2) தேவ வார்த்தைகள் தேவ ஆவியினால் ஏவப்பட்டிருக்கிறது (2 தீமோ. 3:16). இது கர்த்தருடைய மனதை நமக்கு ஓரளவு வெளிப்படுத்துகிறது. நாம் இங்கே குறிப்பிடும் மற்றுமொரு காரணம் (3) கர்த்தருடைய வார்த்தைகள் நம் பிரயோஜனத்துக்கானது (2 தீமோ 3:17). தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் நம்மைத் தேறினவர்களாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாகவும் இருக்கும்படியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய வார்த்தையின் ஜனங்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை உண்மையாகப் பிரசங்கிக்கும் பிரசங்கி யார்கள் தங்கள் வார்த்தைகளைக் கேட்பவர்களுக்கு நிதானமாகப் பகுத்துப் போதிக்க உதவுகிறார்கள் (2 தீமோ. 2:15). நாம் அவருக்குக் கனமானவர்களாய் இருக்கத்தக்கதாக நம் வாழ்க்கையை வனையவும், உருவாக்கவும் தேவனுடைய வார்த்தைக்கு வல்லமை உண்டு. தேவனுடைய வார்த்தை நம் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது (யாக். 1:21). தேவனுடைய வார்த்தை நமக்குப் போதிக்கிறபடி, அதற்கு நாம் நம்மை ஒப்புக் கொடுத்துக் கீழ்ப்படியும் போது அது நடக்கிறது.

நாம் கேட்க வேண்டியது தேவனுடைய வார்த்தையைத்தான். அந்த வார்த்தை நம் வாழ்க்கையை ஆளுகை செய்ய நாம் அனுமதிக்கக் கற்றுக் கொள்ளும்போது, மக்களை ஈர்க்கவும், பிரியப்படுத்தவும், சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளும் மனிதர்களுடைய அலங்கார வசனிப்பான வார்த்தைகளைக் கேட்பதற்குப் பதிலாக, உண்மையான தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு வாழ நாம் ஆசைப்படுவோம்.

தேவனை நேசிக்கும் ஒருவர், தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டிராத பிரசங்கங்களைக் கேட்பதை ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? அதிலும் குறிப்பாக கடைசி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும்படியாகத் தம்முடைய வார்த்தைகளே அடிப்படையாக அமையும் என்று இயேசு வலியுறுத்தும் போது, (யோவான் 12:48) தேவனை நேசிக்கும் ஒருவர் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? இயேசு சொன்னதன் முக்கியத்துவத்தைப் பவுல் நிச்சயமாகவே புரிந்திருக்கிறார். கலாத்தியர் முதலாம் அதிகாரத்தில், தான் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷம் பிரசங்கிப்பதைக் குறித்து கடுமையாக எச்சரிக்கிறார். அவர் எதைப் பற்றி பிரசங்கித்தார் என்பதைத் தீர்மானிப்பது கடினமான காரியமல்ல. அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் புதிய ஏற்பாட்டில் பவுல் எழுதிய நிருபங்களை வாசித்து நாம் புரிந்து கொள்ள முடியும். அவர் உண்மையாகவே தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை மட்டும் பிரசங்கித்தார். ஆகவே தான், பவுல் எபேசு பட்டணத்துச் சபை மூப்பர்களிடம் இவ்விதமாக நேர்மையுடன் சொல்ல முடிந்தது. *தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே எல்லாருடைய இரத்தப் பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத் தினம் சாட்சிகளாக வைக்கிறேன்* (அப். 20:26,27).

சிலர் இதை ஆட்சேபித்து தேவ வார்த்தைகளை வலியுறுத்துகிறவர்கள் கடினமானவர்களாக, சகிப்புத் தன்மையில்லாதவர்களாக, அக்கறையில்லாத வர்களாக, அன்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மக்களின் மனதைப் புண்படுத்துவதற்கான ஆயுதமாக தேவ வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்துபவர்களுக்கு முற்றிலுமாக மன்னிப்பே இல்லை. ஆனால், நண்பர்களே தேவனுடைய வார்த்தையைத் தயையுடனும், இரக்கத்துடனும், மென்மையுடனும்,

அன்புடனும் பிரசங்கிப்பது சாத்தியமே. இது உண்மையென்பதை நான் அறிந்திருக்கிறேன். அப். 20 ஆம் அதிகாரத்திற்குத் திரும்பச் சென்று 36,38 வசனங்களைக் கவனியுங்கள். பவுல் யாரிடம் தேவனுடைய ஆலோசனையை அறிவித்தாரோ அவர்கள் மிகவும் அழுது, பவுலின் முகத்தை இனிப் பார்க்க மாட்டோமென்று அவர் சொன்ன வார்த்தையினிமித்தம் அதிகமாகத் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவரை முத்தஞ்செய்து, கப்பல் வரைக்கும் அவருடனே கூடப் போனார்கள். இங்கே பவுல் தன் பிரசங்கத்தின் மூலமாகவும், வாழ்க்கையின் மூலமாகவும் மிக ஆழமான முறையில் அவர்களிடத்தில் அக்கறை கொண்டிருந்ததை வெளிப்படுத்தினார். அதே உணர்வுகள் இப்போது அங்கிருந்த கிறிஸ்தவர்களால் அவரிடம் காட்டப்பட்டது. திருவசனத்தை ஒருவர் தைரியமாகப் பிரசங்கித்து விட்டு தயை இல்லாமலும், அன்பில்லாமலும், அக்கறையில்லாமலும் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாறாக, தேவனுடைய வார்த்தையை உண்மையாக பிரசங்கிப்பதென்பது, உண்மையில், அக்கறை, அன்பு போன்றவற்றை உள்ளடக்கியதாகவே உள்ளது.

கிறிஸ்தவர்களே! தேவனுடைய வார்த்தையைப் படியுங்கள். பிரசங்கிப்பதில் உண்மையாயிருந்து அதற்காக நிற்கும் பிரசங்கியார்களை, மூப்பர்களைப் பாராட்டுங்கள். பிரசங்கிகளே, திருவசனத்தை தைரியத்தோடும், உறுதியோடும், கனிவோடும், அதே வேளையில் அன்போடும், போதிக்கத்தக்க அளவுக்கு கர்த்தரிடத்திலும், நீங்கள் யாருக்கு போதிக்கிறீர்களோ அவர்களிடத்திலும் அன்பு கூருங்கள் (எபே. 4:15). மூப்பர்களே, உங்கள் சபையில் திருவசனம் தவிர வேறெதுவும் பிரசங்கிக்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்துங்கள். உங்கள் சபையில் உள்ளவர்கள் உறுதியான வேதாகம உபதேசங்களைத் தான் கேட்கிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

"நம்மில் அநேகருக்கு மிகப்பெரிய ஆபத்து, நம் இலக்கு உயர்வானதாக இருந்து நாம் அதை அடையத் தவறுகிறோம் என்பதல்ல. மாறாக, நம் இலக்கு தாழ்வாக இருந்து அதில் போய் முடிவதில் தான் மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது."

# தெய்வீக துக்கம்

## Divine Grief

*Frank Chesser*

நம் பிதாவாகிய தேவன், தாம் உண்டாக்கின மனிதனிடத்தில் தன் உணர்வுகளை வெளிப்படுத்தாத, பந்த பாசமில்லாத ஒரு மனிதனிடமிருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொள்ளுகிற தெய்வம் அல்ல. அவர் தமக்கும், தம் பிள்ளைகளுக்கும் இணைப்புப் பாலமாகத் திகழும் தொப்புள் கொடி உறவைத் துண்டித்துக் கொண்டு, பரலோகத்தில் தம்மை அவர் தனிமைப்படுத்திக் கொள்ளவில்லை. மனிதன் மீது அவர் கொண்டுள்ள உணர்வுகளின் ஆழம் அளவிட முடியாதது.

எனவே தான், இயேசு கண்ணீர் விட்டார் (யோவா 11:35). பரிசேயர்களின் அவிசுவாசத்தைக் கண்டு கலங்கினார், அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டார் (மாற்கு 3:5). இயேசு நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடியவராயிருக்கிறார் (எபி. 4:15). பரிசுத்த ஆவியைத் துக்கப் படுத்தாதிருங்கள் என்று பவுல் கிறிஸ்தவர்களுக்கு புத்திமதி சொல்கிறார் (எபே. 4:30). மனித கணக்கின்படி சொல்ல வேண்டுமானால், தேவனுடைய கண்களில் கண்ணீர் இருக்கிறது.

ஓசியா தேவனுடைய அழைப்பின் பேரில் அவருடைய இருதயத்தில் பிரவேசித்தார். ஓசியா ஒரு சோரஸ்திரீயை மனைவியாக சேர்த்துக் கொள்ளும்படி தேவனால் கட்டளையிடப்பட்டார் (ஓசியா 1:2) அந்த ஸ்திரீயின் மடியில் வேசித்தனத்தின் விதை முளைக்கும் நிலையில் இருந்தது. காலப் போக்கில் அது துளிர்த்து வளர்ந்தது. கோமேர் ஓசியாவையும் அவளுடைய மூன்று பிள்ளைகளையும் விட்டுவிட்டு, தன்னுடைய இளமையையும், அழகையும் பாவத்தினிமித்தம் பறிகொடுத்து ஓர் அடிமையின் விலைக்கொப்பத் தன்னைத் தாழ்த்திக் கொண்டாள்.

ஓசியா கோமேரை ஆழமாக நேசித்தான். அவன் ஒரு மன்னிக்கும் கணவனாகவும், பக்தியுள்ள தகப்பனாகவும் இருந்திருக்கிறான். ஆயினும், கோமேர் ஓசியாவின் அன்பை நிராகரித்து அவருடைய இருதயத்துக்கு துக்கத்தை ஏற்படுத்தினாள். நிச்சயமாகவே, தீர்க்கதரிசியின் அலறல் அந்த நள்ளிரவின் அமைதியை அலைக்கழித்து இரவைக் கண்ணீரால் நனைத்தது.

தேவன் இஸ்ரவேலை நேசித்தார். அவள் இரத்தத்தில் கிடப்பதைத் தேவன் கண்டு அவளைக் கழுவி தெய்வீக ஆசீர்வாதத்தால் உடுத்துவித்தார். அவள் பருவமடைந்தபோது,



தேவன் அவளைத் தம் மனைவியாக ஏற்றுக்கொண்டார் (எசே. 16:1-14) இஸ்ரவேலுக்கான தேவனுடைய அன்பு ஆழமானது, அளவிட முடியாதது. எல்லா மனிதனிடத்திலும் அவருடைய அன்பு அப்படித்தான் இருக்கிறது. இஸ்ரவேல் தேவனுடைய கண்ணின் மணியைப் போலிருந்தார்கள் (உபா. 32:10).

இஸ்ரவேல் தேவனுடைய அன்பை ஏற்றுக் கொள்ளவில்லை. மிகுந்த கர்வத்துடன் என் நேசர்களைப் பின்பற்றுவேன் (ஓசியா 2:5) என்று அவள் சொன்னாள். அவள் தேசத்திலுள்ள பாகால்களை வணங்கி தேவனுடைய இருதயத்தை உடைத்தாள். அவளுடைய மனப்பான்மை யூதாவின் மனப்பான்மையைப் போலிருந்தது. தேவன் யூதாவை தன் முதல் அன்புக்குத் திரும்பும்படி மன்றாடியபோது, அந்நியரை நேசிக்கிறேன்; அவர்கள் பிறகே போவேன் என்று பிடிவாதமாய் இருந்தாள் (எரே. 2:25).

எல்லாப் பாவமும் இறுதியில் தேவனுக்கு எதிரானது தான். தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன் (சங். 51:4) என்று தாவீது சொன்ன போது இதை உணர்ந்து கொண்டார். அதேபோல் யோசேப்பு போத்திபரின் மனைவி பாவம் செய்ய அழைத்தபோது நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான் (ஆதி. 39:9). தேவனுடைய கண்களில் உங்கள் செயலால் மேலும் கண்ணீரை வரவழைப்பீர்களா?

**ஒன்றுமில்லாமையிலிருந்து...**

- ☆ தேவ ஆவியானவர் அசைவாடியபோது
- ☆ மிகச்சிறிய துரும்பிலிருந்து மிகப் பெரிய நட்சத்திரக் கூட்டமும்
- ☆ முடிவில்லாத விண்வெளியும், காலமும் உருவாயின
- ☆ ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாமே வந்தது
- ☆ ஆதியிலே தேவன் இருந்தார், இன்றும் இருக்கிறார்.

Brunice C. Cole, Jr.



# ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகர் மட்டும் தானா?

## *Only a Great Moral Teacher?*

***Tom Kelton***

இந்த உலகம் முன்னொரு போதும் கண்டிராத அளவில் இயேசு மிக முக்கியமான நபர். இந்தக் கலிலேயப் போதகர் மற்றெந்த நபரையும் விட மனித இனத்தின் மீது அதிக மான தாக்கத்தை ஏற்படுத்தியவர்.

அவர் ஒழுக்க நெறிகளைப் போதித்த மிகப்பெரிய போதகராயிருந்தார். இப்போதனையில் அவர் தனக்கென்று ஒரு பாணியை வைத்திருந்தார். அவர் மிகுந்த அதிகாரத்துடன் பேசினார் : *இப்படிச் சொல்லப்பட்டதை நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்,* ஆனால், *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்* ....மேலும் அவர் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளத்தக்கதாக மிக எளிமையாகப் பேசினார். அவர் குறிப்பிடத்தக்க முறையில் ஆழமாகப் பேசினார்: *உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்* (லூக். 6:27). அவருடைய போதனை குறிப்பாகவும், அன்றாட வாழ்க்கைக்குச் சம்மந்தமுடையதாகவும் இருந்திருக்கிறது. நீயும் போய் அந்தபடியே செய் என்று நல்ல சமாரியன் உவமையின் முடிவில் இயேசு சொன்னார் (லூக். 10:37).

இயேசுவின் போதகத்தைப் பார்த்து மக்கள் ஆச்சரியப்பட்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஏனெனில், இயேசுவின் வார்த்தைகளை இறுகப் பிடித்துக் கொண்டு அவர் சென்ற இடமெல்லாம் சென்றதிலும் ஆச்சரியம் எதுவுமில்லை. அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும்

பேசினதில்லை என்றார்கள் (யோவான் 7:46). அவர்கள் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், இயேசுவைப் பற்றியும், அவருடைய போதனையைப் பற்றியும் சொல்லக் குறிப்பிடத்தக்க ஏதோ ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், அவர் மனித இனத்துக்கு உயரிய ஒழுக்க நெறிகளைப் போதித்தது மட்டுமல்லாமல் அவைகளை அவர் கைக்கொண்டிருந்தார். சத்துருக்களைச் சிநேகியுங்கள் என்று அவர் ஜனங்களுக்குப் போதித்தது மட்டுமல்லாமல் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்திருக்கிறார். அவர் தங்கள் சிநேகிதர்களுக்காக ஜனங்கள் ஜீவனைக் கொடுக்க வேண்டுமென்று அழைத்தது மட்டுமல்லாமல், உண்மையாகவே அதைச் செய்து காட்டினார். இதுதான் இயேசுவை எல்லா போதகர்களிடமிருந்து வேறுபடுத்திக் குறிப்பிடத்தக்க போதகராக ஆக்குகிறது. ஆனால், இயேசு ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகரை விட மேலானவர் என்று தன்னை அடையாளப்படுத்துகிறார். இயேசு தம்மால் இவைகளையெல்லாம் செய்ய முடியும் என்று ஆச்சரியமூட்டும் வகையில் சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தைகளைத் தெளிந்த புத்தியுள்ள எந்த மனுஷனுடைய வார்த்தைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது.

இயேசு தம்மால் ஜனங்களுடைய பாவங்களை மன்னிக்க முடியும் என்று சொன்னார்; மனிதர்களால் ஆராதிக்கப்பட தமக்கு உரிமை உண்டு. தேவனிடத்தில் செல்வதற்கு தாம் வழியை பிரதிநிதிப்படுத்துவதாகவும், தாம் தேவனுடைய சத்தியமாகவும், ஜீவனாக இருப்பதாகவும், தாம் இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்ததாகவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்ததாகவும், தாம் மரித்தோரிலிருந்து எழுந்தருளுவதாகவும், அந்த நியாயத்தீர்ப்பின் நாளில் மனித இனம் தம்மிடத்தில் கணக்கொப்புவிக்க வேண்டுமென்றும் இயேசு சொன்னார்.

நான்கு நற்செய்திப் புத்தகங்களும் இயேசு தாம் இயற்கைக்கு அப்பாற்பட்டுச் செய்வதாகச் சொல்லும் சம்பவங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. அச்சம்பவங்களெல்லாம் உண்மை தானா? உண்மையாக இருந்தால் அவர் ஒரு சாதாரண போதகரை விட மேலானவர். அவர் மாம்சத்தில் வெளிப்பட்டு, மனிதத் தன்மையை பகிர்ந்துகொண்டு, நமக்குத் தேவனை மெய்யாக்கிய தேவனுடைய குமாரனாயிருக்கிறார்.

அப்படியென்றால், இயேசு தம்மைப் பற்றி பொய் சொல்லுகிறாரா? அல்லது அவர் புத்திசுவாதீனம் இல்லாதவரா? அப்படியிருந்தால் அவர் ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் ஒரு மாபெரும் போதகராக எவ்விதத்திலும் இருக்க முடியாது.

மேற்சொல்லப்பட்டவைகளில் இயேசு என்னவாக இருக்கிறார்? நாம் அவருடைய அற்புதச் சம்பவங்களையும், போதனைகளையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது இரண்டையும் நிராகரிக்கலாம். ஆனால், அவர் தம்மைப் பற்றி போதித்தவைகளை நாம் விட்டுவிட்டால், ஒரு போதகராக அவரிடம் இருக்கும் நற்தன்மையையும் நாம் விட்டு விடுகிறோம் என்றே பொருள்படும். ❋

# புல்லெல்லாம் உலர்ந்துபோம்

வெறுங் கையைக் கொண்டு யாரால் இவ்வுலகத்தின் தண்ணீரை அளக்க முடியும்?
வானங்களை ஒரு நிமிட கால அளவில் யாரால் உண்டாக்க முடியும்?
இப்பூமியின் மண்ணின் அளவை யாரால் புரிந்து கொள்ள முடியும்?
விளையாட்டுப் போக்காக பர்வதங்களின் சுற்றளவை யாரால் அளக்க முடியும்?

வாழ்க்கையில் வீசும் புயலைக் கட்டுப்படுத்தும் அவரை யாரோடு ஒப்பிட முடியும்?
வானத்தின் நட்சத்திரங்களை எண்ணி
ஒவ்வொன்றாக பெயர் சொல்லி அழைப்பவரை
யாரோடு ஒப்பிட முடியும்?

ஓ! புல்லெல்லாம் உலர்ந்துபோம், பூவெல்லாம் உதிர்ந்துபோம்
ஆனால் கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்;
அவருடைய அஸ்திபாரங்கள் உறுதியாக நிற்கக்கூடியவைகள்!
நாம் அவருடைய பலன்கொடுக்கும் ஊழியக்காரர்களாக இருப்போம்

உண்மையுள்ளவர்களை அவர் சுத்தப்படுத்துகிறார் என்பதை அறிந்து செயல்படுவோம்,
அவர் உடைந்த இருதயங்களை சுகமாக்குகிறார், காயங்களைக் கட்டுகிறார்.
நாம் அவருடைய நாமத்தை என்றென்றும் துதித்து, மகிமைப்படுத்தி,
போற்றி, ஆராதிப்போம்;

இவைகளுக்குப் பாத்திரர் தேவனைத் தவிர வேறு யார்?
நம் ஈடு இணையற்ற கர்த்தரை நாம் துதிப்போம்.

# தேவன் இருக்கிறார்!

# God Is!

## *Flavil Nichols*

ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றுமே வருவதில்லை என்பது வெளிப் படையான ஓர் உண்மை. இந்த உண்மையான வாக்கியத்திற்கு அத்தாட்சி எதுவும் தேவையில்லை. ஒன்றுமே இல்லாத காலம் என்று ஒன்று இருந்திருக்கு மானால் ஒன்றுமே ஒருபோதும் இருந்திருக்காது. ஏதோ ஒன்று இருக்கிறது! ஆகவே, அந்த ஏதோ ஒன்று எப்போதுமே இருந்து வருகிறது!


செத்துப்போன, உயிரற்ற, வலிமையற்ற, விவேகமற்ற ஒன்று தான் அந்த ஏதோ ஒன்று என்றும் அது எப்போதும் இருந்து வருகிறது என்றும் நாத்தீகம் நம்மை நம்பச் செய்கிறது.

ஆயினும் இதற்கு மாறாக வேதாகமம், வேதாகமத்தின் தேவனாகிய யெகோவா தான் எப்போதும் இருந்து வருகிற அந்த ஏதோ ஒன்று என்றும், அவர் நித்தியமானவர் என்றும் போதிக்கிறது. தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். வேதாகமம் இவ்விதமாக அறிவிக்கிறது. *நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்* (சங். 90:5) *என்று. அவர் அநாதி தேவனா யிருக்கிறார்* (உபா. 33:27).

ஆம்! வேதாகமத்தின் தேவன் கடந்த காலத்திலிருந்து எப்படி நித்திய மானவராக இருந்து வருகிறாரோ அதுபோல் வருங்காலத்திலும் நித்தியமானவராக இருக்கிறார்! அவர் தம்மைப் பற்றி இவ்விதமாக அறிவிக்கிறார். நானே கர்த்தர், வேறொருவர் இல்லை, என்னைத் தவிர தேவன் இல்லை. இந்தக் காரணத்திற்காகத் தான் தேவன் இவ்விதமாகக் கட்டளையிட்டார். *உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று* (மத். 4:10).

எப்போதெல்லாம் ஆரம்பம் இருந்ததோ அங்கெல்லாம் தேவன் இருந்தார்! நாத்தீகம் சொல்வதற்கு மாறாக, ஆதியிலே தேவன்.... என்பதை விசுவாசிப்பது நியாயமானதாகும். தாமாகவே இருக்கின்ற சர்வஞானமுள்ள, சர்வ வல்லமையுள்ள, தேவன் *வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்* (ஆதி. 1:1).

இவர் தான் வேதாகமத்தின் தேவன், அவர் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து பாவிகளை மீட்கும்படி இந்தப் பூமிக்கு வருவதற்கு முன்பாகத் தம்மைப் பழைய ஏற்பாடு மூலமாக வெளிப்படுத்தினார். அதே தேவன் இன்றும் மனிதனிடத்திலும், இவ்வுலகில் உள்ள எல்லா சிருஷ்டியினிடத்திலும் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாகப் பேசுகிறார் (எபி. 1:1,2).



# தேவன் ?
# அவருடைய பிரசன்னத்தின் நீடித்த நிலை

## God?
## The Persistence of His Presence

*Betty Burton Choate*

**நான்** ஒரு மனிதன். நான் எவ்வளவு முக்கியமானவன்! என் முழு உலகத்திற்கும் நான்தான் மையமாக இருக்கிறேன். நான் ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் அதற்கு என்னோடு இருக்கும் உறவினடிப்படையிலும், அது எனக்கு எவ்வளவு முக்கியமானது என்னும் அடிப்படையிலும் வைத்துப் பார்க்கிறேன். நான் தான் உண்மை. என்னுடைய எண்ணங்களே உண்மை; என் சொந்த அனுபவங்களே உண்மை;

நான் ஒரு மனிதன் : நான் எவ்வளவு முக்கியமானவன்! எல்லாத் திசை களிலும் எனக்கு முன்பாகப் பரந்து விரிந்து கிடக்கும் பூமியைப் பார்க்கிறேன். மலைகளின் பிரமாண்டமான உயரங்களைப் பார்க்கிறேன். அத்தோடு ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கொண்ட கடலைப் பார்க்கிறேன். இருண்ட வானங்களை நான்

பார்க்கும் போது என் கண்களால் ஓரளவுக்குத்தான் பார்க்க முடிகிறது. என் பார்வைத் திறனுக்கு அப்பால் வான்வெளியின் விரிவை நான் உணர்கிறேன். என் முன்னால் இருக்கும் பிரமிப்பூட்டும் படைப்புகள் எல்லாவற்றோடும் என்னை ஒப்பிட்டுப் பார்க்கும்போது என் ஆத்துமா, இப்பிரபஞ்சத்தை உண்டாக்கி அதைத் தாங்கக்கூடிய ஒருவர் இருக்க வேண்டுமென்பதின் அவசியத்தை எனக்கு உணர்த்தியது. அப்போது என்னை அறியாமலேயே எனக்குள் இப்படி ஒரு கதறல் இருக்கிறது. *மனுஷனை நீர் நினைக்கிறதற்கும்; மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்* (சங். 8:4).

*சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவனிடத்தில் ஆழ்ந்த விசுவாசம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தேவன் இருப்பதை மறுப்பதை விட அவருக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறார்கள்.*

இன்னும் சில மனிதர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் பகை உணர்வுடனும், கடுமையாகவும் தேவன் இல்லையென்று அறிவித்து, அவருடைய நாமத்தைச் சபிக்கிறார்கள்.

ஆனால், கவனிக்கத்தக்க உண்மையென்னவென்றால், எந்த ஒரு ஆத்துமாவும் இதுவரை தேவனுடைய முகத்தைப் பார்த்திராவிட்டாலும், ஒவ்வொரு நாகரீகத்திலும், ஒவ்வொரு காலத்திலும், பூமியின் வரலாற்றின் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளிலும் அவர் வியாபித்திருக்கிறார். இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு ஆத்துமாவும் தேவன் இருக்கிறாரா என்ற கேள்வியை எதிர்கொண்டு அதற்கான பதிலைக் கொடுக்க வேண்டும். அந்த உண்மை தனக்குத்தானே ஆச்சரியத்தை அளிக்கிறது.

இதைச் சிந்தியுங்கள் : இன்று உலகில் வாழும் மற்றும் இவ்வுலகில் ஏற்கனவே வாழ்ந்து முடித்த கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் காணப்படும், காணப்பட்ட கலாச்சாரம், சவால்கள், வாய்ப்புகள், விருப்பங்கள், அபாயங்கள், பயங்கள் போன்றவைகள் இருந்தாலும், எல்லா மனிதர்களுக்குள்ளும் பொதுவாக இருக்கும் கேள்வி என்னவென்றால், தேவன் இருக்கிறாரா? என்பதே.

மனிதர்களுடைய மனதில் தேவனுடைய பிரசன்னம் பற்றிய நீங்காத நினைப்புதான், தேவன் உண்மையாயிருக்கிறார் என்பதற்கான அசைக்க முடியாத சாட்சியாயிருக்கிறது. தேவன் பழங்கால மூடநம்பிக்கையின் ஒரு கற்பனைப் பொருளாக இருந்திருந்தால், மனித இனமானது நீண்ட காலத்திற்கு முன்பாகவே அந்த மூட நம்பிக்கையை நகைப்புப் பொருளாக்கி, சபித்து வெளியேற்றியிருக்கும்.

ஆனால், அவர் ஒவ்வொரு இருதயத்தின் வாசலிலும் இருக்கிறார், அதிலிருந்து போக மறுக்கிறார். ஏனென்றால், அவர் இருப்பதன் உண்மையை நாமெல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார், ✻



# நம் எதிர்கால சரீரம்

# Our Future Body

*John Thiesen*

கிறிஸ்தவ விசுவாசமானது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்கிற மாபெரும் மைய நம்பிக்கையை அஸ்திபாரமாகக் கொண்டது. அதுதான் தேவன் நித்தியத்தில் வாக்களித்திருக்கிற எல்லா வருங்கால வாக்குத்தத்தங்களுக்கான நுழைவு வாயிலாக இருக்கிறது. இயேசு நமக்காக ஆயத்தம் செய்திருக்கிற வாசஸ்தலத்தை சுதந்தரிக்கப் பரலோகம் போவதற்கு முன்பாக, நாம் உயிர்த்தெழுதலைக் கடந்து போக வேண்டும்.

உயிர்த்தெழுதலின் நாளிலே கல்லறைகளிலிருந்து நாம் வெளியே வரும்போது நம் சரீரங்கள் எப்படிப்பட்டதாயிருக்கும்? உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையுடைய எல்லோருக்கும் இது ஆழ்ந்த விருப்பத்தையும், ஆவலையும் ஏற்படுத்தும் ஒரு காரியம்.

## கிறிஸ்துவின் சரீரத்தைப் போலிருக்கும்

நம்முடைய உயிர்த்தெழுந்த சரீரம் இப்போது இயேசு பரலோகத்தில் அணிந்திருக்கிற சரீரம் போன்றிருக்கும். யோவான் இவ்விதமாகச் சொன்னார். *ஆகிலும், அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்* (1 யோவான் 3:3). *பவுல் இவ்விதமாகச் சொல்கிறார், " நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் "* (பிலிப். 3:20,21).

ஆயினும், அது மாம்சத்தையும், இரத்தத்தையும் உடைய சரீரமாயிருக்காது. ஏனென்றால், பவுல், மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை என்று கூறியுள்ளார் (1 கொரி. 15:50). கல்லறையில் வைக்கப்பட்டிருக்கும் நம் அழிவுள்ள சரீரம் பூமிக்குரியவைகளால் உண்டாக்கப்படாத இடத்திற்கு பொருந்தும்படி மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். ஏனென்றால், " *நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்* " என்று பவுல் சொல்கிறார் (1 கொரி. 15:51).

## ஓர் ஆவிக்குரிய சரீரம்

" நாம் இப்போது தரித்திருக்கிற மாம்சம் மற்றும் இரத்தத்தினாலான சரீரத்திற்கு மாறாக நம்முடைய வருங்கால சரீரம் ஆவிக்குரியவைகளை உள்ளடக்கிய ஒன்றாயிருக்கும். *ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு*". (1 கொரி. 15:44).

மேலும், பவுல், இந்த ஆவிக்குரிய சரீரம் *அழிவில்லாதது, மகிமையானது, வல்லமையுள்ளது என்று விளக்குகிறார்.* (வசனம் 42,45,53).

யாராவது, இப்படிக் கேட்கலாம், " உயிர்த்தெழுதல் இருக்கும் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? இயேசு கல்லறையிலிருந்து உயிரோடெழுந்து நித்திய ஜீவனுக்குள் பிரவேசித்தது நமக்கு உத்தரவாதம் அளிக்கிறது". ஏனென்றால், " *அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்* " என்று (அப். 17:31) வாசிக்கிறோம். கல்லறையை இயேசு ஜெயித்ததை விட பெரிய அத்தாட்சி எதுவுமில்லை. இயேசுவின் வெற்றியினாலும் நம்மையும் அவர் எழுப்புவார் என்கிற அவருடைய உண்மையுள்ள வாக்குத்தத்தத்தினாலும், அவரை விசுவாசிப்பவர்கள் அவரை ஆகாயத்தில் சந்திக்கும்படி அழைக்கப்படும்போது, உயிர்த்தெழுதலின் புதிய சரீரம் நமக்கும் கிடைக்கும் என்கிற நிச்சயமும், நம்பிக்கையும் நமக்குண்டு. ❋

### "என் ஓட்டத்தை முடித்தேன் "

பந்தயத்திற்கான ஆயத்தங்களெல்லாம் முடிந்த பிறகு; வேகமாக ஓட வேண்டுமென்பதை நினைவில் கொள்.

"ஓட்ட வீரர்களே ஆயத்தமாகுங்கள் " என்று சத்தம் வரும்போது உங்கள் இருதயத் துடிப்பு அதிகரிக்கும்,

கைகள் நடுக்கமெடுக்கும் துப்பாக்கிச் சத்தம் கேட்கும்போது, ஓடத் தொடங்குங்கள்

ஒரு சுற்று முடிந்தவுடன், முடிந்து விட்டது என்ற உணர்வு ஏற்படும்

கடைசிச் சுற்றில் மற்றவர்கள் நெருங்கும் போது வேகமாகுங்கள் பயிற்சியாளர் சொன்னதை மனதிற்குக் கொண்டு வாருங்கள் இன்னுமொரு சுற்று இருக்கிறது,

அது கடினமானது. இங்கு தான் உங்கள் ஓட்டத்தைக் காட்ட வேண்டும்

கடினமான அந்தச் சுற்றை நீங்கள் முடிக்கும் போது களைத்துப்போன உங்கள் முகத்தில் புன்னகை இருக்கும்.

# விசுவாசமுள்ள ஜெபம்

## *Faithful Prayer*

### *P.C. Philemon Rajah*

ஜெபம் என்பது சுவாசம்; அது, நம் வாழ்வை மாற்றும் நன்மையான காரியம். மேலும், அது தேவனுக்குப் பிரியமானது. ஜெபத்திற்கும் விசுவாசத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இதனை நாம் மறந்து போய் விடக்கூடாது. ஜெபமானது விசுவாசத்தைச் சரியான வகையில் புரிந்துகொள்ளுதல் ஆகும். யாக். 2:17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்.

விசுவாசம் என்று வரும்போது நம் எல்லாருக்கும் தெரியும், ஒன்று உயிருள்ளது, மற்றொன்று செத்தது. கிரியை இல்லாத விசுவாசம் தன்னில் தானே செத்ததாயிருக்கும். நாம் எதைச் சொல்கிறோமோ (ஜெபிக்கிறோமோ) அதை விசுவாசிப்பதல்ல; மாறாக, எதை நாம் விசுவாசிக்கிறோமோ அதனை ஜெபமாகச் செய்ய வேண்டும். சில நேரங்களில் மிகவும் நம்பிக்கையோடே ஜெபிக்கிறோம். ஜெபம் செய்து முடித்த உடனே நம்பிக்கை காணாமல் போய்விடுகிறது. இதை யோசித்துப் பார்ப்போம். தேவன் நம்மிடம் எதை எதிர்பாக்கிறார்?.

ரோமர் 1:17 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிற படி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும், கலா. 3:11 நியாயப் பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற் கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும், கலா. 3:11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாயிருக்கிறதில்லை யென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. மற்றும் எபி. 10:38 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின் வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.

நீதிமான் உயிர்வாழ விசுவாசம் தேவை. விசுவாசம் உள்ள வரை நாம் உயிர் (கிறிஸ்தவராக) வாழ்கிறோம். நம்மிடம் விசுவாசம் குறையும் போது, நாம் (கிறிஸ்தவராக) சாகத் தொடங்குகிறோம் என்பதனை இவ்வசனம் அடையாளம் காட்டுகிறது.

நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோமல்லவா? விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டோமல்லவா? விசுவாசத்தினால் ஜெபிக்கிறோம் அல்லவா? நம்முடைய ஜெபம் என்பது விசுவாசத்தின் குரலாயிருக்கிறது. எதை நம்புகிறீர்களோ அதைச் சொல்லுங்கள். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு எல்லாரும் கேட்கிறார்கள் என்பதற்காக வேறொன்றை (விசுவாசியாததை) ஜெபியாதிருங்கள்.

பிறகு அது நடக்காத போது புலம்ப ஆரம்பித்துவிடுவோம். உண்மையை ஏற்றுக்கொள்ள, நமது விசுவாசத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேதாகமத்தைச் சார்ந்திருக்க வேண்டும். விசுவாசம் என்பது சுயத்தை மரிக்கச் செய்து தேவனுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுப்பதாகும்.

தேவன் ஆபிரகாமிற்கு ஒரு பிள்ளையைக் கொடுத்தார். பிறகு, அந்தப் பிள்ளையைப் பலி கொடுத்துவிடு என்றார். ஆபிரகாம் யாரிடமாவது சொன்னால் காரியம் வாய்க்காது என்று ஒருவரிடமும் சொல்லாமல், பிள்ளையைப் பலி கொடுக்கக் கூட்டிக்கொண்டு போய் வெட்டப்போனார். தேவன் கொடுத்ததை அவருக்குக் கொடுத்தார். அன்பான சகோதரனே! சகோதரியே! தேவன் உங்களுக்கென்று கொடுத்ததை நீங்கள் அவருக்கென்று கொடுக்க ஆயத்தமா? உங்கள் வேலையை, உங்கள் பிள்ளையை, உங்கள் பணத்தை, உங்கள் பதவியை என எல்லாவற்றையும் ஆண்டவருக்காக விட்டுவிட்டு, தேவன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை மாத்திரம் பிடித்துக் கொள்ளுங்கள். அதுதான் கிரியை செய்கிற விசுவாசம்.

உண்மையிலேயே விசுவாசமுள்ளவர்களாக இருப்போமானால், கர்த்தர் நிமித்தம் வேலை போனால் ஸ்தோத்திரம்! பணம், பதவி, அழகு போனாலும் ஸ்தோத்திரம்! வியாதி வந்தாலும் ஸ்தோத்திரம் என்று சொல்லுவோம். தேவனை நான் மிகவும் நம்பினேன் ஒன்றுமே நடக்கவில்லை என்று புலம்புவதல்ல வேதாகமத்தின் விசுவாசம். தேவனைப் பற்றிய நம்முடைய உண்மையான கருத்து, விசுவாசமுள்ள ஜெபமாக இருக்கிறது. ஜெபம் என்பது தேவனை நம்பக்கூடியதாயிருக்கிறது. உண்மையான விசுவாசம் என்பது நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் நாம் விரும்புகிற பதில் இருக்காது என்பதனை ஏற்றுக்கொள்ளும். பதில் கிடைக்காத வேலைகளிலும் தேவனை நம்புவதே விசுவாசம்.

யோபு 13:15 அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனாலும், என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்.

பரிசுத்தமான தேவனுக்காக நாம் எதையும் இழக்கும் தைரியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். விசுவாசமானது முரட்டுத்தனமாகவோ அல்லது சுயநலமானதாகவோ இருக்கக் கூடாது. அவரிடத்தில் கேளுங்கள்; அவரிடத்தில் கேட்க நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதைப் போல அவர் தருகிறதை மட்டும் பெற்றுக்கொள்ளும் கடமையும், உரிமையும் நமக்கு இருக்கிறது. ஜெபியுங்கள்! விசுவாசத்துடன் ஜெபியுங்கள்! இந்தப் பரிசுத்த வேதாகமத்தின் விசுவாசமுள்ள ஜெபத்திலே நாம் வளர தேவன் நமக்கு உதவி செய்வாராக. ❋

# கிறிஸ்துவின் சபை ஆராதனையில் நீங்கள் கலந்து கொள்ளச் செல்லும் போது எதை எதிர்பார்க்கலாம்.

❖ நீங்கள் எங்கள் இடத்திற்கு வரும்போது, எங்கள் மரியாதைக் குரிய விருந்தினர்களாக நீங்கள் இருப்பீர்கள். நாங்கள் உபதேச காரியங்களில் உங்களிலிருந்து வேறுபட்டாலும், உங்களிடம் அன்பாக, மரியாதையாக நடந்து கொள்ள முயற்சிப்போம்.

❖ எங்கள் ஆராதனை மிக எளிமையானது. வருகிறவர்கள் எல்லோருமே அந்த ஆராதனையில் பங்கெடுக்க முடியும். எங்கள் இசை எளிய பாடல்களை உள்ளடக்கியது, பாடல்களைப் பாடும் படியாக ஒவ்வொருவருக்கும் அழைப்புண்டு. நாங்கள் வாரந் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம். எங்கள் ஜெபங்கள் எல்லாம் தேவனிடத்தில் ஏறெடுக்கப்படும் ஊக்கமான வேண்டுகோளாயிருக்கிறது. பிரசங்கம் எல்லாம் கிறிஸ்துவையும், வேத வசனங்களையும் மையமாகக் கொண்டாலும் கூடி வந்திருக் கிறவர்களுக்குப் போதிக்கத்தக்கதாகவும், அவர்களை மேம்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆராதனைக்கு வருகை தருபவர்கள் பணத்தை நன்கொடையாகக் கொடுக்க வேண்டிய தில்லை.

❖ ஆராதனை முறைகள் உங்களை சங்கடப்படுத்தும் வகையில் திட்டமிடப்படாமல், தேவனைத் துதிக்கும் விதமாகவும், வருகின்ற எல்லோருக்கும் வேதாகமத்தைப் போதிக்கும் விதமாகவும் அமைந்திருக்கும். *தயவு செய்து எங்களோடு தேவனை ஆராதிக்கக் கலந்து கொள்ளுங்கள்.*

# பரிசுத்தமாக்குதல் என்பதன் பொருள் என்ன?

## *What Does Sanctify Mean?*

## *Glenn Colley*

பிரசங்கியாராகவும், வேதாகம ஆசிரியராகவும் இருந்து இப்புத்தகத்தின் வாசகராயிருப்பவர்களுக்கு, நான் சொல்கிற ஆலோசனை என்னவென்றால், பரிசுத்தமாக்குதல் என்கிற வார்த்தையை வைத்து நீங்கள் உபதேசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வார்த்தையை உள்ளடக்கிய வசனங்கள் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அநேகமுண்டு. இதன் நோக்கம், உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்களையும், உங்கள் வேத மாணாக்கர்களின் கிறிஸ்தவ வாழ்க்கையையும் அது வளமாக்குவதுதான்.

தேயர் என்பவர் இந்த வார்த்தைக்கு இவ்விதமாகப் பொருள் கொடுக்கிறார். (1) ஆழ்ந்த, கனத்திற்குரிய ஒன்றாக ஒத்துக்கொள்ளுதல், புனிதமாக்குதல்; (2) பரிசுத்தமில்லாத காரியங்களிலிருந்து பிரிந்து தேவனுக்கென்று அர்ப்பணித்துக் கொள்வது; (3) சுத்திகரித்தல் என்று இப்படி பல விளக்கங்கள் இருக்கின்றன.

### 1. பழைய ஏற்பாட்டில் பல்வேறுபட்ட காரியங்கள் பரிசுத்தமாக்கப்பட்டன.

இந்த வார்த்தை முதன் முதலாக வேதாகமத்தில் ஆதி. 2:3-ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் தாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். அதன் பொருள், அந்த நாள் ஆராதனைக்காகப் பிரித்தெடுக்கப்பட்டிருந்தது. கூடாரம் ஆசாரிய ஊழியத்திற்காகப் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தது (யாத். 29:43). ஆரோனும் அவனுடைய குமாரரும் ஊழியத்திற்கென்று பரிசுத்தமாக்கப்பட்டார்கள் (லேவி. 8:30) ஆசாரியர்கள் போதுமான அளவு தங்களைப் பரிசுத்தம் பண்ண வேண்டியதாயிருந்தது (2 நாளா 30:3); எரேமியா தான் பிறப்பதற்கு முன்பாகவே பரிசுத்தமாக்கப்பட்டு, ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாக கட்டளையிடப்பட்டிருந்தார் (எரே. 1:5).

### 2. சீஷர்கள் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்று இயேசு ஜெபித்தார்.

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17). இந்த ஒரு வசனமே இப்பாடத்தின் முக்கியத்துவத்தை நிரூபிக்கிறது. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட வேண்டுமென்று விரும்பினார். யோவான் 17-ம் அதிகாரத்தில்

உலகம் என்கிற வார்த்தை 18 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் பதினொரு முறை கிறிஸ்து இல்லாத அவிசுவாசிகளின் கூட்டத்தைத்தான் உலகம் என்கிற வார்த்தை குறிக்கிறது. கிறிஸ்துவுக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய சரீரத்தில் அங்கம் வகிக்கும்போது வாழ்க்கை முறையிலும், நம்பிக்கையிலும் உலகத்திலிருந்து நாம் பிரித்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்.

**3. சத்தியத்தினாலே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.**

*அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத் தானே பரிசுத்தமாக்குகிறேன் (யோவான் 17:19).*

**4. நாம் விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம்.**

*....அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக (அப். 26:18).*

**5. நாம் வேதாகம ஞானஸ்நானத்தினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம்.**

*தாம் அதைத் (சபையை) திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் (எபே. 5:20).*

**6. இயேசுவின் இரத்தத்தினாலே நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்**

*அந்தப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார் (எபி. 13:12).*

**7. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் பரலோகம் போவார்கள்**

*இப்பொழுதும் சகோதரரே நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்த மாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் (அப். 20:32).*

**8. பரிசுத்தமாக்கப்படுவது பாவத்தை விடுவதைக் கட்டாயமாக்குகிறது**

தேவனுடைய அங்கீகாரத்தை நாடும் அநேக மக்கள் உண்மையில் குறைந்த அளவு பரிசுத்தத்தைப் போதிக்கும் சபையையே தேடுகிறார்கள் என்பது துக்கமான ஒரு செய்தி. ஒரு மனிதனோ அல்லது மனுஷியோ கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டால், அவர்கள் உலகக் காரியங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறார்கள். ஒருவேளை, அவர்கள் உலகத்தன்மை உடையவர்களாக இருந்தால் அவர்கள் பரிசுத்தமாக்கப்படவில்லை என்றே பொருள் (1 கொரி. 6:9,10) வசனங்கள் இவ்விதமாகச் சொல்கின்றன. *அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும்,*

*வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.*

**9. நான் ஞானமுள்ளவனாயிருந்து, நீதியாக வாழ்ந்து பரிசுத்தமாக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டிருந்தால், நான் கிறிஸ்துவுக்குள் இருக்க முடிவு செய்திருக்கிறபடியால் அப்படி நடக்கும்.**

நம் வாழ்க்கை கிறிஸ்துவில் தாங்கப்படுகிறது. கிறிஸ்து நமக்கு ஜீவன். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். அவர் நம் எல்லாமுமாக இருக்கிறார். *எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்* (1 கொரி. 1:30,31). *கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்* (1 பேதுரு 3:15).


## பரலோக பிதாவே!
## இப்படியாக எங்களை நடத்தும்!

நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து,
கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்;
தரித்திரப்படுகிறதினால் திருடி,
என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும்,
என்படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.
(நீதி. 30:9)

# மீனவனாகிய பேதுரு

# Peter the Fisherman

***O.P. Baird***



சீமோன் பேதுருவும் அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவும் மீன் பிடிக்கிறவர்களாயிருந்தார்கள். செபேதேயுவின் குமாரர்களாகிய யாக்கோபும் யோவானும் அவர்களுடைய கூட்டாளிகளாயிருந்தார்கள். இயேசு தனது ஊழியத்தின் ஆரம்பத்தில், கெனசரேத்துக் கடலருகே நின்ற பேதுருவின் படகில் ஏறி, கடற்கரையில் இருந்த திரளான ஜனங்களுக்கு அவர் போதகம் பண்ணினார் (லூக்கா 5).

“ அவர் போதகம் பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி; ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்; ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படியே அவர்கள் செய்து தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும் படிக்குச் சைகை காட்டினார்கள். அவர்கள் வந்து இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள் ” (லூக்கா 5:4,7).

## *விசுவாசம் எப்படி ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது?*

இயேசு பேதுருவிடம் என்ன செய்யும்படியாகச் சொன்னாரோ அது மனித அறிவின்படி நியாயமற்றதாகத் தோன்றுகிறது. மீன்பிடிப்பதற்கு ஏற்ற நேரம் இரவு வேளை தான். இரா முழுவதும் மீன்பிடித்தும் ஒன்றும் கிடைக்கவில்லையென்றால், ஒரு மீனவன் அதே தண்ணீருக்குள் மறுபடியும் காலையிலே இறங்கமாட்டான். இயேசுவிடம் தாங்கள் இரா முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை என்பதை பேதுரு சுட்டிக்

காட்டினான். அத்தோடு, விசுவாசத்தைக் காட்டிய சில வார்த்தைகளையும் பேதுரு பேசினார், " *ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன்* " என்றான். பேதுரு, இயேசுவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசித்தான் ஆகவே, இயேசு எதைக் கட்டளையிட்டாலும் அது பேதுருவுக்குச் சரியாகவே இருந்திருக்கிறது. ஆகவே, அவர் அவைகளைச் செய்தார்.

இதுதான் விசுவாசத்தில் உண்மையான தன்மையாயிருக்கிறது. ஒருவருக்கு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம், அவர் இடும் கட்டளைகளுக்கு, கேள்வி எதுவும் கேட்காமல் கீழ்ப்படியும்படி செய்கிறது. அவ்வகையான பதில், விசுவாச செயலாயிருக்கிறது. குறிப்பாகக் கட்டளையிடப்பட்ட காரியம் மனித கண்ணோட்டத்திற்கு எதிராக இருந்தாலும் சரி, இவ்வகையான கட்டளை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பேதுரு பிரசங்கித்த முதல் பிரசங்கத்தில் இடம் பெற்றுள்ளது. இயேசுவை மரித்தோரிலிருந்து தேவன் உயிர்த்தெழச் செய்தார் என்பதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்; பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார் (அப். 2:37,38). ஒருவர் மனித ஞானத்தினால் வழிநடத்தப்பட்டால் தான் மனந்திரும்ப வேண்டுமென்பதை ஒத்துக்கொள்வார். ஆனால், பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்பதை ஒத்துக் கொள்ளமாட்டார். அந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்வதற்கு விசுவாசம் தேவைப்படுகிறது. தேவன், இப்படியாகக் கட்டளையிடுகிறபடியால் அது அவசியமாகிறது.

## *பேதுருவின் பயம்*

சீமோன் பேதுரு அதைக்கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து; ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும் என்றான். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி பயப்படாதே, இதுமுதல் மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார் (லூக்கா 5:8,10) தேவனுடைய வல்லமை இயேசுவுக்குள் கிரியை செய்ததைக் கண்ட பேதுரு பயந்தார். ஏனென்றால், பேதுரு பாவியான மனுஷனாக இருந்தார். ஒரு மனிதன் தன் பாவத்தை அறிந்து, தேவனுடைய வல்லமையைப் பற்றி யோசிக்கும் போது அவன் பயந்து போவான். பிசாசுகள் தேவனுடைய வல்லமையைப் பற்றி அறிந்து நடுங்குகின்றன (யாக். 2:19).

ஆனால், நாம் தேவனுடைய அன்பை அறிந்து, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்போது, பயம் நீங்கி அதற்குப் பதிலாக அந்த இடத்தில் இயேசு தருகிற அன்பும், சந்தோஷமும் வந்து சேருகிறது.


இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இதுபோன்ற ஓர் அற்புதத்தை மறுபடியும் செய்தார். சீஷர்களில் சிலர் மீன்பிடித்துக் கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களிடம் படவுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள் என்றார். அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்த போது வலை மீன்களால் நிறைந்தது. அப்போஸ்தலனாகிய யோவான் " அவர் கர்த்தர் என்றான் " (யோவான் 21:7). அப்போது பேதுரு தன்னுடைய பாவத்தினிமித்தம் கர்த்தர் தன்னை விட்டுப் போக வேண்டுமென்று கேட்ப தற்குப் பதிலாக, கடலில் குதித்து நீந்தி முடிந்தவரை துரிதமாகக் கரை சேர்ந்து இயேசுவோடு இருக்க விரும்பினான். தங்கள் பாவங்களைக் குறித்த உணர்வுள்ளவர்கள், சிலுவையில் அறையப் பட்ட இரட்சகர் மூலமாகக் கொடுக்கப் பட்டிருக்கும் தேவனுடைய அன்பைக் காண்பவர்கள் விசுவாசத்துடனும், கீழ்ப்படிதலுடனும் துரிதமாக இயேசுவிடம் வருவார்கள்.

## *பேதுருவுக்கு இயேசுவின் வாக்குத்தத்தம்*

பேதுருவிடம் பயப்படாதே என்று இயேசு சொன்னபோது, இப்படியும் சொன்னார், இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டு போய் நிறுத்தி எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள் (லூக். 5:10,11). பேதுருவும் அவருடைய கூட்டாளிகளும் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவைப் பின்பற்றினபடியால் அவர்கள் வெளியே சென்று மனுஷரைப் பிடித்தார்கள். மனிதர்களைப் பிடிக்க அவர்கள் பயன்படுத்திய வலை கிறிஸ்துவின் சுவிசேஷமாயிருந்தது.

இயேசுவானவர் தாம் உயிர் தெழுந்த பிறகு சீஷர்களிடம் இவ்விதமாகக் கட்டளையிட்டார். ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் *சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத். 28:19). இப்பூமியில் ஏராளமானோர் பயத்தில் இழந்து போயிருக்கிறார்கள். கிறிஸ்துவில் யாரெல்லாம் விசுவாசம் வைத்திருக்கிறார்களோ, அவர்கள் போய் இப்படிப் பட்டவர்களுக்குப் பிரசங்கித்து, அவர்களைக் கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்.*

**எ**ங்களுக்கு அதிகமாகத் தந்திருப்பவரே, இரக்கத்துடன் இன்னொரு காரியத்தையும் எங்களுக்குத் தாரும். "நன்றியுள்ள இருதயத்தைத் தாரும் "




கிறிஸ்தவர்களாகிய நாம் எந்தப் பிரமாணத்தின் கீழும் இல்லை என்று இந்நாட்களில் பலர் போதிப்பது வேதனையானது மட்டுமல்ல, புரிந்து கொள்ள முடியாததுமாயிருக்கிறது. சமீப காலங்களில் இதுபற்றி அதிகமாக எழுதப் பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கட்டுரையானது வேறொரு கோணத்தில் அமைக்கப்பட்டுள்ள படியால், உங்க ளுக்கு உகந்ததாக இருக்குமென்று நம்புகிறேன்.

நாம் எந்தப் பிரமாணத்தின் கீழும் இல்லையென்று போதிப்பவர்களுக்குக் கீழ்வரும் வசனங்கள் நம்ப முடியாததாயிருக்கும். ரோமர் 5:13, "*நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது*". ஆக, பிரமாணம் எதுவுமே இல்லாதிருந்தால், பாவமே இருந்திருக்காது, இரட்சகருக்கும் அவசியம் இருந்திருக்காது ! ரோமர் 8:2 " *கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே* " என்று சொல்கிறது. I கொரி 9:21, குறிப்பாக இவ்விதமாகச் சொல்லுகிறது " *நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல் கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்* ". நமக்கு *ஒரு பிரமாணம் இருக்கிறது, அதற்குக் கீழ்ப்படிய வேண்டியது நம் கடமையாயிருக்கிறது என்பதை இன்னும் தெளிவாக எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.* கலா 6:2 " *கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும்* " என்று சொல்லுகிறது. எபிரெயர் 8:10, புதிய உடன்படிக்கை சம்பந்தமாகப் பேசுகிறது. " *என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்* ". நாம் ஏதோ ஒரு பிரமாணத்தின் கீழ் இராவிட்டால் இந்த வசனம் என்ன பொருளைத்தான் கொடுக்கும்? யாக். 1:25, " *சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப் பார்த்து*" என்று சொல்லுகிறது. அதுபோல், " *சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்*" என்று யாக் 2:12 சொல்லுகிறது.

மேற்சொல்லப்பட்ட வசனங்களின் பொருள் எதையும் ஒருவர் புரிந்து கொள்ளாவிட்டாலும் கூட, நாம் ஏதோ ஒரு பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும்,

அதன்படிதான் நியாயந்தீர்க்கப் படுவோம் என்பதையும் சந்தேகிக்க முடியாது.

இந்தப் பிரமாணம் " சுயாதீனப் பிரமாணம் " என்று அழைக்கப்படுவ தற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளுள் அந்தப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதால், அது விடுதலையைத் தருகிறதென்பது மிக முக்கியமானது. ஆம் அது பாவத்தி லிருந்தும், அதன் ஆதிக்கத்திலிருந்தும் விடுதலையைத் தருகிறது. " மோசே யின் பிரமாணம் எழுத்துக்களினாலே எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தை உடையதாயிருந்தது " (II கொரி 3:7). கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது (ரோமர் 8:) (எபிரெயர் 8:10) இருந்தபோதிலும் அது பிரமாணமே.

நாம் எந்தப் பிரமாணத்தின் கீழும் இல்லையென்று சொல்லுகிறவர் களில் சிலர் அப்படிச் சொல்வதற்குக் காரணம், பிரமாணத்தின் கொள்கை களைக் கடைபிடிப்பதால் நீதிமானாக் கப்படுதலுக்கும், அதற்குக் கீழ்ப்படி வதற்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முடியாததே.

வானத்திலும், பூமியி லும், சகல அதிகாரமும் உடைய கிறிஸ்துவின் பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்து கிறதாக உள்ளது (மத் 28:18). பிரமாணத்தைக் கைக்கொள் வதன் மூலம் நாம் நீதிமானாக்கப்பட வேண்டு மென்றால், ஒரு போதும் நாம் அதை மீறியிருக்கக் கூடாது. அதை ஒரு போதும் மீறியதில்லை என்று உங்க ளால் சொல்ல முடியுமென்றால், நீங்கள் சாதித்து விட்டீர்கள் என்று கொள்ள லாம். ஆனால், அதற்கு வாய்ப்பில்லை (ரோமர் 3:23). ஆனால், நீங்கள் பிரமாணத்தை மீறிவிட்டதாக ஒத்துக் கொண்டால், நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டதன் அடிப்படையில் நீதிமானாக்கப்பட்டதாகச் சொல்லிக் கொள்ள முடியாது.


அநேகர் இவ்விதமாகப் பதில ளிப்பார்கள் " நான் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். அது தான் பிரமாணத்தை கைக்கொள்வது என்று. அது பிரமாணத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதாகும். ஆனால், யாக்கோபு சொல்கிறார் *எப்படியெனில் ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதை யும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளி யாயிருப்பான்* " (யாக். 2:10).

ஆகவே, நாம் பிரமாணத்தின் கீழ், அதாவது, சுயாதீனப் பிரமாணத் தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், நாம் அதில் ஒரு பகுதியைக் கடை பிடித்ததால் நீதிமான்களாக்கப் படவில்லை. நாம் இலவசமாக அவருடைய கிருபையினாலே கிறிஸ்து விலுள்ள இரட்சிப்பை கிறிஸ்துவின் நிபந்தனைகளின்படி நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவருடைய நிபந்தனை கள் எளிமையானவை. அவருடைய நுகம் இலகுவானது. ஆனால், அந்த நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ள வேண்டும் (மத் 11:29). அப்படி நீங்கள் செய்யும் போது (1) அவருடைய பிரமாணத்தின் கீழ் நீங்கள் இயங்கு கிறீர்கள். (2) அவருடைய கிருபையி னாலே நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள். 3) ஒருவேளை நீங்கள் அவருடைய பிரமாணங்களை எண்ணற்ற முறை மீறி யிருந்தாலும் கூட, அவருடைய பிரமாணங்களைக் கைக்கொண்டதால் நீதிமானாக்கப்பட்டீர்கள். ⁂

# நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்போம்

## Let us Abide in The Doctrine of Christ

*G.F. Raines*



மத உலகம் சம்மந்தமாக தேவனிடத்தில் என்னுடைய விண்ணப்பமும், வேண்டுதலும் என்ன வென்றால், புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவும், கிறிஸ்துவின் சபையும் எல்லா மதப் பிரிவுகளையும், மார்க்கப் பிரிவினை கூட்ட சபைகளையும் மிஞ்சும் நாள் வரவேண்டும் என்பது தான். கிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லாவற்றுக்கும் மேலமாக உயர்த்தப்பட்டு முற்றிலும் எல்லா மனித கொள்கைப் புத்தகங்களையும் மனித அபிப்பிராயங்களையும் மேற்கொள்ளும் நாள் வர வேண்டும் என்பதும் என் விண்ணப்பமும் விருப்பமுமாயிருக்கிறது. மனிதர்கள் பொதுவான கோட்பாடுகளுக்கு மேல் கொள்கையையும் கடமைக்கு மேல் பட்சபாதத்தையும் தேவனுடைய பரிசுத்த வார்த்தையின் சத்தியத்திற்கு மேல் யூகத்தையும் உயர்த்திப்பிடிக்கும் வரை மத உலகில் பிரிவுகளும், குழுக்களும் தொடர்ந்து இருக்கத் தான் செய்யும்.

C.C. CrawFord சொன்னது போல, இருதயத்தை மாற்றி, மனசாட்சியை குணமாக்கி ஆத்துமாவை இரட்சிக்கிற ஒரே செய்தி புதிய ஏற்பாடு. அதன் தூய்மையிலும், எளிமையிலும் தான் அதன் சிறப்பு இருக்கிறது. கிறிஸ்தவர்கள் வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேச வேண்டும், வேதாகமம் எங்கே மௌனமாயிருக்கிறதோ அங்கே மௌனமாயிருக்க வேண்டும்.

தேவன் இஸ்ரவேலர்களைப் பார்த்து நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் என்று சொன்னார் (உபாகமம் 4:2).

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்

செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்று பவுல் சொல்கிறார் (2 தீமோ. 3:16,17).

இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் அறிய விரும்பினால் உங்கள் வேதாகமத்தில் கீழ்க்காணும் வசனப்பகுதியை வாசியுங்கள் (அவைகள் வெளிப்படையாயிருக்கின்றபடியால் விளக்கமே தேவையில்லை) மாற்கு 16:16; யோவான் 3:5; அப். 2:38; 8:26-40; 2 பேதுரு 1:5-11)

*என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்; நான் சுயமாய்ப் பேசவில்லை* நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார் என்று இயேசு சொன்னார் (யோவான் 12:48,49). 1பேதுரு 1:13-ல், *ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று வாசிக்கிறோம். எனவே ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கு முன்பாக மனதளவில் நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.*

## நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறோமா?

**கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன்.**

**ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்.**

(II யோவான் 9,10)

# வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகளா?

## Are the Scriptures Inspired?

***Jimmy Jividen***

நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர், வேத வாக்கியங்கள் முழுமையானது மற்றும் விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் அதுதான் அளவுகோல் என்பது பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். அவர்கள் அறிவுச் சுதந்திரம், கலாச்சார ஒற்றுமை, அரசியல் சாதகச் சூழல் போன்றவற்றின் மறைவில் நின்று வேத வாக்கியங்களை மத சம்பந்தமான காரியங்களின் அளவு கோலாக எண்ணுபவர்களை சங்கடத்தில் ஆழ்த்த நினைக்கிறார்கள்.

இவ்விதமாகக் கேள்வி கேட்பவர்கள் மத சம்பந்தமான வார்த்தைகளைச் சரியான அளவில் பயன்படுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் எதை விசுவாசிக்க விரும்புகிறார்களோ அதற்கு ஏற்றாற் போல் அவ்வார்த்தைகளுக்கு பொருள் கொடுக்கிறார்கள். ஒருவன் தன்னுடைய சந்தேகத்தை அல்லது சொந்தக் கருத்தை இப்படி வார்த்தை ஜாலத்தில் மூடிப் பேசுவது மாயமாலமாகும். உண்மை இருளைக் கண்டு ஒருபோதும் பயப்படாது.

இந்தச் சந்தேகப் பேர்வழிகள் வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகள் என்பதைத் தாங்கள் நம்புவதாகச் சொல்லும்போது, வேதாகம விசுவாசி ஒருவர் வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப் பட்டவைகள் என்று விசுவாசிப்பதற்கும், அவர்கள் சொல்பவைகளுக்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது.

கவிஞன் ஒருவன் எப்படி ஒரு கவிதையை எழுத ஏவப்படுகிறானோ அல்லது தூண்டப்படுகிறானோ அது போல் தான் வேதாகமமும் தூண்டப் பட்டிருக்கிறது என்பதை அவர்கள் விசுவாசிக்கலாம். அவர்கள் சொல்வது உண்மைதான். வேத வாக்கியங்களில் ஆவிக்குரிய இலக்கிய தொகுப்புகள் கொட்டிக்கிடக்கிறது. அதுபோல பகவத் கீதையிலும், குரானிலும் கூட அவைகள் இருக்கிறதே.

இந்தச் சந்தேகப்பேர்வழிகள், வேத வாக்கியங்கள் அவைகள் எழுதப் பட்ட காலத்திற்காக ஏவப்பட்டது. அதனால் இன்றைய நாட்களுக்கு சம்பந்தமில்லாததாயிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். வேத வாக்கியங்கள் கலாச்சாரப் பாரம்பரியங்களால் தடுக்கப்பட்டிருப்பதாகவும், அவைகள் இன்றைக்குப் பொருந்தாது என்றும் நம்புகிறார்கள்.

ஒருவர் வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டிருக்கிறது என்று உணரும்போது மட்டும் அது

ஏவப்பட்டதாயிருக்கிறது என்று இந்தச் சந்தேகப் பேர்வழிகள் சொல்லுகிறார்கள். மேலும், அவர்கள் ஒரு வசனப்பகுதி உங்களுக்கு ஏவப்பட்டதாயிருக்கலாம். ஆனால், மற்றவர்களுக்கு அது அப்படி இருக்காது. எனவே, ஏவப்படுதல் என்பது வசனத்தில் இல்லை. மாறாக வாசிப்பவரிடத்தில் தான் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

அவிசுவாசம் விதவிதமான உருவங்களில் வருகிறது. மேலே சொல்லபட்ட கருத்துக்கள் அவிசுவாசத்தின் அடையாளங்களாயிருந்து, இன்று அநேக சபைகளில் இது காணப்படுகிறது. மதம் மற்றும் பக்தி காரியங்களில் நாம் எதிர்கொள்ளுகிற பிரச்சினைகள் உபதேச காரியங்களில், அரசியல் சார்புகளிலோ, நடைமுறைச் செயல்களிலோ இல்லை. மாறாக, வேத வாக்கியங்கள் விசுவாசத்திற்கு வழிகாட்டியாகவும் நடைமுறைப் பக்தி வாழ்வுக்கு உகந்ததாகவும் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதில் தான் இருக்கிறது. வேதாகமத்திற்கான ஓர் யுத்தத்தில் நாம் உள்ளோம்.

வேத வசனங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டது தானா என்று கேள்வி கேட்பது கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையே கேள்வி கேட்பது போன்றதாகும். ஏனென்றால், வேத வசனங்கள் மூலமாகத் தான் இயேசு யார் என்பதை ஒருவன் அறிந்து கொள்ள முடியும்.

## ஒருவர் ஜெபிக்கும்போது....

1. பரமப் பிதாவிடம் பேசுகிறார் [மத். 6:4]
2. தேவன் பதிலளிக்க வல்லவர் என்று விசுவாசிக்கிறார் [யாக். 1:5,6]
3. இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறார் [மத். 26:29]
4. கிறிஸ்து தன் மத்தியஸ்தராக இருப்பதற்கு அனுமதிக்கிறார் [தீமோ. 2:5]
5. மற்றவர்கள் நலனில் தன்னுடைய அக்கறையைக் காட்டுகிறார் [யாக். 5:16]
6. சரியான மனப்பான்மையை அவர் வெளிப்படுத்துகிறார் [கொரி. 14:15]
7. ஜெபிக்கும் போது தேவனைப் பிரியப்படுத்துகிறார் [நீதி. 15:8]

**இப்படியாக விசுவாச வீரர்களின் மாதிரியைப் பின்பற்றுகிறார்**

# வசனத்தைப் பிரசங்கித்தல்

# Preaching the word

*Hans J. Dederscheck*

சுவிசேஷத்தை அறிவிப்பதில் கிறிஸ்தவர்கள் தங்கள் நேரத்தை அர்ப்பணிக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (மத். 28: 18-20). நம் அன்றாட வேலையின் மத்தியில் கூட நற்செய்தியை அறிவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் நேரத்தைச் செலவிட வேண்டும் (ரோமர் 12:7,8; 13:11,14). காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று பவுல் வலியுறுத்துகிறார் (கொலோ. 4:5).

கர்த்தருடைய வசனம் புதிய வாழ்வைக் கொண்டு வருகிறது. ஆதி திருச்சபையின் சாதாரண மக்கள் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை ரோம சாம்ராஜ்யத்தின் எல்லா இடங்களுக்கும் கொண்டு சென்று பரப்பினார்கள். அவர்கள் நற்செய்தியினிமித்தம் பயணம் செய்து, உபதேசித்து அதன்படி வாழ்ந்து திரு வசனத்தைப் பிரசங்கித்தார்கள். இன்று கிறிஸ்தவர்கள் அதே விதமாகச் செய்தால், அதன் பலன் அபரிதமாயிருக்கும், பாவம் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது; ஆனால், கிறிஸ்து மனிதர்களைப் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்கிறார் (ரோமர் 6). கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, தேவனுக்குச் செய்யும் மிகச்சிறந்த சேவை நற்செய்தியைப் பிரசங்கிப்பது தான். மனித இனத்தை இரட்சிப்பதற்கு ஒரே வழி இதுதான். கிறிஸ்துவுக்குள் விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலே வருகிறது (ரோமர் 10:17; மாற்கு 16:15,16).

சுவிசேஷமானது முழுமையாகப் பிரசங்கிக்கப்பட வேண்டும் (அப். 20: 26,27) அதாவது, சுவிசேஷத்தோடு ஒன்றையும் கூட்டாமல் குறைக்காமல் முழுமையாகப் பிரசங்கிக்க வேண்டும் (வெளி. 22:18,19). பலர் நற்செய்தியை மாற்றிக் கள்ள சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும், உண்மையான சுவிசேஷம் ஒன்றே ஒன்று தான் (கலா. 1:6,9).

ஒரு கிறிஸ்தவனுடைய பிரசங்கமானது தேவனை மகிமைப்படுத்துகிற தெளிவான செய்தியாயிருக்க வேண்டும். அது யாரையும் புண்படுத்தக்கூடாது. அதே வேளையில் சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளுகிறதாகவும் இருக்கக் கூடாது. கிறிஸ்தவர்கள் அன்புடனும், இச்சை அடக்கத்துடனும் பிரசங்கிக்க வேண்டும், அதே நேரத்தில் பட்சபாதமில்லாமல் பிரசங்கிக்க வேண்டும் (கொலோ. 3:23; 1 தெச. 5:6,11).

ஆகிலும், சபை வளர்ச்சியானது செயற்கையாக வார்த்தைகளைத் தந்திரமாகக் கையாண்டு கேட்பவர்களை வசப்படுத்துவதினால் ஏற்பட்டு விடாது. நம் பிரசங்கமானது சமூக பொழுதுபோக்காக இருந்தால், அது சுவிசேஷத்தை அறிவிப்பதாக இருக்காது. மத உலகில் மனோதத்துவ ரீதியில் வார்த்தைகளை திரித்துப் பேசுவதினால் சபைக் கட்டிடத்திற்கு ஒருவேளை அதிகக் கூட்டம் வரலாம், ஆனால், அவர்கள் தேவனுடைய நித்திய ராஜ்யத்திலிருந்து காலி செய்யப் படுவார்கள். தேவனுடைய வார்த்தையை நாம் அன்போடும், உண்மையோடும் பிரசங்கிக்க வேண்டும், கர்த்தர் சொல்லியிருக்கிறபடி பிரசங்கிக்க வேணடும்.

கிறிஸ்தவர்கள் ஏவப்பட்ட தேவனுடைய வாக்கியங்கள் எல்லாவற்றையும், முழுமையான அளவில் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய இந்த முழுமையான செய்தி மக்களைத் " தேறினவர்களாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி யுள்ளவர்களாகவும் மாற்றும் " (2 திமோ. 3:16,17). சுவிசேஷம் அதன் முழுமைத் தன்மையில் மாத்திரமே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஒருவருக்குத் தருகிறது (2 பேதுரு 1:3) கள்ளப் போதகர்களால் பிரசங்கிக்கப்படும் அரைகுறை சுவிசேஷம் சுவிசேஷமே அல்ல, ஏனென்றால் அது ஆக்கினையில் போய் முடிகிறது.

கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறபடியால், அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து நற்செய்தியைப் போதிக்க வேண்டும், அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவது அவசியம் என்கிற ஒரே காரணத்தினால் தூண்டப்பட வேண்டும்! சபை அங்கத்தினர்களைப் பிரியப்படுத்த ஒரு போதும் பிரசங்கிக்க வேண்டாம், யாரோ ஒருவர் உங்கள் மீது நிர்பந்தத்தைத் திணிக்கிறார்கள் என்பதற் காக ஒருபோதும் பிரசங்கிக்க வேண்டாம். வேத வசனங்களின் சகல அதிகாரத் தோடும் அன்புடன் சத்தியத்தைப் பிரசங்கியுங்கள். இல்லையென்றால் உங்கள் பிரசங்கமும், போதனையும், வெறுமையானதாகவும், மனிதனைப் பிரியப்படுத்து கிறதாகவும், கெட்டுப் போனதாகவும் இருக்கும். கிறிஸ்தவர்கள் எல்லா உண்மை யையும் பிரசங்கிக்க வேண்டும். அரைகுறை உண்மை என்பது முழுமையற்ற சுவிசேஷத்தைப் போன்றது.

நற்செய்தியினால் உண்டாகும் ஆவிக்குரிய வாழ்க்கையை, உலக காரியங்களும், மனித சுபாவங்களும் அழித்து விடும். கிறிஸ்துவின் எல்லா சுவிசேஷச் செய்தியிலும் நிலைத்திருங்கள், ஏனென்றால், அவர்கள் ஆரோக்கிய மான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங் காலம் வரும் (2 தீமோ. 4:34) என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாம் முழு சுவிசேஷத்தையும் பிரசங்கிக்க வேண்டும் இல்லையென்றால் நாம் கிறிஸ்துவுக்கு எதிராக வேலை செய்கிறவர்களாயிருப்போம். ❋

# பிரசங்கிப்பதை விட்டு விடாதீர்கள்

காரியங்கள் தவறாகப் போகும்போது சிலவேளைகளில் அப்படியாகிறது
நீங்கள் உங்கள் இருதயத்தை ஊற்றி இரவு முழுவதும் பிரசங்கிக்கிறீர்கள்
ஜனங்கள் நாற்காலிகளில் சத்தத்தை ஏற்படுத்துகிறார்கள்
உங்களை ஒருவிதமாகப் பார்க்கிறார்கள்.

அவர்கள் உங்கள் கைகளைக் குலுக்கி, பிரசங்கியாரே, செய்தி நன்றாக இருந்தது என்கிறார்கள்.
உங்கள் அயலகத்தாருக்கு இந்தச் செய்தியை எடுத்துச் சொல்லுங்கள் என்கிறீர்கள்
அவர்களுடைய மங்கலான கண்களில் தோன்றும் அதிர்ச்சியை நீங்கள் காண்பீர்கள்.
செய்தியின் தலைப்பை அவர்கள் நினைவில் வைத்திருந்தார்களானால் அது ஆச்சரியமாயிருக்கும்.

ஆனால், சகோதரரே தொடர்ந்து பிரசங்கியுங்கள்,ஏனென்றால், நீங்கள் சிலரை இரட்சிப்பீர்கள்,
அதைத்தான் நம் கர்த்தர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்.
நீங்கள் வல்லமையுள்ள மனிதர்களின் பட்டியலில் இருக்கிறீர்கள்,
எனவே புதிய தைரியத்துடன், மறுபடியும் பிரசங்கியுங்கள்.

***- Jessie Granville.***

..... பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப் படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப் பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்.... (ரோமர் 10:14,15)

# பிரிவினையற்ற கிறிஸ்தவம்

# Undenominational Christianity

*Bobby Dockery*

***Dr. Hans Kung*** என்னும் புகழ் பெற்ற ஐரோப்பிய இறையியல் வல்லுநர் சில வருடங்களுக்கு முன்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புத்தகம் ஒன்றை வெளியிட்டார். அப்புத்தகத்திற்கு மிக எளிய முறையில் *"சபை"* என்று தலைப்பிட்டிருந்தார். அந்நாளில் அவர், கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட சபை தன் வழியைத் தொலைத்து விட்டதென்றும், அது பாரம்பரியத்தில் சிக்கி மேம்பட முடியாமல் திண்டாடுகிறதென்றும், கிறிஸ்து என்ன நோக்கத்திற்காகச் சபையை உத்தேசித்திருந்தாரோ அது இப்போது இல்லாமல் போய்விட்டதென்றும் புலம்பியுள்ளார். Kung-ன் கூற்றுப்படி அதை மீட்டமைப்பதற்கான ஒரே மருந்து வேதத்திற்குத் திரும்பிப் போய், ஆரம்பத்தில் சபை எப்படி இருந்தது என்பதைப் பார்த்து, இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அந்த உண்மையான சபையின் சாரம்சத்தை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வருவது தான் என்றார். வேறுவிதமாகச் சொன்னால் பிரிவினையற்ற முறைமைக்குச் சபை திரும்ப வேண்டும்.

நான் தனிப்பட்ட முறையில் பிரிவினையற்ற கிறிஸ்தவம் சாத்தியம் என்று நம்புகிறேன். அதாவது, ஒருவர் எந்த பிரிவினைச் சபையிலும் அங்கம் வகிக்காமல் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராய் மாத்திரம் இருக்க முடியும். இந்த இருபத் தொன்றாம் நூற்றாண்டில் பிரிவினையற்ற கிறிஸ்தவத்தை மீட்டமைக்க கீழ்க் காணும் காரியங்கள் அவசியமானவைகளாயிருக்கிறது.

1. வேதாகமத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட ஒட்டுமொத்த விசுவாசிகளின் ஒற்றுமை.
2. எல்லா மனிதக் கொள்கைகளையும், விசுவாச அறிக்கைகளையும் எடுத்து விட்டு, அந்த இடத்தில் சபையின் நடைமுறைக் காரியங்களையும், விசுவாசக் காரியங்களையும் கட்டுப்படுத்தும் சட்டமாக வேதாகமத்தை வைத்தல்.
3. சபையின் ஒரே தலைவராக கிறிஸ்துவை அங்கீகரித்தல்.
4. ஒவ்வொரு பிராந்திய சபையும் தன்னிச்சையாகச் செயல்படுகிற தற்சார்பு உடைய சபையாக இருத்தல்.
5. தேவனுடைய ஜனங்களைக் குறிப்பிடுவதற்கு வேதாகமப் பெயர்களையே பயன்படுத்துதல்.

6. புதிய ஏற்பாட்டு சபை நடைமுறைப்படுத்தி வருகின்ற ஆளுகை அமைப்பு ஆராதனை, உறுப்பினராவதற்கான தகுதிகள் போன்ற வற்றை மீட்டமைத்தல்.

பிரிவுகளும், குழுக்களும் நிறைந்த மத உலகில் உண்மையாகவே, பிரிவினையற்ற கிறிஸ்தவம் சாத்தியமா? அநேகர், சாத்தியம் இல்லை என்று தான் சொல்வார்கள். அவர்கள், பிரிவினையற்ற கிறிஸ்தவம் இக்காலத்திற்கு ஒத்து வராதென்றும், நிறைவேறாத கனவென்றும் சொல்வார்கள். ஆனால் வேதாகமம் வேறுவிதமாய்ப் போதிக்கிறது. அதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

1. **புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுவால் ஸ்தாபிக்கப்பட்ட சபை பிரிவினையற்ற சபையாக இருந்தது.** அவர் தம்முடைய சபையை ஒன்றுபட்ட மற்றவைகளி லிருந்து வேறுபட்ட ஓர் அமைப்பாகத்தான் உருவாக்கினார் (மத். 16:18). அவர் தம்மைப் பின்பற்றுபவர்கள் சதாகாலமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக ஜெபித்தார் (யோவன் 17:20,21). அவர் தம்முடைய சபை துண்டு துண்டாகப் பிரிக்கப்பட ஒருபோதும் அங்கீகாரம் கொடுக்க வில்லை.

2. **முதல் நூற்றாண்டில் பிரிவினையற்ற கிறிஸ்தவத்தை உருவாக்கிய அதே விதை தான் இன்றும் நம்மிடம் இருக்கிறது.** விதை தேவனுடைய வசனமாயிருக்கிறது (லூக். 8:11). அந்த வித்திலே நாம் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 1:23). விதை கிரியை செய்யத்தக்கதாக இருந்தால் எப்போதும் ஒரே விதமான பலனையே உண்டாக்கும். அது எங்கே, எப்போது நடப் பட்டாலும் இவ்வுண்மையில் மாற்றம் இருக்காது.

3. இன்றும் நாம் மனிதர்களுடைய உபதேசங்களிலிருந்தும், கொள்கைகளி லிருந்தும், அபிப்பிராயங்களிலிருந்தும் திரும்பிக் கிறிஸ்துவினிடத்திலும், அவருடைய வார்த்தையினிடத்திலும் திரும்பினால் பிரிவினையற்றவர்களாக இருக்க முடியும். வேதாகமம் ஒருவரை கிறிஸ்தவராக மட்டுமே மாற்றும்! இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் எவைகளை விசுவாசித்தார்களோ அவைகளையே நாமும் விசுவாசித்தால், அவர்கள் எதற்குக் கீழ்ப்படிந்தார்களோ அதற்கு நாமும் கீழ்ப்படிந்தால், அவர்கள் எவைகளை நடைமுறைப்படுத்தினார்களோ அவைகளை நாமும் நடைமுறைப்படுத்தினால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப்போல் நாமும் இருக்க முடியும். ❋

**தன் காலத்தில் தன் எண்ணங்கள் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறவன், வரப்போகும் எல்லாக் காலத்திலும் அந்தத் தாக்கத்தை ஏற்படுத்துகிறவனாயிருக்கிறான்.**

# அது எது?

ஒரு நாளை இரண்டு விதமாகத் தொடங்கலாம். **ஜெபத்தோடு, ஜெபமில்லாமல்.** இந்த இரண்டு விதங்களில் ஒன்றினால் இந்த நாளை தொடங்கினீர்கள். *அது எது?*

கர்த்தருடைய நாளை இரண்டு வழிகளில் செலவிடலாம். **சோம்பலாக, பக்தி ரீதியாக.** இவ்விரண்டு வழிகளில் தான் கர்த்தருடைய நாளை நீங்கள் செலவிடுகிறீர்கள் *அது எது?*

இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் இருக்கிறார்கள். **இரட்சிக்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்படாதவர்கள்.** நீங்கள் இவ்விரண்டு வகைகளில் ஒன்றைச் சார்ந்தவர்கள் *அது எது?*

இப்பிரபஞ்சத்தில் மனிதர்களுக்கு இரண்டு மாபெரும் எஜமான்கள் இருக்கிறார்கள். **தேவன் மற்றும் சாத்தான்.** இந்த எஜமான்களில் ஒருவருக்குத்தான் நீங்கள் சேவை செய்து கொண்டு வருகிறீர்கள். *அது எது?*

காலம் மற்றும் நித்தியத்தின் வழியாய் நம்மை அழைத்துச் செல்ல இருவழிகள் உள்ளன. ஒன்று **விசாலமான வழி** மற்றொன்று **இடுக்கமான வழி**. நீங்கள் இவ்விரண்டு வழிகளில் ஒன்றில் நடக்கிறீர்கள் *அது எது?*

மக்கள் இரண்டுவிதமாக மரிப்பார்கள் – சிலர் **கிறிஸ்துவுக்குள்,** சிலர் **பாவங்களில்**. இவைகளில் ஒன்றில் நீங்கள் மரிப்பீர்கள் *அது எது?*

மக்கள் போவதற்கென்று இரண்டு இடங்கள் உள்ளன – **பரலோகம்** அல்லது **நரகம்.** இவ்விரண்டு இடங்களில் ஒன்றிற்குத்தான் நீங்கள் போவீர்கள் *அது எது?*

**– தெரிந்தெடுக்கப்பட்டது.**

# கிறிஸ்துவைச் சேர்ந்தவரா?



## Of Christ

### Ray Hawk

*சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர் : நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?* (1 கொரி. 1:10-13).

இந்த வசனப் பகுதியைக் குறித்து வியாக்கியானம் செய்யும்போது ஒரு எழுத்தாளர் பவுலைச் சேர்ந்தவர்களும், அப்பொல்லோவைச் சேர்ந்தவர்களும், கேபாவைச் சேர்ந்தவர்களும் மாத்திரம் பிரிவினை உணர்வுடையவர்களாயிருக்கவில்லை. "கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களும்" பிரிவினை உணர்வுள்ளவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். "கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களென்று" அடையாளங் கண்டுகொள்ளப்பட்டவர்களிடையே கூட பிரிவினை இருந்திருக்கும்போது, அவர்கள் சரியாயிருப்பதற்கு யாரைச் சேர்ந்தவர்களாயிருப்பது அவசியமாகிறது. கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று அவர்களுக்குள் பிரிவினை இருக்குமானால் யாருடைய நாமத்தில் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும்?

இயேசு பிரதான கட்டளையைக் கொடுக்கும்போது, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து" (மத். 28:19) என்று சொன்னார். ஒருவர் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும். அந்த பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் (அப். 2:38, சமாரியர்கள் (அப்.8:16), கொர்நேலியும் அவன் வீட்டாரும், (அப். 10:48), மற்றும் எபேசியர்கள் (அப். 19:5) அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். அப்படிச் செய்ததினால் அவர்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களாக

இருந்தார்கள். கொரிந்து பட்டணத்தாரும் அவ்விதமாவே செய்ததாக பவுல் அறிவித்திருக்கிறபடியால் (1 கொரி. 12:13), மேலும், லூக்கா அந்த ஆதாரத்தை உறுதி செய்கிறபடியால் (அப். 18:8) கொரிந்து பட்டணத்தில் கூடிவந்த சபை "தேவனுடைய சபை" கிறிஸ்துவைச் சேர்ந்ததென்றும் நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம். (1 கொரி. 1:2,13).

மேலும் பவுல் இந்த ஞானஸ்நானமானது இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாயிருக்கிறது என்று சொல்லுகிறார் (ரோமர் 6:3,4,17). ஒருவர் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட்டு அதிலிருந்து எழும்போது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கிறார் (ரோமர் 6:2,7; கலா. 3:27). இதைத்தான் கொரிந்து பட்டணத்தார் செய்திருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்.

கிறிஸ்துவே நமக்காகச் சிலுவையில் அறையப்பட்டார். பவுலோ, அப்பொல்லோவோ, கேபாவோ அல்லது வேறு எந்த மனிதனோ அல்ல. இயேசு அல்லாமல் வேறு யாரும் நமக்காகச் சிலுவையில் அறையப்படாமலிருக்கும் போது, கொரிந்து பட்டணத்தார் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களல்லாமல் வேறொருவரைச் சேர்ந்தவர்களாக எப்படி இருக்க முடியும்?.

ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக வந்து அவரோடு ஒன்றாயிருப்பதற்கு இயேசுவின் நாமத்தில் திருமுழுக்குப் பெற வேண்டும் (எபே. 5:25-32). கொரிந்து பட்டணத்தார் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருந்தபடியால், அந்த ஞானஸ்நானம் அவர்களைப் பவுலின் சரீரத்திற்குள்ளோ, அப்பொல்லோ மற்றும் கேபாவின் சரீரத்திற்குள்ளோ சேர்க்கவில்லை (அப். 2:47). அவர்கள் பெற்ற ஞானஸ்நானம் அவர்களை இந்த மனிதர்களுடைய சபைகளில் சேர்க்காத காரணத்தினால் அவர்களைச் சேர்ந்தவர்களாக அவர்கள் எப்படி இருக்க முடியும்? அவர்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்திருக்க வேண்டும். காரியங்கள் இவ்விதமாக இருக்கிறபடியால், கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே தான் இருக்கிறார்கள்.

ஒருவர் கிறிஸ்துவைச் சேர்ந்தவராயிருக்கிறபடியால், இயேசு தனக்காகச் சிலுவையில் அறையப்பட்டார் என்பதை அங்கீகரித்து புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருக்கிற ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிகிறார். மேலும், அவர் பவுலின் அங்கத்தினராகவோ அப்பொல்லோ மற்றும் கேபாவின் அங்கத்தினராகவோ இருக்க முயற்சி செய்யாதபடியினால், கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரிக்கும் குற்றத்தை அவர் செய்யவில்லை.

கொரிந்து சபையின் அங்கத்தினர்கள், நான் பவுல் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன், அப்பொல்லோ கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன், கேபா கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என வகைப்படுத்திக் கொள்ள முயற்சித்த போது, ஆரோக்கியமற்ற, அபாயகரமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டார்கள். தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத்

தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம் (லூக். 11:17). கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரித்ததினால் அவர்கள் மாம்சத்திற்குரியவர்களா னார்கள் (1கொரி. 3:3). கர்த்தர் கட்டாத, போதிக்காத, ஆதரவளிக்காத ஒன்றை உருவாக்கின குற்றத்திற்கு ஆளானார் கள். இயேசு தாம் திராட்சைச் செடி என்றும், சீஷர்கள் கொடி என்றும் தான் சொன்னார் (யோவான் 15:1-7). பல பிரிவு களைச் சார்ந்தவர்களும் தன்னுடைய கொடிகள் என்று அவர் சொல்ல வில்லை.

கொரிந்து சபை தனக்குள் பவுலின் சரீரம், அப்பொல்லோவின் சரீரம், கேபாவின் சரீரம் எனப் பிரிந்து மிகப்பெரிய பாவத்தைச் செய்தது. அந்தப் பிரிவினை சரீரங்கள் அதன் அங்கத்தினர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களை இரட்சிக்க முடிய வில்லை. கிறிஸ்தவர்கள் இயேசுக் கிறிஸ்துவையல்லாமல், வேறொரு வரைச் சேர்ந்தவர்களாக மாறும்போது, அவர்கள் மற்றவர்களைப் பின்பற்றி தங்களை இரட்சித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்ற குற்ற உணர்வுக்கு ஆளாகிறார்கள். வேத வசனத்தின் அடிப்படையில் இதைச் செய்ய முடியாது. செய்யப்படவும் கூடாது. இருந்த போதிலும், உலக முழுவதிலும் பவுலின் சபையிலும், பேதுருவின் சபையிலும் அங்கம் வகிக்க முயற்சிக்கிறவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள் என்பது மிகவும் துக்கமான ஒன்று.

## தேவனுடைய வார்த்தை கழிந்து கொள்ளும் நாவின் செயல்பாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | கோள் சொல்லுதல் | (லேவி. 19:16) |
| 2. | பொய்ச்சாட்சி சொல்லுதல் | (யாக். 20:16) |
| 3. | புறங்கூறுதல் | (ரோமர் 1:30) |
| 4. | அவதூறு பேசுதல் | (1 தீமோ. 3:11) |
| 5. | வீண் பேச்சுப் பேசுதல் | (தீத்து 1:10) |
| 6. | தகாத காரியங்களைப் பேசுதல் | (1 தீமோ. 5:13) |
| 7. | பொய் பேசுதல் | (மத். 12:31) |
| 8. | தூஷணம் பேசுதல் | (மத். 12:31) |
| 9. | சபித்தல் | (யாக். 3:9) |
| 10. | மோசம் போக்குதல் | (வெளி. 12:9) |

# தேவனுடைய ஜனங்களை விவரித்தல்

# Describing God's People

***R.H. Tex Williams***

**அ**நேகருக்கு அவர்கள் எங்கே வாழ்கிறார்கள் என்பதைவிட அவர்களுக்கான பெயர் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. நம் பெயர்கள் நமக்கு மிக முக்கியமானது. ஏனென்றால், அவைகள் தான் நம்மை பல்வேறு விதங்களில் அடையாளப்படுத்துகிறது. கடந்த காலங்களிலும், இன்னும் பல இடங்களில் பெயர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏனென்றால், அவைகளுக்குப் பொருள் உண்டு. உதாரணமாக, இயேசுவின் சீடராக இருந்த சீமோன் இயேசுவால் கேபா என்று அழைக்கப்பட்டார். கேபா என்றாலும் பேதுரு என்றாலும், ஒன்று தான், அதன் பொருள் "கல்" என்பதாகும். நம் ஆண்டவர் இந்த மனிதனைப் பின்பு ஏன் அப்படி அழைத்தார் என்பதை நாம் பார்ப்போம், ஏனென்றால், பேதுரு கர்த்தருக்கான வேலையிலும், தன்னுடைய விசுவாசத்திலும் அசையாதவராய் ஒரு கல் போல் உறுதியாக நின்றார்.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பதற்காக பெயர்களையும் அல்லது குறிப்பான அடையாளங்களையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்த விவரிப்புகள் பெயர்கள் ஒருவரைப் பற்றிச் சொல்வதை விட அதிகமாகச் சொல்கிறது. உதாரணமாக, என் பெயர் வில்லியம்ஸ், என்னை அறிந்தவர்களுக்கு அது என்னை அடையாளப் படுத்துகிறது. அந்நியர்கள் கூட என்னைப் பற்றி அதிகமாகச் சொல்லும் அளவுக்கு என்னைக் குறிப்பதற்கு அநேக விவரிப்பு வார்த்தைகளைப் பயன்படுத்தலாம் அல்லது என்னைப் பலவிதமாக அழைக்கலாம். என்னை திருமணம் ஆனவனென்று அழைக்கலாம். அது எனக்கு மனைவி இருப்பதையும், திருமணத்திற்குண்டான எல்லாப் பொறுப்புகளையும் நான் ஏற்றுக்கொண்டதையும் அடையாளப் படுத்துகிறது. நான் தகப்பன் என்றும் அழைக்கப்பட முடியும். அதன் பொருள், எனக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும், அவர்களைப் போஷிக்கும் பொறுப்பையும், வளர்க்கும் பொறுப்பையும், நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்பதுமாகும். வெறுமனே பெயர் என்பதை விட ஒருவரோ அல்லது ஒரு குழுவினரோ என்னவாக இருக்கிறார் அல்லது இருக்கிறார்கள் என்பது அதிக விவரத்தைக் கொடுப்பதாக இருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றினவர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் சிறப்பான பொருளைக் கொண்டிருந்தன. அப்போஸ்தலர் 11:20 ல், முதல் முதல் அந்நியோவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று என்று லூக்கா எழுதுகிறார். அவர்கள் இயேசுவையும் அவருடைய போதனைகளையும் உற்சாகமாகப் பின்பற்றினபடியால் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டார்கள். அது கிறிஸ்தவர்களல்லாதவர்களால் கிறிஸ்தவர்களுக்கு வெறுமனே கொடுக்கப்பட்ட பெயரல்ல, ஏனென்றால், பின்பு பேதுரு, *தேவ ஆவியினால் ஏவப்பட்டு ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதனால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்* என்று சொல்கிறார் (1 பேதுரு 4:16).

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அவர்கள் யார் என்பது சம்மந்தமாக பல்வேறுபட்ட நிலைகளைக் காட்டுவதற்கும், அவர்கள் வாழ்கின்ற உலகில் என்னவாக இருக்க வேண்டுமென்பதைக் காட்டுவதற்கும் பல பெயர்களைத் தம் ஜனங்களுக்கு தேவன் கொடுத்திருக்கிறார். உதாரணமாக, தேவனுடைய ஜனங்கள் வேதாகமத்தின்படி "கிறிஸ்துவின் சபையார்" என்றழைக்கப்படுகிறார்கள். ரோமர் 16:16 ல் " *கிறிஸ்துவின் சபையார்* " உங்களை வாழ்த்துகிறார்கள் என்று எழுதுகிறார். பவுல் மக்கதோனியா, அகாயா, கொரிந்து மற்றும் பல இடங்களில் சபையாரோடு இருந்தார். எவ்வித சந்தேகமுமின்றி ரோமாபுரியில் இருந்த சகோதரர்களுக்குத் தான் கடிதம் எழுதப்போவதாக கிறிஸ்தவர்களிடம் சொன்னார், எனவே, எல்லோரும் பவுலின் நிருபம் மூலமாக தங்கள் வாழ்த்துதல்களை அனுப்பினார்கள்.

புதிய ஏற்பாட்டில் சபை என்கிற வார்த்தை கிறிஸ்துவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களின் அமைப்பைத் தான் எப்போதும் குறிக்கிறது. இயேசு *நான் என் சபையைக் கட்டுவேன்* என்று சொன்னார் (மத். 16:18). சபை கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களால் உண்டாக்கப்பட்டது. ஏனென்றால், அவர்கள் அவருடைய சுய இரத்தத்தினாலே வாங்கப்பட்டார்கள் (அப். 20:28). கிறிஸ்துவின் சபை என்கிற பதம் (கிறிஸ்துவுக்கு சொந்தமான சபை என்று பொருள்) ஒரு மார்க்கப் பிரிவினைப் பெயரைக் கொண்டதல்ல, மாறாக, தேவனுயை ஜனங்களை விவரிப்பதற்காக வேதாகம அடிப்படையில் கொடுக்கப்பட்ட பெயராகும், அது அவர்கள் கிறிஸ்துவின் உடைமைகள் என்பதைத்தான் காட்டுகிறது. ஏனென்றால், கிறிஸ்து அவர்களுக்காக தமது இரத்தத்தைக் கிரயமாகச் செலுத்தினார்.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்காக வேதாகம அடிப்படையிலான பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 1 தீமோ. 3:15ல், எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் வேலை செய்து கொண்டிருந்த தீமோத்தேயுவிற்கு தான் இவ்விதமாக எழுதினதாகப் பவுல் கூறுகிறார். *தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. இந்த வசனத்தில் தேவனுடைய*

ஜனங்கள் மூன்று விதமாக அழைக்கப் படுகிறார்கள். முதலாவது, தேவனு டைய வீடாக அல்லது தேவனுடைய குடும்பமாக விவரிக்கப்பட்டிருக்கிறார் கள். இந்தப் பட்டம் எல்லா கிறிஸ்த வர்களும் தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. தேவன் நம் தகப்பனாக இருக்கிறார் நாம் சகோதர சகோதரிகளாயிருக்கிறோம். தேவன் தம்முடைய குடும்பத்தைப் போஷிக் கிறார், நாம் ஜெபத்தின் மூலமாக அவருடைய சகாயத்திற்காகவும், பராமரிப்பிற்காகவும் அவரிடம் மன்றாடு கிறோம். எந்த ஒரு குடும்பத்திலும் சகோதர சகோதரிகள் எப்படி ஒருவரோ டொருவர் குடும்ப உறவை வைத்துக் கொள்கிறார்களோ, அது போல கிறிஸ்தவர்களுக்கும் ஒருவரோ டொருவர் குடும்ப உறவு இருக்கிறது.

மேலும், இந்த வசனத்தில் தேவனுடைய ஜனங்கள் ஜீவனுள்ள தேவனுடைய சபையாக அழைக்கப் பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு தேவன் ஜீவனுள்ளவராயிருக்கிறார், அவர் நம் இரட்சிப்பையும், மீட்பையும் திட்டமிட்டபடியால் நாம் அவருடைய வர்களாயிருக்கிறோம்.

அதன் பின்பு பவுல், கிறிஸ்தவர் கள் சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமு மாயிருக்கிறார்கள் என்று சொல்கிறார். சபையாகிய கிறிஸ்தவர்கள் தேவன், இயேசு, பரிசுத்த ஆவியானவர், இரட்சிப்பு, பரலோகம் போன்றவற்றின் சத்தியத்தைப் பிரசங்கிக்கிறவர்களாக, அதற்கு உத்தரவு சொல்கிறவர்களாக, நிலைத்திருக்கச் செய்கிறவர்களாக இருக்க வேண்டும். சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பொறுப்பு சபைக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவரால் சபை சம்மந்தமாக தோராயமாக 25 பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. எல்லாமே விவரமாகவும் வேத வசனத்தின் அடிப்படையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் மார்க்கப் பிரிவினைப் பெயர்களை விட்டுவிட்டு, தேவன் தம்முடைய ஜனங் களை எப்படி அழைக்கிறாரோ, அவ்வித மாக அழைத்தால் நலமாயிருக்கும். அது நாம் சிறப்பாக சேவை செய்யவும், தூய்மையாக வாழவும் நம்மைத் துரிதப்படுத்தும்.

### சபையில் பிரச்சினை செய்பவர்கள்

**இவர்கள் கிறிஸ்துவுக்கு அடிபணியாதவர்கள்.**

**இவர்கள் அதிகாரத்தை இச்சித்து, குற்றசாட்டுகள் என்னும் சவுக்குகளால் தங்களை தாங்களே அடித்து தாங்களாகவே வெளியேறி விடுகிறார்கள்.**

***- Louise Dominy***

# உண்மைக் கிறிஸ்தவம் - பிளவுபடாதது

## True Christianity - Undivided

*E.Z. Selvanayagam*

"கார் ஒன்று இந்தப் பக்கமாக வந்ததா? பதட்டமாகக் கேட்டார் முதியவர் ஒருவர். பதில் வரவில்லை. மாறாக அங்கிருந்து கேள்விகள் தான் வந்தன. காரா? என்ன கார்? மாருதியா? அம்பாஸிடரா? பியட்டா? இது இளைஞன் ஒருவனின் கேள்விக் கணைகள். "அதெல்லாம் இல்லை, கார் அவ்வளவு தான்" சற்று எரிச்சலுடன் சொன்னார் பெரியவர்.

"என்னையா கோபப்படுகிறீர்? என்ன கார் என்று சொல்லாமல் கார், கார் என்றால் எப்படிச் சொல்லுவது?" எத்தனையோ ரகமான கார்கள் வருகின்றன, போகின்றன. என்ன கார் என்று சொன்னால் தானே சரியாகப் பதில் தரமுடியும்? "இது இளைஞனின் சமாதான விளக்கம் ".

இருவருமே தங்கள் தங்கள் சூழ்நிலையில் நியாயமாகத் தான் நடந்து கொண்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. முதல் முதலில் கார்கள் மார்க்கெட்டுக்கு வந்தபோது எல்லாக் கார்களும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. அந்த நாட்களில் கார் என்றால் போதும், மக்கள் புரிந்து கொள்வார்கள். இன்று அப்படியல்ல, தற்காலத்தில் புதிய புதிய கம்பெனிகள் புதுப்புதுரகமான கார்களை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்குள் விடுகின்றனர். ஆகவே, இளைஞன் பதில் கொடுக்க முடியாமல் தடுமாறினான். அது அவனுடைய குற்றமன்று.

கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இதுவே நிலைமை. அன்றொரு நாள், நடுத்தர வயது உள்ளவர், பார்த்தால் படித்து உத்தியோகம் பார்ப்பவர் போல் தோற்றம். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டார்.

நான் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என்று மரியாதையாகத் தான் சொன்னேன். அவருக்கு கொஞ்சம் வருத்தம். அதைக் காட்டிக் கொள்ளாமல் அதுசரி ஐயா, எந்த ஐக்கியம் என்றுதான் கேட்டேன் என்றார். ஐக்கியம் அது இது எல்லாம் இல்லை. கிறிஸ்துவின் சபை அவ்வளவுதான் என்றேன். அப்படியானால் நாங்கள் எல்லாம் சாத்தான் சபைகளா? என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் பல சபைகளைப் பற்றிய பிரஸ்தாபம் கிடையாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களிடையேயும் வேற்றுமை கிடையாது. ஒரே சபை (எபே. 4:4) கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் (அப். 11:26).

ஆனால், அந்த நிலைமை மாறி வீதிக்கொரு சபை, ஆளுக்கொரு உபதேசம் என்ற நிலை வந்துவிட்டது. ஆகவேதான் அந்த மனிதன் கோபப்பட்டுக் கொண்டார். அது தற்காலத்தில் வாழுகின்ற நம்முடைய குற்றமன்று. ஏனெனில், நாம் இந்த

பிரிவினை வாதத்தை உருவாக்கவில்லை. பல சபைகள் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கிற காலத்தில் நாம் பிறந்திருக்கிறோம். பிரிவினை வாதத்தை நாம் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பூர்வீக சொத்தாக பெற்றுக் கொண்டிருக்கிறோம். தந்தையும், தாத்தாவும் ஏற்றுக்கொண்டனர். நாமும் பின்பற்றுகிறோம்.

இப்படிப்பட்ட காரணங்களால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே சபை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது சற்றுக் கடினமாகத் தோன்றுகிறது. இருப்பினும் முயன்று உண்மையைக் கண்டுபிடிப்போம். ஏனெனில், எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும்படியும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியும் நமக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறதே (1 தெச. 5:21; யோவான் 5:39).

இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். (அப். 2:47) எந்த சபையில்? சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று (அப். 8:3)ல் வாசிக்கிறோம். எந்த சபையை? எப்படி கார் கண்டுபிடித்த நாட்களில் கார் என்றால் மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்களோ அவ்வாறே சபை என்று கொள்ள வேண்டும். இயேசு என் சபையைக் கட்டுவேன் என்று ஒருமையில் சொன்னார் (மத். 16:18) அதாவது, நான் "கிறிஸ்தவத்தை ஸ்தாபிப்பேன்" என்றார். இயேசு சபையில் அன்பு கூர்ந்து.... "தம்மைத்தாமே அதற்கு ஒப்புக்கொடுத்தார்" என்று வாசிக்கிறோம் (எபே. 5:25,27). வேதாகமத்தில் சபை என்றால் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள். உதாரணமாக, இஸ்ரவேலரை சபை என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஏனெனில், தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துக் கொண்டார். (அப். 7:38) சவுல் சபையைத் துன்புறுத்தினான் என்று சொல்லும்போது, ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தினான் என்றே பொருள் (அப். 8:1,3). "சபை" என்பது ஆகுபெயர்; சபையிலுள்ள மக்களையே குறிக்கும். கட்டிடத்தைக் குறிக்காது. சபை என்பது தேவனுடைய ஆவிக்குரிய மாளிகை. அது ஜீவனுள்ள கற்களால் ஆனது (1 பேதுரு 2:5). ஆகவே, சபை என்றால் கிறிஸ்தவர்களையே குறிக்கும்.

மேலும், அப்போஸ்தலன் பவுல் அப். 20:28ல் கூறும்போது இயேசு தம்முடைய இரத்தத்தை விலைக்கிரயமாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்று குறிப்பிடுகிறார். ஆகவே, யார் எல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் சபையில் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இயேசுவின் இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட அழைக்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களே. இப்படி தேவன் அழைக்கப்பட்ட மக்களை, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துக்குட்படுத்தியிருக்கிறார் (கொலோ. 1:13) (சபைக்கு இன்னொரு பெயர் இராஜ்ஜியம் என்று அறிக) எவ்வாறு ஒரு குழந்தை பிறந்தால் தன்னுடைய தகப்பனாருடைய குடும்பத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்படுகிறதோ அதே போன்று மக்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும்போது கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். (யோவான் 3:3,5) சபைக்கு இன்னும் ஒரு பெயர் கிறிஸ்துவின் சரீரம். (கொலோ. 1:18).

மக்கள் ஆவியானவரின் உபதேசங்களைக் கேட்டு (வேத வசனங்களை) அவருடைய சரீரமாகிய சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுகிறார்கள் (1 கொரி. 12:13) வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள், குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாகிறார்கள் என்று

பொருள். எந்தச் சபை என்ற பிரச்னைக்கே இடம் இல்லை. ஏனெனில், வேதாகமத்தில் சபை என்று ஒன்றுதான். ஆனால், இன்றைய உலகில் பல சபைகள் அவதாரம் எடுத்திருப்பதற்கு யார் காரணம்? ஒன்றாக இருந்த சபை இப்படி சின்னா பின்னமானது எப்படி? அதற்கு வேதாகமமே பதில் கூறுகிறது. வாசித்துப்பார்ப்போம்.

**1. விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (1 தீமோ. 4:1)**

விசுவாசம் என்பதை ஆங்கில வேதாகமம் "The faith" என்று குறிப்பிடுகிறது. (அப். 6:7,13:8, 14:22; கலா. 1:23). அதாவது, விசுவாசம் என்பது ஒருமை. (எபே. 4:5).

**2. சுவிசேஷத்தைப் புரட்டுவார்கள் (கலா. 1:7)**

சுவிசேஷப் புரட்டு அபாயகரமானது. ஏனெனில், சுவிசேஷமே கிறிஸ்தவத்தின் இதயம். இதயத்துக்குக் கேடுவந்தால் சரீரத்துக்கு ஆபத்து. அப்படிப்பட்ட புரட்டில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும், வானத்தில் இருந்து வந்த தேவதூதனானாலும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. (கலா. 1:8,9) ஏனெனில், கிறிஸ்தவம் மாசுபடாமல் காக்கப் பட வேண்டும் என்பதே தேவசித்தம்.

**3. ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் (II தீமோ. 4:3)**

ஜென்ம சுபாவமுள்ள மாந்தர்களின் எண்ணம் தேவசித்தத்துக்கு எதிர்த் திசையில் இயங்கும் தன்மையுள்ளது (கலா. 5:17) ஆகவே, தேவ ஆலோசனைகள் பல மனிதர்களுக்குப் பிடிக்காது. அதனால் தேவன் அவர்கள் பொய்யை விசுவாசிக்கும் ஆவியை அவர்களுக்குள் அனுப்புவார் (II தெச. 2:10,12).

இப்படியாக மனிதர்கள் தூய கிறிஸ்தவத்தின் தன்மையைக் கறைப்படுத்தி கட்டுக்கதைகளை விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

**4. கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குவார்கள்**

அப்போஸ்தலன் பவுல் ரோம் நகரில் உள்ள சபையாருக்கு " சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல் களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டுவிலக வேண்டும் " என்று புத்தி சொல்லுகிறார் (ரோமர் 16:17). அப்போஸ்தலன் யோவான் கூட கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனையுடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால் அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். (II யோவான் 9,11) இருந்தபோதிலும் தற்காலத்தில் மனிதர்கள் கிறிஸ்துவின் தூய உபதேசத்தை உதறித் தள்ளிவிட்டு தங்கள் மனம் போல் நடக்கின்றனர்.

**5. முதலாம் நூற்றாண்டுச் சபைக்குள் மாம்ச சிந்தையுள்ள மனிதர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டு வந்து புகுத்தினர்**

பவுல் கொரிந்து சபையாருக்கு கருத்து ஒருமித்தவர்களாகவும், பிரிவினை யற்றவர்களாகவும் ஒருமனமும், ஒரு சிந்தனையுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்க வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார்; (1 கொரி. 1:10) ஆனால், பிரிவினை மார்க்கம்

உருவானதே இங்கேதான் என்று எண்ணும்படி நான் அப்பெல்லோவைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் தனித்தனி முத்திரை குத்திக்கொண்டு போர்க்கோலம் பூண்டனர் (1 கொரி. 1:12). இந்தப் பிரிவினை வாதம், இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவரைத் தொழுகிற மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை அர்த்த மற்றதாக்கிவிட்டது. (யோவான் 17:20,21) அப்போஸ்தலன் பவுல், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்து கொள்ள வேண்டும் என்று உருக்கமாய் வேண்டுகோள் விடுக்கிறார். ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்பதை விளக்கி பிரிவினை பாவம் என்று சொல்லாமல் சொல்லுகிறார் (எபே. 4:3,7). அவர் வேண்டுகோளும் இன்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

### 6. இறுதியாக சபையை விட்டே விலகினார்கள்

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதரையே கடித்த கதையாக, முதலில் விசுவாசத்தை விட்டுவிலகிய மனிதன். கொஞ்சம் கொஞ்சமாய் சுவிசேஷத்தை, சத்தியத்தை, கொள்கையை, ஐக்கியத்தை விட்டுவிலகி இறுதியாக சபையை விட்டே விலகினர் (அப். 20:28,30).

தூர்போன மண்சட்டி நாளுக்கு நாள் மேலும், மேலும் விரிசல் அடைவது போல் அன்று விதைக்கப்பட்ட பிரிவினை வாதம் என்ற நச்சுச் செடி, பிரிவினை மார்க்கங்களாக வளர்ந்து பெருகி இன்றைக்கு எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்து மறைத்துக் கொண்டிருக் கின்றனர். இது குருடர்கள் யானையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கதையைத் தான் நினைவூட்டுகிறது. ஆனால், சபை வரலாற்றைப் படிருக்கும்போது கிறிஸ்த வத்தில் இன்று நிலவும் பிரிவினைகளால் உண்மைக் கிறிஸ்தவத்துக்கு ஏற்பட்டிருக் கின்ற தலைக்குனிவை அறிந்து வேதனைப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன?

1. யூதா நிருபம் மூன்றாம் வசனம் கூறுகிற வண்ணம் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டும்.
2. தடம் புரண்டு கிடக்கிற சுவிசேஷம் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.
3. மாந்த ஞானத்தால் கறைபடாத சத்தியம் போதிக்கப்பட வேண்டும்.
4. கள்ளப் போதகங்களின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்பட வேண்டும்.
5. ஆரோக்கியமான உபதேசங்கள் பறை சாற்றப்பட வேண்டும்.
6. பிரிவினையைத் தகர்த்து ஐக்கியத்தை (Unity; Not Union) உருவாக்க வேண்டும்.
7. அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டு ஆதியில் நிறுவப்பட்ட ஒரே சபையை மீட்டு அமைக்க வேண்டும்.

சுருங்கக் கூறின், முதலாம் நூற்றாண்டில் இருந்த தூய புதிய ஏற்பாட்டுச் சபை மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். இதற்கு நீங்கள் தயாரா? ⁂

# தம்முடைய ஜனங்களுக்கான தேவனுடைய நோக்கங்கள்

# God's Purposes For His People

*Ron Bryant*



தம்முடைய ஜனங்களைக் குறித்த தேவனுடைய நோக்கங்களை நாம் உற்று நோக்கும் போது சில காரியங்கள் நிச்சயமாகிறது. இது ஒரு நிச்சயத்துடன் தொடங்குகிறது. அது என்னவென்றால், தேவன் தம்மை சிருஷ்டிப்பின் கிரியையிலும், மீட்பின் கிரியையிலும் வெளிப்படுத்தியிருக்கிறார். மற்றுமொரு நிச்சயம் என்னவென்றால், தேவன் தாம் செய்த எல்லாவற்றிலும் மனித இனத்தின் மீதான தம்முடைய அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வெளிப்பாட்டில் மனிதனைக் குறித்தான தம்முடைய சித்தத்தையும், தம்முடைய அன்பான திட்டத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். இவைகள் எல்லாவற்றையும் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சபை உண்மையானதென்றும், அது தேவனுடைய அன்பையும், ஞானத்தையும், வல்லமையையும் வெளிப்படுத்துகிறதென்றும், அது உயரிய மற்றும் பரிசுத்த நோக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டதென்றும், சபை தேவனுடைய நித்திய நோக்கத்தை வெளிப்படுத்தவே ஸ்தாபிக்கப்பட்டதென்றும் நிச்சயமாகிறது (எபே. 3:10,11). சபையானது புதிய உடன்படிக்கையின்படியும், கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற மீட்பின்படியும் தேவனுடைய ஜனங்களை உள்ளடக்கியதாயிருக்கிறதென்பதும் நிச்சயமாகிறது (எபே. 1:3-14,20,21; 5:23-31).

மீட்கப்பட்ட விசுவாசிகளை உள்ளடக்கியவர்களைக் குறித்த தேவனுடைய நோக்கம் மும்மடங்கானதாகும். முதலாவதாக, சபைக்கான தேவனுடைய திட்டமும், நோக்கமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், குடும்பத்தை உருவாக்கி, அதை ஆவிக்குரிய தன்மை உடையதாக மாற்றி, தேவனுடைய அன்பினால் ஆளப்படுகிற ஒன்றாக மாற்ற வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. தேவனுடைய குடும்பத்தில் ஒவ்வொரு குழந்தையும் மன்னிப்பு, அன்பு மற்றும் ஏற்றுக்கொள்ளப்படுதல் போன்றவற்றால் ஆசீர்வதிக்கப்படுகிறது, இது குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரோடும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. அந்தக்

குடும்பம் கிறிஸ்துவின் கிரியை மூலமாக உருவானது. கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே அந்தக் குடும்பத்தில் இருக்கிறார்கள் (1 தீமோ. 3:15; எபே. 2:19).

இரண்டாவதாக, தேவன் மானிடரூபமெடுத்து வந்த இயேசு விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதற்காகவும், கிறிஸ்துவின் சரீரமாக செயல்படுவதற்கும், அது ஆவிக்குரிய சரீரமாக இருக்கும்படிதான் சபையை உருவாக்கினார். சபை மூலமாகத்தான் அவர் ஆளுகை செய்கிறார்; விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் *ஒரே சரீரமாயிருக்கிறார்கள்.*

அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் மாத்திரம் அங்கத்தினராக இருக்கவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் அங்கத்தினர்களுமாயிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையிலே அவர்களால் சேவை செய்ய முடியும், இருந்த போதிலும் தேவனுடைய நோக்கம் அவர்களையும் ஈடுபடுத்துகிறது (ரோம 12:1-5; 1கொரி. 12:12) தேவனுடைய நோக்கத்தில், சரீரத்தின் பெலன், இசைவாய்க் கூட்டி இணைக்கிற கணுக்களையும் உள்ளடக்கும் (எபே. 4:15,16) கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே அந்த ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கிறார்கள்.

மூனறாவது, தேவனுடைய திட்டம் பரிசுத்த ஆவியானவர் மூலமாக, ஜீவனுள்ள கற்களினால் ஆவிக்குரிய ஆலயத்தைக் கட்டுவதாக இருந்தது. அதில் தேவன் தம்முடைய சாயலையும், வல்லமையையும் வெளிப்படுத்தி இறுதியில் அந்த ஆலயம் சேவை செய்து, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்பதும், சபை தன்னுடைய உண்மையான மதிப்பை அறிந்து கொள்ள வேண்டுமென்பதும் தேவனுடைய விருப்பமாயிருந்தது. விசுவாசிகள் தேவனுடைய அன்பைத் தழுவும் குடும்பம் மாத்திரமல்ல, தேவனுடைய முக்கியத்துவத்தையும், ஐக்கியத்தையும் உணர்கிறவர்களாயுமிருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்ய திறமைமிக்கவர்களாக இருக்கத்தக்க அடையாளத்தைத் தரித்துக் கொள்ளுகிற ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிறார்கள், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் தான் அந்த ஆலயமாயிருக்கிறார்கள் (எபே. 2:19-22).

சபைக்கான தேவனுடைய நோக்கங்கள் (1) அடையாளம் (ஆவிக்குரிய குடும்பம்) (2) செயல்பாடு (விசுவாசிகளின் ஒன்றிணைக்கப்பட்ட சரீரம்) (3) தன்மை (பரிசுத்த ஆலயம்) போன்றவற்றை ஏற்படுத்துகின்ற திட்டங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மேலும், தேவனுடைய நோக்கங்கள் அவருடைய குணாதிசயத்தின் வெளிப்பாடாயிருக்கிறது. அன்பின் காரணமாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மனித இனத்தின் ஏக்கங்களையும், தேவைகளையும் அவர் சந்திக்கிறார். பாதுகாப்பு, முக்கியத்துவம் மற்றும் திறமை போன்றவற்றின் தேவைகளெல்லாம் சபையில் அவருடைய பராமரிப்பில் நிறைவேற்றப்படுகிறது. இந்த உலகில் தம்முடைய ஜனங்களாயிருக்கும்படி யாரைத் தேவன் அழைத்தாரோ அவர்கள் மூலமாகத் தம்மைப் பற்றிய சத்தியத்தை நிரூபிக்க அவர் தெரிந்து கொண்டார். ஆகவே, தேவனுடைய நோக்கங்கள் இருதயத்திலும், மனதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறதாக உள்ளது.

**ந**ம் ஆண்டவருடைய நோக்கம் மனிதனுடைய வளர்ச்சி அல்ல;
மாறாக, தம்மைப் போல மனிதனை ஆக்குவது தான் அவருடைய நோக்கம்.



# இவருக்குச் செவி கொடுங்கள்

# Listen To Him

### *Leon Barnes*

**ஒ**ரு நிமிடத்திற்கு உங்களை சீமோன் பேதுருவாக கற்பனை செய்து கொள்ளுங்கள். இயேசுவால் தெரிந் தெடுக்கப்பட்ட பன்னிருவரில் ஒரு வராக உங்களை வைத்துக் கொள் ளுங்கள். நீங்களாகவே முன்வந்து உங்கள் வியாபாரத்தையும், குடும்பத் தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்ற வும், அவருக்காக வாழவும் முடிவெடுக் கிறீர்கள். இந்த நாளில் நம் எஜமான் ஜெபிக்க ஒரு மலைக்கு ஏறும்போது உங்களையும், யாக்கோபையும், யோவானையும் அவரோடு அழைத்துச் செல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இயேசுவோடு சேர்ந்து ஜெபிக்கும் போது தூங்கி விடுகிறீர்கள். ஏனென்றால், மலையில் நீங்கள் மேற் கொண்ட நடை உங்க ளுக்குச் சோர்வை ஏற்படுத்திவிட்டது.

திடீரென நீங்கள் அதிர்ச்சி யடைந்து விடுகிறீர்கள், இயேசுவின் ரூபம் முற்றிலுமாக மாறுவதை நீங்கள் காணும்படி உங்கள் கண்களைத் திறக்கிறீர்கள்! அவர் பனியைப்போல் வெண்மையாயிருக்கிறார்! அவருடைய முழுத் தோற்றமும் மின்னுகிறது! மேலும், மோசேயும், எலியாவும் அவரோடு பேசுவதைக் காண்கிறீர்கள். அவர்கள் வரப்போகிற இயேசுவின் மரணத்தைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அந்தச் சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதபடி யால், நீங்கள் இயேசுவிடம் நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று சொல்கிறீர்கள். நீங்கள் பேசிக் கொண்டிருக்கையில் ஒளியுள்ள ஒரு மேகம் உங்கள் மேல் நிழலிட்டு *இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலி ருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று* (மத். 17:1-5).

நீங்கள் உங்களைப் பேதுருவாக கற்பனை செய்து கொண்டீர்களானால் இந்த முழுச் சம்பவமும் உங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறதாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?

எப்படியிருந்தாலும், நீங்கள் ஆலோசனையாகச் சொன்னதில் என்ன தவறு இருக்கிறது? முதலாவதாக, மூன்று கூடாரங்களைக் கட்டுவோம் என்பது,

இது தங்குவதற்கான இடம் என்கிற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. மேலும், இத்திட்டம் மலை உச்சி, தேவனுடைய பிரசன்னத்தை உணரக்கூடிய அந்த உயர்வான இடம் ஜனங்களிடமிருந்து தனித்திருக்கும் அனுபவம், ஒரு மட அமைப்பிலான சூழ்நிலை, இதுபோன்ற இடங்களில் தான் நாம் வாழ விரும்புகிறோம் என்கிற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. ஆனால், இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ மலைகளில் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டத்தில் ஒருபோதும் இருந்ததில்லை. சமவெளியில் தான் வேலை செய்யப்பட வேண்டியதாயிருந்தது,

இரண்டாவதாக, அந்த எண்ணம் தவறானதாக இருந்தது.. ஏனென்றல், அது மோசேயையும், எலியாவையும், இயேசுவுக்குச் சமமாக்கியது. அவர்களிருவரும் மாபெரும் மனிதர்கள் தான். ஆனால், இயேசு மானிட உருவில் வந்த தேவனாயிருக்கிறார் (யோவான் 1:1,14).

அநேகமாக பேதுருவின் ஆலோசனையில் மிக முக்கியமான தவறு என்னவென்றால், அவர் செவி கொடுத்திருக்கவேண்டிய வேளையில் பேசினார். தேவனுடைய பதில் இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்பது. இவருக்குச் செவி கொடுங்கள் என்பது. நாமெல்லாரும் அடிக்கடி எதிர்கொள்கிற பிரச்சனை இதுவாக இருக்கிறதல்லவா? பேதுருவைப் போல நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு சூழ்நிலைக்கும் பதிலளித்திட வேண்டும் அல்லது ஏதாவது கருத்துக்களைத் தெரிவித்துவிட வேண்டுமென்று தான் நாம் எல்லோரும் நினைக்கிறோம். ஆனால், என்ன சொல்வதென்று நமக்குத் தெரிவதில்லை, அப்படியிருக்கும் போது எதையும் சொல்லாமல் இருப்பது புத்திசாலித்தனமாகும். தேவன் நமக்கு இரண்டு காதுகளையும், ஒரே ஒரு வாயையும் தந்திருப்பது நமக்கு ஏதோ ஒன்றைச் சொல்கிறது.

இயேசுவும், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் பதிவு செய்திருக்கிற முக்கியமான கருத்து என்னவென்றால், நாமெல்லாரும் கேட்கிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எனவே, தான் யாக்கோபு, *யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவன்* என்று எழுதினார் (யாக். 1:19).

தேவன் நாம் கேட்கவேண்டுமென்று விரும்புகிற எத்தனை காரியங்களை இப்படிப்பட்ட எண்ணத்தால் இழந்து போயிருக்கிறோம். அதற்கு காரணம், அடுத்ததாக நாம் என்ன சொல்லப்போகிறோம் என்பதைத் தீர்மானிக்க முயற்சிப்பதில் பரபரப்பாக

இருப்பதே. அநேகருக்கு காதுகள் இருக்கின்றன. ஆனால், கேட்பதில்லை. நாம் கற்றுக்கொள்வதற்கு உண்மையாகவே முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களின் மீது நாம் கவனம் செலுத்துவதில்லை.

இயேசுவும், அந்த மூவரும் மலையில் நடந்து கொண்டிருந்த போது, முதலில் வர வேண்டியதாயிருந்த எலியா தான் யோவான் ஸ்நானகன் என்று இயேசு விளக்குவதை அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கேட்டதையும், கண்டதையும் இயேசுவின் உயிர்த்தெழுதல் வரை அவர்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளும்படி கட்டளையிடப்பட்டார்கள். ஆனால் அவர்கள் மலை அடிவாரத்திற்கு இறங்குவதற்கு முன்பாக அங்கே அமளியும், சலசலப்பும் ஏற்பட்டது. பிசாசால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு சிறுபையன் சீடர்களிடத்தில் கொண்டு வரப்பட்டான். இயேசு அவர்களுக்கு பிசாசுகளை துரத்தும் வல்லமையைக் கொடுத்திருந்தார். அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தபோதும் அங்கே ஒன்றும் நடக்கவில்லை. ஏமாற்றத்துடன் அந்த தகப்பன் தன் மகனை இயேசுவிடம் கொண்டு வந்தார். ஆண்டவரே என் மகனுக்கு இரங்கும் என்பதே அந்த தகப்பனுடைய கூக்குரலாக இருந்தது. இயேசு அந்தப் பையனை சுகமாக்கி சீடர்களின் அவிசுவாசத்தின் காரணமாக அவர்களைக் கடிந்து கொண்டார்.

இயேசு பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தன்னோடு மலைக்கு அழைத்துச் சென்றதற்கான காரணம் அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கச் செய்வதற்காக இருக்குமோ? செய்யப்பட வேண்டிய வேலை சமவெளயில் தான் இருக்கிறது. ஆனால், வேலையைச் செய்வதற்கான விசுவாசமும், பெலனும் மலை உச்சியில் செய்யப்படும் ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்பதிலும் தான் இருக்கிறது. ※

## இயேசுவுக்கு முதலிடம் கொடுப்பேன்

என்னைச் சுற்றி இருக்கும் உலகத்தின் மீது எனக்கு இப்போது ஈர்ப்பு இல்லை:
அதன் சந்தோஷம் வேதனையைக் கொண்டு வருகிறது, அதன் ஞானம் வீணானது;
உறுதியான, நிச்சயமான ஓர் அஸ்திபாரத்தை நான் தேடுகிறேன்
நான் என் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுப்பேன்.

எனக்கு இரட்சிப்பை உண்டுபண்ணுவதற்காக கர்த்தராகிய இயேசு மரித்தார்
எனக்குப் பதிலாக அவர் கல்வாரிக்குச் சென்று இரத்தம் சிந்தினார்;
மீட்பு என்னை எல்லாப் பாவத்தையும் விட்டு விட தூண்டுகிறது
நான் என் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுப்பேன்.

# நியாயாதிபதி

# *The Judge*

### *B. Arjunan*

உலகத்திலே அநேக நியாயாதிபதிகளைக் குறித்துக் கேள்விப்படுகிறோம். வேதாகமத்திலும் அநேக நியாயாதிபதிகள் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். வானத்திற்கும் பூமிக்கும் ஒரே ஒரு நியாயாதிபதி இருக்கிறார். அவரைக் குறித்து இந்த நாளில் தியானிப்போம். யோசுவாவிற்கு பின்பு தேவன் அநேக நியாயாதி பதிகளை ஏற்படுத்தினார் என்று நியாயாதிபதிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இந்த நியாயாதிபதிகள் இஸ்ரவேலரை கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு இரட்சித்தார்கள் என நியா. 2:16ம் வசனத்தில் வாசிக்கிறோம். தேவன் தம்முடைய ஜனத்தை நேசித்தபடியால் அவர்களுக்கு நியாயாதிபதிகளைக் கொடுத்தார். இந்த நியாயாதிபதிகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டபடியால், தேவனுக்குப் பயந்து நியாயம் விசாரித்து தேவ ஜனங்களை வழி நடத்திக் கொண்டு வந்தனர். இன்றும் நியாயம் விசாரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், நியாயம் இல்லை. நியாயம் தள்ளுபடியாகிறது. ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். நீதிமானைப் பார்ப்பது மிக அரிதான ஒன்றாகிவிட்டது. இதற்கெல்லாம் காரணம், ஜனங்கள் சத்தியத்தை விரும்பாமல் மாயைக்குச் செவிகொடுத்து வழிவிலகிப்போனார்கள். குறிப்பாக, இவ்வுலக கலாச்சாரம் முற்றிலும் மாறிப்போய்க் கொண்டிருக்கிறது. இனி விடிவுகாலம் வரும் என்பது கூடாத காரியம். ஏனெனில், தேவனே இப்பூமியை அழிக்கத் திட்டம் கொண்டுள்ளார். ஆகையால், நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கூடுமானவரை நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டு நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசுவின் வருகைக்குக் காத்து அவருக்குப் பயந்திருக்கக்கடவோம்.

இஸ்ரவேலருக்கு கர்த்தர் நியாயாதிபதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் "அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர் களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்து கொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள் " (நியா. 2:17). இன்றைக்கும் கர்த்தருடைய ஊழியக்காரனின் சொல்லைக் கேளாமல் தாங்கள் விட்டுவந்த பாதக மார்க்கத்தினால் கெட்டுப்போகிறவர்களைப் பார்க்கி றோம். " உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தர வாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத் தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக்

கீழ்ப்படிந்து அடங்குங்கள் " என திருமறை போதிக்கிறது. ஆனால், அடங்குகிறார்களா, அடங்காத குதிரைகளைப் போல இருக்கிறார்கள். அந்தப்படியாக இஸ்ரவேலர் நியாயாதிபதிகளுக்குக் கீழ்ப்படியாமல் சோரம்போனார்கள். அது மாத்திரமல்ல. " நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும், சேவிக்கவும், பணிந்து கொள்ளவும், தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிரியைகளையும், தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள் ". இப்படியிருந்தபடியால் தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அக்காலத்தில் நியாயம் விசாரித்து வந்த கிதியோன்; " நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான் " (நியா. 8:23).

அந்தப்படியாக தேவன் எல்லோருக்கும் ஒரே நியாயாதிபதியாக இயேசுவை நியமித்தார். "அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவரே எங்களுக்குக் கட்டளையிட்டார் " என்று பேதுரு தமது பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிடுகிறார் (அப். 10:42). ஆகையால், பிதாவானவர் குமாரனைக் குறித்து சாட்சி கொடுக்கும்போது இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள் என்றார். இன்றைக்கு உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தை உடையவராக கிறிஸ்துவானவர் இருக்கிறார். அவருடைய தீர்ப்பு "சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்". ஆகையால், சத்தியவான் எவனும் அவருடைய சத்தம் கேட்பான். மேலும், "அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் " என பேதுரு குறிப்பிடுகிறார் (1 பேதுரு 2:23). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் தேவனுடைய சித்தம் செய்கிறவராக எங்கும் சுற்றி திரிந்தார். அவரைச் சிலுவையில் அறைந்து பரியாசம் பண்ணும் போதும், அவர் ஒருவனையும் தூஷியாமலும், பயமுறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்முடைய ஆவியை ஒப்புவித்தார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது, சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். மேலும், "பிதாவைக் கனம் பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார் " (மத். 5:22). இன்றைக்கு சின்ன சின்னப் பதவிகளில் இருக்கிறவர்கள், தங்களுக்கு ஏதோ உலகத்தில் கிடைக்கக்கூடாத ஒரு பதவி கிடைத்து

விட்டது போல நடந்துகொள்வார்கள். மற்றவர்களைப் பார்க்கும்போது மிக அற்பமாக எண்ணிக் கொண்டு, தலைக்கனம் நிறைந்தவர்களாக காணப்படு வார்கள். பிதாவாகிய தேவன் ஆண்டவராகிய இயேசுவை உயர்த்தி சர்வ உலகத் தையும் நியாயந்தீர்க்கக்கூடிய பொறுப்பை அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்த நியாயாதிபதிக்கு முன்பாக நாமெல்லோரும் ஒரு நாள் நிற்க வேண்டும் என வேதம் போதிக்கிறது. குற்றவாளிகள் நியாயாதிபதிகளுக்கு முன்பாக நிறுத்தப்படுகிறார்கள் அல்லவா? அதைப்போல நாமெல்லாரும் ஆண்டவர் இயேசுவுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். ஆகையால், " *நீங்கள் குற்றவாளி களென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கா திருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்க ளுக்கும் அளக்கப்படும்* " என்று மத். 7:1,2ல் வாசிக்கிறோம். மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்ப்பதில் பலர் மிகவும் கண்ணுங்கருத்துமாகச் செயல்படு கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும். ஒரு நாளில் நாமும் குற்ற வாளிகளாகத் தீர்க்கப்படுவோம். ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்கக்கூடாது என்று உணர்வடைய வேண்டும். பவுல் ரோம கிறிஸ்தவர் களுக்கு எழுதுகிறார்; " இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே " என்று எழுதுகிறார் (ரோமர் 14:10). நியாயத்தீர்ப்புக்கு ஒருவரும் தப்பமுடியாது. ஏனெனில், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது என்று கர்த்தர் திருவுளம் பற்றுகிறார். அவருக்கு மறைவாக ஒரு காரியமும் இல்லை. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத் தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் என பிரசங்கி சொல்கிறான்.

ஆகையால், இதில் யாரும் போக்கு சொல்ல முடியாது. நம்முடைய கிரியை நம்மோடு கூட வரும். நான் ஆவியில் வைராக்கி யமாயிருந்தேன், பல வருடங்களாக தேவ மனுஷனாக வாழ்ந்தேன். நான் அநேகருக்கு நலமாக காரியங்களைச் செய்திருக்கிறேன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம். " ஏனெனில், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் " (2 கொரி. 5:10). ஒருவேளை சரீரத்தில் அநேகர் தவறு செய்துவிட்டு என்னுடைய தவறை யாரும் பார்க்க வில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால், தேவன் அவைகளை கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கொண்டுவருவார். உலக மக்கள் முன் இவரா இந்த காரியத்தை செய்தது என்று அப்பொழுது வெளியாகும். வெளிக்கு வராத மறை பொருள் இல்லை. இன்று மனிதர்களுடைய கண்களைக் கட்டி பல மாயா ஜாலங்களைச் செய்கிறார்கள். அவர்கள் நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக் கொள்ள முடியாது. உலகக்

குற்றவாளிகளை உலக அரசு கண்டுபிடித்து அதற்குத் தகுந்த தண்டனைகளை வழங்கிக் கொண்டிருக்கும்போது, சர்வத்தையும் ஆண்டு கொண்டிருக்கும் அவருடைய கண்களுக்கு குற்றவாளிகள் தப்பிவிட முடியுமா? ஆகையால், பிரியமானவர்களே, நியாயாதிபதியாகிய கர்த்தருக்குப் பயந்து ஒவ்வொரு நாளும் வாழுங்கள். " அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது " என்கிறார் (வெளி. 22:11,12).

இச்செய்தியை வாசிக்கிற தேவ ஜனமே இதோ, நியாயாதிபதி வாசற் படியிலே நிற்கிறார். அவருடைய சத்தம் கேட்டு உங்கள் இருதயக் கதவைத் திறந்து அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியுங்கள். அநியாயம் செய்கிற மக்களைப் பார்த்து, நீங்களும் அநியாயம் செய்யக் கற்றுக்கொள்ளாதிருங்கள். இன்றைய சமுதாயம் தவறான காரியங்களைக் கற்றுக்கொண்டு அதே தவறில் விழுந்து போய்க் கொண்டிருக்கிறது. நீங்கள் பரிசுத்தமாயிருந்தால் இன்னும் பரிசுத்தமாக முயற்சியுங்கள். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமா யிருக்கட்டும் அவனை பார்த்து நீங்களும் அசுத்தவானாக மாறாதிருங்கள். அவர் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தமாயிருங்கள் என வேதம் போதிக்கிறது. ஆகையால், நாம் நியாயாதிபதிக்கு முன்பாக நீதியுள்ள ஜனங்களாக நிற்க, அவருடைய வசனத்தைக் கைக் கொண்டிருப்போம்.

**நியாயாதிபதியாகிய கர்த்தர் நியாயத்தீர்ப்புக்கு பின்பு கொடுக்கும் பரிசு என்ன?**

நீதியின் கிரீடத்தைக் கொடுப்பார். உலகம் கொடுக்கும் பதவி, பட்டங்கள் எல்லாம் ஒரு நாளில் மண்ணோடு மண்ணாய்ப் போய்விடும். ஆனால், கர்த்தர் கொடுக்கும் நீதியின் கிரீடம் ஜீவகாலமெல்லாம் நம்மோடிருக்கும். ஆகையால், பவுல் இது குறித்துச் சொல்லும் போது; " இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் " என்கிறார் (2 தீமோ. 4:8). இந்த நீதியின் கிரீடத்தைப் பெறத்தக்கதாக உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் இருங்கள். அவருடைய வருகையை எதிர்நோக்கும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என பவுல் சொல்லும் வசனத்தை உற்றுநோக்குங்கள். இப்பூமியிலே நம்முடைய முயற்சி தோல்வி அடைந்திருக்கலாம். பலர் நம்மை ஏமாற்றியிருப்பார்கள். ஆனால், வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் அந்தப்படியே செய்வார். ஆகையால், நியாயத்தீர்ப்பு நாளிலே நீதியின் கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளும் படியாக நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்கு உங்களை அர்ப்பணம் செய்யுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# அகந்தையின் விலை

# *THE PRICE OF ARROGANCE*

## *God Fried Kwao*

" *தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது* " (ரோமர் 15:4). வேதாகமத்தின் சம்பவங்கள் அதை வாசிப்பவர்கள் எல்லோருக்குமே மிகப்பெரிய பாடங்களைப் போதிக்கிறது. ஆனால், குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கு அது மிகப் பெரிய பாடங்களைப் போதிக்கிறது. அகந்தை என்பது மனிதனுடைய மிகப்பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. தேவன் அகந்தையான மக்களைக் கண்டித்திருக்கிறார், தண்டித்திருக்கிறார். அதைப் பற்றிய சில உதாரணங்களை இப்போது நாம் பார்ப்போம்.

**I யூதாவின் ராஜாவாகிய உசியா ( II நாளாகமம் 26)**

உசியா தன்னுடைய பதினாறாவது வயதில் ராஜாவானான். தன்னுடைய ஆவிக்குரிய ஆலோசகரான சகரியாவின் சீர்மிகு வழிநடத்துதலின் கீழ் ஞானமாக அரசாட்சி செய்து தேவனுக்குப் பிரியமாக நடந்து கொண்டான். அவன் தன் சிருஷ்டிகருக்கு உண்மையுள்ள ஆராதனையை ஏறெடுத்தான். அதற்குப் பதிலாக திரளான ஆசீர்வாதங்களை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டான். அப்படியே அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று; அவன் பலப்படும் மட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அனுகூலமுண்டாயிற்று (வசனம் 15).

அதன் பிறகு, துரிதமாக அவன் விழுந்தான். அவனுடைய புகழும், வல்லமையும், அகந்தையாக மாறியது. அவன் கர்த்தருக்கு விரோதமாக எழும்பினான்; தூப பீடத்தின் மேல் தூபங்காட்ட விரும்பினான். அதை அசரியா உட்பட 81 ஆசாரியர்கள் எதிர்த்தார்கள். ஏன் எதிர்த்தார்கள்? உசியா ஆசாரியர்களின் செயல்பாட்டினை எடுத்துக் கொள்ளப் பார்த்தான். ஆசாரியர்கள் வழி வழியாக ஆரோன் வம்சத்திலிருந்து தான் வந்தார்கள்.

**தண்டனை**

A. தேவனுடைய ஆசீர்வாதம் எடுத்துக்கொள்ளப்பட்டது (வசனம் 18)

B. அவன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்துக் கொண்டது, அவன் ஆசரிப்பு வேலைகளைச் செய்ய தகுதியில்லாதவனாகும்படி குஷ்டரோகம் தண்டனையாகக் கொடுக்கப்பட்டது.

C. அவன் ராஜாக்கள் அடக்கம் பண்ணப்படும் கல்லறையில் அடக்கம் பண்ணப்படவில்லை (வச. 23)


## II பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் (தானியேல் 4)

தானியேல் நான்காம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற நேபுகாத்நேச்சாரின் இரண்டாம் சொப்பனத்தில் தற்காலிகமாக அவன் எப்படி கிருபையிலிருந்து விழுவான் என்று காட்டப்பட்டிருக்கிறது. நித்தியமானவர் அவனுக்கு மகிமையையும், வல்லமையையும், செழிப்பையும் கொடுத்திருந்தார். ஆனால், அவன் பெருமையுள்ளவனாகி மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சர்வ வல்லமையுள்ள கர்த்தரின் வல்லமையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், அவன் இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொல்லியிருந்தான் (வச. 30). அவன் தன் அகந்தையான வார்த்தைகளைப் பேசி முடிப்பதற்கு முன்பே, பரத்திலிருந்து ஒரு சத்தம் வந்து அவனை கண்டித்து காட்டில் மிருகங்களுடன் ஏழு வருடங்கள் வாழும்படி செய்தது (வச. 31,32).

### தண்டனை

A. மனித சமூகத்திலிருந்து துரத்தப்படுதல்

B. ஒட்டுமொத்த அவமானம். ஒரு மிகப்பெரும் ராஜா தன் உணர்வுகளை இழந்து காட்டு மிருகத்தைப் போல் நடந்து கொள்வதைவிட அவமானம் வேறெதுவும் இல்லை.



**III கோலியாத் (1 சாமுவேல் 17)**

*நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன் என்று பெருமையுடன் தாவீதிடம் கோலியாத் சவால் விட்டான்* (வச. 44). ராட்சத மனிதனாகிய கோலியாத் தாவீதின் உண்மையான மதிப்பை அறியாதிருந்தான். யுத்தத்தில் கோலியாத் எந்த விதத்திலும் தாவீதுக்கு இணையானவனல்ல. தாவீது கோலியாத்தின் தலையைப் பரிசாக வீட்டிற்கு எடுத்துச் சென்றான்.

**முடிவுரை :**

எல்லா சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களும் சிருஷ்டிகரிடமிருந்து தான் வருகிறது என்பதைக் கவனிப்பது முக்கியமாகும். அவைகளில் ஏதோ ஒன்றை அவர் எப்போது வேண்டுமானாலும் விரும்புகிறபடி திரும்பப் பெற்றுக் கொள்ளமுடியும். அகந்தைக்கு ஒருவர் அதிகமான கிரயத்தைக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அதைத் தவிர்த்து விடுங்கள்! ஓர் அகந்தையுள்ள கிறிஸ்தவன் தாழ்மைப்பட்டால் மீண்டும் தன்னுடைய பழைய நிலைக்குத் திரும்ப முடியும்.

**தனக்கு எதுவும் செய்ய வழியில்லாதவனை ஒருவன் எப்படி நடத்துகிறான் என்பதை வைத்து அவனுடைய குணத்தை நாம் எளிதாகத் தீர்மானிக்க முடியும்.**

## கிறிஸ்து....

| | |
|---|---|
| **கிறிஸ்து வழியாக இருக்கிறார்** | அவரில்லாத மனிதர்கள் காயீனைப் போல் அலைந்து திரிகிறவர்களாயிருக்கிறார்கள். |
| **கிறிஸ்து சத்தியமாயிருக்கிறார்** | அவரில்லாத மனிதர்கள் பிசாசைப் போல் பொய்யர்களாயிருக்கிறார்கள். |
| **கிறிஸ்து ஜீவனாயிருக்கிறார்** | அவரில்லாத மனிதர்கள் பாவத்தில் மரித்தவர்களாயிருக்கிறார்கள். |
| **கிறிஸ்து ஒளியாயிருக்கிறார்** | அவரில்லாத மனிதர்கள் இருளில் நடந்து, எங்கே போகிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள். |
| **கிறிஸ்து திராட்சை செடியாயிருக்கிறார்** | அவரில் நிலைத்திராதவர்கள் கனி கொடாதவர்களாயிருக்கிறார்கள். |
| **கிறிஸ்து கன்மலையாயிருக்கிறார்** | அவர் மீது கட்டப்படாத மனிதர்கள் நியாயத் தீர்ப்பென்னும் வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்படுகிறார்கள். |

# ஜெயங்கொள்ளுகிறவனாக கிறிஸ்தவன்

# The Christian as overcomer

***David Deffenbough***

ஒரு நல்ல கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அவசியமான பண்புகளை, தன்மைகளைப் பட்டியலிடுங்கள் என்று உங்களிடம் கேட்டுக் கொண்டால், உங்கள் பட்டியல் எவைகளை உள்ளடக்கியதாக இருக்கும்? நிச்சயமாகவே நாம் விசுவாசம், நன்மை, பொறுமை, தயை, இரக்கம், நீடிய பொறுமை போன்றவைகளை அந்தப் பட்டியலில் சேர்க்க விரும்புவோம். ஆவியின் கனியிலிருந்து எதையுமே நாம் விட்டு விட விரும்பமாட்டோம். (கலா. 5:22,23), அதுபோல் கிறிஸ்தவ பண்புகளையும் (2 பேதுரு 1:5,7; கொலோ. 3:5-12) வசனங்களில் பவுலால் பட்டியலிடப்பட்டிருக்கிற பண்புகளையும் நாம் விட்டுவிட விரும்பமாட்டோம்.

ஆனால், அந்த பட்டியலில் ஜெயங்கொள்ளுகிறவனைச் சேர்ப்பது குறித்து நம்மில் எத்தனை பேர் யோசிப்போம். சின்ன ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கான கடிதத்தில் இயேசு வாக்குத்தத்தங்களை வழங்கியிருக்கிறார் (வெளி. 2,3 அதி.). ஒவ்வொரு சபையையும் அவர் எப்படிப் பாராட்டியிருக்கிறார் அல்லது கண்டித்திருக்கிறார் என்பதை விட ஒவ்வொரு கடிதத்தையும் அவர் ஒரு வாக்குத்தத்தத்துடன் முடித்திருக்கிறார் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தத்தை வைத்திருக்கிறார்.

நாம் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்க முடியுமா? நம் வாழ்க்கையில் வரும் போராட்டங்களையும், தொல்லைகளையும் எதிர்த்து அவைகளை மேற்கொள்ளுவதற்கு நாம் தயங்குகிறோம். ஜெயங்கொள்ளுவது எளிதான காரியம் அல்ல. அது எதிர்ப்புகள் குறைவாக உள்ள பாதையும் அல்ல. ஜெயிப்பதற்கு அதிகமாகத் தேவைப்படுகிறது, ஆனால், அது அதிகமான ஆசீர்வாதங்களையும் தருகிறது. பெரும்பாலும் நாம் நம் பிரச்சனைகளுக்கும், தொல்லைகளுக்கும் தப்பும்படி சுலபமான வழி வேண்டுமென்று விரும்புகிறோம். வழக்கமாக நாம் அவைகளை நம் வாழ்க்கையிலிருந்து எடுத்துப்போட வேண்டுமென்று தேவனிடம் கேட்கிறோம் அல்லது அவைகளிடமிருந்து நாம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று தேவனிடம் கேட்கிறோம். ஆகையால், நாம் பெரும்பாலும் தேவனுடைய மிகப் பெரிய ஆசீர்வாதங்களை இழந்து விடுகிறோம்.

தம்மைப் பிடிக்க ஒரு கூட்டம் வருகிறதென்பதை அறிந்திருந்த இயேசு அந்த இராத்திரியிலே


கெத்சமனே தோட்டத்திலிருந்து நழுவிப் போயிருந்தால் யார் இயேசுவை குற்றம் சாட்டியிருக்க முடியும்? பதட்டமும், பாடுகளும் நிறைந்த முதல் சுவிசேஷப் பிரயாணத்திற்குப் பிறகு பவுல் ஊழியத்திலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டு தர்சு பட்டணத்திற்கு திரும்பியிருந்தால் யார் அவரைக் குற்றம் சாட்டியிருக்க முடியும்? பரலோகத்தின் தேவன் இயேசுவும், பவுலும் ஜெயங்கொள்ளத் தேவையான பெலனைக் கொடுத்தார். அதே நேரத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களையும் கொடுத்தார்.

அந்த ஏழு சபைகளும் கள்ளப் போதகர்கள், கள்ள அப்போஸ்தலர்கள், ஒழுக்கக்கேடு, உற்சாகமின்மை, உபத்திரவங்கள், பாடுகள் (மரண பரியந்தம்) போன்றவைகளை எதிர் கொள்ள வேண்டியதாயிருந்தாலும், அவர்களுடைய மிகப் பெரிய தேவை ஜெயங்கொள்வதாயிருந்தது. சமரசம், குருட்டுக் கண்ணையும், செவிட்டுக் காதையும் மாற்றுகிறது. தங்கள் நிலையை விட்டுக் கொடுத்தல் போன்ற பதில்கள் எளிதாக இருந்திருக்கும், ஆனால், வாக்குத்தத்தம் ஜெயங் கொள்ளுகிறவனுக்குத் தான். ஆசீர்வாதம் ஜெயங்கொள்ளுகிறவனுக்குத்தான்.

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவான் 5:4.)

## சபை கூடி வருவதின் நன்மைகள்

1. அங்கே கர்த்தருடைய பிரசன்னம் இருக்கிறது (மத். 18:20)
2. அங்கே அன்பு மற்றும் நற்கிரியைகள் செய்யும்படியாக நீங்கள் உற்சாகப்படுத்தப்படுவீர்கள் (எபி. 10:24,25)
3. சபையாகக் கூடி ஆராதித்த பிறகு நீங்கள் நன்றாக உணர்வீர்கள் (சங். 122:1)
4. சபை கூடி வருவதால் தேவனுக்கு கனத்தையும், மகிமையையும் கொண்டு வருகிறோம் (எபே. 3:21)
5. சபையாகக் கூடி வரும் போது தேவனுடைய வார்த்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கப்படுகிறது (தீமோ. 2:15)
6. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது (கலாத். 6:12)
7. அங்கே பாடல்கள் வாயிலாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுகிறோம் (எபே. 5:19).



# திருப்தி

# Contentment

*Royce Frederick*

*தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையும், குறைவு படவும் போதிக்கப்பட்டேன் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு.* (பிலிப். 4:12,13).

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளை எழுதியபோது ரோமாபுரி சிறைச்சாலையில் இருந்தார். முதல் நூற்றாண்டில் ரோம அரசாங்கத்தின் கீழ் வாழ்ந்த ஒரு சிறைக்கைதியால் மனரம்மியமாக வாழ முடிந்திருக்கிறதென்றால் ஜனநாயக அரசாங்கத்தின் கீழ் சுதந்திரமாக வாழும் இருபத்தொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்மால் ஏன் மனரம்மியமாக வாழ முடியாது?

சிலர் மனரம்மியத்தை தங்கள் ஆசைகளில் திருப்தி அடைதல் என்ற பொருளோடு ஒப்பிட்டு குழப்பிக் கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆசைகளெல்லாம் நிறைவேறும்போது திருப்தி அடைவதாக நினைத்துக் கொள்கிறார்கள், எனவே, அவர்கள் காற்றைப் பிடிக்கக் கடந்து செல்கிறார்கள். பொதுவான ஒரு கோட்பாட்டை அவர்கள் கவனிக்கத் தவறுகிறார்கள். நம்முடைய ஆசைகளை நிறைவேற்ற நாம் சதா முயற்சிக்கும்போது, அவைகள் குறைவதற்குப் பதிலாக அதிகமாகிக் கொண்டுதான் போகிறது. ஒரு நிலத்தின் எஜமான்

சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். உண்மையாகவே என் ஆசைகளெல்லாம் மிக எளிமையானதுதான், "எனக்கு வேண்டியதெல்லாம் என் நிலத்தை ஒட்டியுள்ள அந்த இடம் தான்". தன் ஆசைகளில் திருப்தியடையும்படி வெளியே கடந்து செல்லும் மனிதன் அந்த முயற்சியில் ஈடுபடும் போது அதில் சொற்ப திருப்தியையே அடைவான். பவுல் இங்கே சொல்லும் திருப்தி அதுவல்ல.

சிலர் மனரம்மியம் அல்லது திருப்தியை, வாழ்க்கை நிகழ்வுகளை ஒருவர் ஒட்டுமொத்தமாக கண்டு கொள்ளாமல் இருத்தலுடன் போட்டு குழப்பிக் கொள்கிறார்கள். பழங்கால கிரேக்க நாட்டின் ஸ்தோயிக்கர்கள், ஓர் உண்மையான முதிர்ச்சி அடைந்த மனிதன், வாழ்க்கையில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியினாலும், துக்கத்தினாலும் பாதிக்கப்படமாட்டான் என்று நம்பினார்கள். பவுல் இவ்வகையான மனப் பான்மையை நிச்சயமாக குறிப்பிட்டிருக்கமாட்டார், ஏனென்றால், தன்னுடைய கண்ணீர்களையும், சந்தோஷங்களையும் அவர் சுதந்திரமாக குறிப்பிட்டிருக்கிறார் (2 கொரி. 2:3,4). கல் மனதோடு இருப்பது முதிர்ச்சியின் அடையாளமல்ல. பாவமும், துக்கமும், நீதியும், சந்தோஷமும் ஒரு கிறிஸ்தவனுடைய இருதயத்தைத் தொடுகிறது. மன ரம்மியமாக இருப்பதென்பது கண்டுகொள்ளாமல் இருப்பதல்ல.

வேதாகம அடிப்படையிலான மனரம்மியம் என்பது வாழ்க்கைப் பாதையில் எது நடந்தாலும் கவலைப் படாமல் தாழ்மையாக, கிறிஸ்துவையே சார்ந்திருப்பதைத்தான் குறிக்கிறது. அது சாதகத்தினாலோ அல்லது பாதகத்தினாலோ அசைக்கப்படாத ஒரு மனநிலையைக் குறிக்கிறது. அது வாழ்க்கையில் தேவன் எதை ஏற்படுத்துகிறாரோ அல்லது அனுமதிக்கிறாரோ அதை ஆயத்தத்தோடு அப்படியே ஏற்றுக்கொள்வதாகும்.

மனரம்மியத்தைப் பற்றி ஒருவர் இவ்விதமாகச் சொன்னார்: "கடினமான பாதையில் நடக்கும்போது கூட, வழியில் தென்படும் காட்சிகளை இரசிப்பவன் தான் ரம்மியமுள்ளவன் " என்று.

## இது தான் கிறிஸ்து கட்டின சபை

| | |
|---|---|
| தனித்தனி உள்ளூர் சபைகள் | (அப். 14:23) |
| மூப்பர்களால் ஆளுகை செய்யப்படுகிறது | (தீத்து. 1:5,9; எபி. 13:7) |
| உதவிக்காரர்களால் ஊழியம் செய்யப்படுகிறது | (தீமோ. 3:18,13) |
| போதகர்களால் போதிக்கப்படுகிறது | (எபி. 5:12,14) |
| பிரசங்கியார்களால் பிரசங்கிக்கப்படுகிறது | (ரோமர் 10:13,15) |
| அங்கத்தினர்களால் பணி செய்யப்படுகிறது | (ரோமர் 12:4,8) |
| இயேசு கிறிஸ்துவுக்கு கடமைப்பட்டிருக்கிறது | (1 பேதுரு 5:1,4) |



# தேவனுடைய சொந்த ஜனம்

*(1பேதுரு 2:9; தீத்து. 2:14)*

# *God's Special People*

(1 Peter 2:9; Titus 2:14)

## *Don L. Norwood*

ஒரு பொறுப்புள்ள மனிதர் ஆவிக்குரிய பிரகாரமாக மறுபடியும் பிறந்தால் (யோவான் 3:35) அவர் தேவனோடு கொண்டிருக்கும் உறவில் சிறந்த மனிதராகிறார் (1பேதுரு 2:9,11) அந்நேரத்தில் அவர் தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தில் குழந்தையாகவும், நித்திய ஜீவனுக்கு சுதந்திரவாளியாகவும் மாறுகிறார் (கலா. 3:26,29).

எல்லா மனிதர்களும் மாம்ச பெலவீனத்தினால் பாவம் செய்யும்படியான சுபாவத்தை இயற்கையாகவே பெற்றிருக்கிறார்கள், ஆனால், தேவன் ஒரு வழியைக் கொடுத்திருக்கிறார். அதில் தேவனுடைய பிள்ளைகள் பாவமான ஆசைகளையும், இச்சைகளையும் கட்டுப்படுத்தி இந்த வாழ்க்கையை வாழ முடியும். மறுபிறப்புக்குப் பிறகும் சந்திக்கின்ற கடினமான சூழ்நிலை கீழ் காணும் வசனத்தில் காட்டப்பட்டிருக்கிறது (ரோமர் 7:14,25; 8:1; கலா. 5:16,18, 22,25; ரோமர் 8:5,6,14). எல்லோருமே பாவம் செய்யும் சுபாவத்தைப் பெற்றிருக்கிறார்கள் (எபே. 2:1,3; ரோமர் 3:23).

நாம் விசுவாசித்து நடந்து புதிய ஏற்பாட்டு வசனங்களாகிய ஆவியின் போதனைகளின்படி நடந்தால் பாவத்தின் மீது நம் வெற்றி நிச்சயப்படுத்தப்படுகிறது (1 யோவான் 5:4, 2 பேதுரு 1:3,4).

தேவனுடைய ஆவிக்குரிய குழந்தை எப்போதுமே தேவனுடைய இரக்கம் மற்றும் கிருபையின் கீழ் நிற்கிறது (1பேதுரு 2:9,10). இந்தக் குழந்தையின் கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, தேவனுடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளைக்கும் தேவனுக்குமிடையே சமாதானம் இருக்கிறது (ரோமர் 5:1,5).

கிறிஸ்துவுக்குள் இருக்கும் மனந்திரும்பிய விசுவாசிக்கும் தேவனுடைய கிருபை இரட்சிப்பைக் கொண்டு வந்திருக்கிறது (தீத்து. 22:11,4). இப்போது அவர் ஆவியின் வார்த்தையினால் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாக இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணும்படி போதிக்கப் படுகிறார். இந்த நபர் நற்கிரியையில் வைராக்கியமுடையவராக இருந்து, கர்த்தர் தம்முடைய வார்த்தையில் கட்டளையிட்டிருக்கிற கிரியைகளில் வைராக்கியமுடையவராக இருக்க வேண்டும் (எபே. 2:8,10).

தேவனுடைய ஆவிக்குரிய குழந்தைக்கு இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடைய கிருபாசனத்தண்டையில் கிட்டிச் சேரும் சிலாக்கியம் கிடைக்கிறது (1 தீமோ. 2:5; எபி. 4:14,16) வேறு யாருக்கும் இந்த மாபெரும் சிலாக்கியம் கிடைப்பதில்லை. இயேசுவால் சுகமாக்கப்பட்ட அந்த மனிதன் ஒரு சூழ்நிலையில் இவ்விதமாகச் சொன்னான், *பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்* (யோவான் 9:31). இதற்கு ஓர் உதாரணம் கொர்நேலியு (அப். 10:1,4) 1 யோவான் 5:14,15 வசனங்களையும் வாசியுங்கள்.

சரீரப்பிரகாரமான தேவைகளைப் பொறுத்தவரை தேவனுடைய ஆவிக்குரிய குழந்தை கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை, ஏனென்றால், தேவன் இந்த நிபந்தனையுள்ள வாக்குத்தத்தத்தை செய்திருக்கிறார். (மத். 6:33; எபி. 13:5,6).

தேவனுடைய பிள்ளைகளில் ஒருவன் பாவம் செய்யும்போது, அவன் மனந் திரும்பி, பாவத்தை அறிக்கையிட்டு, மன்னிப்பிற்காக ஜெபிக்க முடியும். அப்படிச் செய்யும்போது, தான் மன்னிப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப். 8:22; 1 யோவான் 1:9; யாக். 5:16-20)

கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய சகோதரர்களை நேசிக்க வேண்டும். அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார் (1 பேதுரு 2:17; 2 பேதுரு 1:7,8). கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும் குறிப்பாக தங்கள் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் (கலா. 6:10).

நீங்கள் தேவனுடைய சொந்த ஜனங்களில் ஒருவராக இருக்கிறீர்களா? நீங்கள் அப்படி ஒருவராக மாற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்! (1 தீமோத். 2:1,6).

**உங்கள் நம்பிக்கையைத் திருடும் திருடனைப் போல் மோசமான திருடன் யாருமில்லை.**



# தேவனிடத்திலிருந்து வரும் ஈவு

## A Gift From God

*Gary C. HampTon*

ஒருவர் குழந்தைகளை வளர்க்கும் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு முன்பாக அவர் பிள்ளைகள் தேவனிடத்திலிருந்து சுதந்தரமாக நமக்குத் தரப்பட்டவர்கள் என்பதை உணர வேணடும். எனவேதான், சங்கீதக்காரன் இவ்விதமாகப் பாடுகிறார். *இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன், வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத் தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்* (சங். 127:3,5).

பிள்ளைகள் கர்த்தரிடத்திலிருந்து நமக்குத் தரப்பட்டிருக்கிறபடியால், பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளை நமது சாயலில் வனையவோ, நமது திட்டத்திற்கு அவர்களைப் பலவந்தப் படுத்தவோ கூடாது. அதற்குப் பதிலாக, மோசே தேவனுடைய சிருஷ்டிப்பு பற்றி என்ன எழுதியிருக்கிறார் என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும். *தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்* (ஆதி. 1:27).

ஒவ்வொரு குழந்தையும் நேசிக்கப்பட வேண்டியது அவசியம். ஒவ்வொரு குழந்தையும், மதிப்புள்ளதாக இருக்கிறபடியால், அது ஒருவருக்கு மதிப்புள்ளதாக இருக்கிறதென்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்தக் குழந்தை கர்த்தருடைய சித்தத்திற்கிசைவாக வாழ்கிற வரை, அது வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பணியைத் தெரிந்தெடுத்தமைக்காகவோ அல்லது தன்னுடைய

வாழ்க்கைக்காக ஒரு மனிதனுடைய திட்டத்தை பின்பற்ற மறுப்பதற்காக வோ அந்த குழந்தையை நொந்து கொள்ளக்கூடாது.

ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவினிடத்தில் வந்து அவர் மரிக்கப் போகிறார் என்பதை அறிவித்தபோது எசேக்கியா தான் வாழ்ந்த விதத்தை தேவன் நினைத்தருளி தன்னுடைய ஆயுசு நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்று தேவனிடம் கேட்டுக் கொண்டார். அப்போது தேவன் எசேக்கியா ராஜாவின் ஜீவனை தப்பு வித்து ஆயுசு நாட்களில் பதினைந்து வருடங்கள் கூட்டி வழங்கினார். அதற்கு நன்றிகளை ஏறெடுக்கும் விதமாக ராஜா ஒரு கவிதையை எழுதினார். அதன் ஒரு பகுதியாக, அவர் தன்னுடைய வாழ்க் கையை தேவனைத் துதிப்பதற்காக பயன்படுத்துவதாக குறிப்பிடுகிறார். *தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தைத் தெரிவிப்பான்* (ஏசாயா 38:19) என்று.

நாம் தேவனைத் துதிக்க வேண்டுமென்றால், நாம் நம் பிள்ளை களுக்கு தேவனுடைய சத்தியத்தைப் போதிக்க வேண்டும், ஏனென்றால், வார்த்தைகள் தேவனிடத்திலிருந்து வந்தது என்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நம் இலக்கு கர்த்த ருக்கேற்ற சிட்சையிலும், போதனை யிலும் அவர்களை வளர்க்க வேண்டு வதே (எபே. 6:4). நம் இல்லங்களில் தேவனுடைய வார்த்தை நம் வாழ்க் கைப் பாதைக்கு வழிகாட்டும் விளக் காக விளங்க வேண்டும் (சங். 119:105).

## கிறிஸ்தவம் சிறந்த வழி அதன் பொருள் இரட்சிப்பு

நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் (யோவான் 10:9).

**அது நம்மை பழைய, பாவ முள்ள வாழ்க்கையிலிருந்து விடு விக்கிறது.**

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17).

**தேவனால் ஒரு கிறிஸ்தவனு டைய வாழ்க்கையின் மூலமாக கிரியை செய்ய முடியும்.**

நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராயிருக்கிறார் (எபே. 3:20)


**கிறிஸ்தவர்கள் தேவனு டைய சமாதானத்தை அனுபவிக் கிறார்கள்**

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குச் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறப் பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக் கிறதில்லை (யோவான் 14:27).

# தூக்குநூலின்படி கட்டுதல்

# Building According To Plumb

*Michael L. King*



ஒரு காலகட்டத்தில் இஸ்ரவேலர் தங்களுடைய ஆவிக்குரிய அடையாளத்தைக் காத்துக் கொள்வதற்கு சிரமப்பட்டார்கள். அவர்கள் புறஜாதி தேவர்களைத் தழுவும் அளவுக்கு தரம் தாழ்ந்து போய் விட்டார்கள். அவர்களுடைய தெய்வங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு பாவத்தில் ஈடுபட்டோருக்கு துணை போயின! அந்த நேரத்தில், தேவன் தம்முடைய தாசனும், தம்முடைய செய்தியை அறிவிக்கிறவருமாயிருந்த ஆமோஸ் மூலமாக இவ்விதமாக அறிவித்தார். " *பின்பு அவர் எனக்குக் காண்பித்ததாவது; இதோ தூக்கு நூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின் மேல் நின்றார்; அவர் கையில் தூக்கு நூல் இருந்தது. கர்த்தர் என்னை நோக்கி; ஆமோசே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; தூக்கு நூலைக் காண்கிறேன் என்றேன்; அப்பொழுது ஆண்டவர்; இதோ, இஸ்ரவே லென்னும் என் ஜனத்தின் நடுவே தூக்கு நூலை விடுவேன்; இனி அவர்களை மன்னிக்கமாட்டேன்* " (ஆமோஸ் 7:7,8).

அநேக வருடங்களாக பல தேசங்களில் ஒரு கட்டிடம் நேராக இருக்கிறதா அல்லது சரியாக இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்க தூக்குநூல் ஒரு விதியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தூக்கு நூல் மேலே இருந்து தொங்கவிடப்படுகிறது அல்லது உயர்ந்த ஆதாரத்திலிருந்து வருகிறது. அதை வைத்து தான் எல்லாமே கட்டப்படுகிறது. ஆமோஸ் 7:16ல் ஆமோஸ் இவ்விதமாகச் சொன்னார். "*இப்போதும் நீ கர்த்தருடைய வார்த்தையைக் கேள்* "

பிரியமான நண்பரே, நீதியின் தூக்குநூல் தேவனிடமிருந்து விடப்படுகிறது. மனிதர்கள் மத்தியில் தொங்கவிடப்படுகிற நூல் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. அந்த வார்த்தையின்படி மனிதன் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போது அவன் வாழ்க்கை சரியானதாக, நேரானதாக இதே விதமாகக் கட்டுகிற எல்லோரோடும் இசைவானதாக இருக்கும். ஒரு மனிதனுடைய வாழ்க்கை அல்லது உபதேசம் இந்தத் தரத்தோடு முரண்படும்போது அவனுடைய

வாழ்க்கை ஒழுங்கற்ற பிரிவில் பிரிக்கப்பட்டு தேவனோடும், தேவனுடைய ஜனங்களோடும் ஒத்துப்போகாத நிலை ஏற்படுகிறது (II தெச. 3:6). தேவனோடும் அவருடைய ஜனங்களோடும் ஐக்கியம் கொள்வதற்கான உண்மையான அடிப்படை அவருடைய வார்த்தைக்கு இசைவான வாழ்க்கை வாழ்வதுதான் (I யோவான் 1:7-9). கிறிஸ்து நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்படுத்தப்பட்டார் (ஏசாயா 53:5).

மகா நீதியுள்ள தேவன் தமது நீதியுள்ள வார்த்தையை அநீதியான மக்களை இரட்சிக்கும்படியாகப் பேசினார். நீதியின் தூக்குநூல் நம்மை சுத்தப் படுத்தும், தேவனுடைய பரிசுத்த சித்தத்திற்கு இசைவான வாழ்க்கையைக் கட்ட அனுமதிக்கும் (யோவா 17:17). நாம் தேர்ச்சி அற்றவர்களாயிராமல் தேர்ச்சி பெற்ற இயேசுவை நம்மை செம்மையாக வனைய அனுமதிக்க வேண்டும். யூகத்தின் அடிப்படையில் கிரியை செய்வது நம் ஆத்துமாக்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்; மேலும், நம் கட்டிடத்தை ஒன்றுமில்லாமல் போகச் செய்திடும். “ *கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களுடைய பிரயாசம் விருதா ...*” (சங். 127:1) இயேசு “ *தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகிறார்* ” (எபி. 5:9).

## உங்களுக்குத் தெரியுமா?

**“ பரலோகம் ”**

**கைகளால் கட்டப்படாத ஓர் நகரம்**

**ஆனால்,**

**பரலோக நகரமும்**

**தூக்கு நூலோடு சம்பந்தப்பட்ட நகரம் தான்.**

**ஆம்,**

**கிறிஸ்துவின் உபதேசமாகிய தூக்கு நூலால்**

**யாருடைய வாழ்க்கையெல்லாம் கட்டப்பட்டிருக்கிறதோ**

**அவர்கள் தான் அதில் பிரவேசிக்க முடியும்.**

# குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

# How To Bring Up Children?

*Ken Tyler*

குழந்தை வளர்ப்பு என்பது அநேகமாக இப்பூமியில் கடினமான வேலையாக இருக்கிறது. நம் குழந்தைகள் நன்றாக வளரவேண்டுமென்பது நம் எல்லோருடைய விருப்பமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் என்னிடம் பதில் இருக்கிறது என்று நிச்சயமாக நான் சொல்லிக் கொள்ளவில்லை. உண்மையாகச் சொல்ல வேண்டுமென்றால், எனக்கு வயது கூடக்கூட அறிவு படிப்படியாகக் குறைகிறது. ஆயினும், இந்தக் கட்டுரையில் நான் சில ஆலோசனைகளை உங்களுக்கு வழங்க ஆசைப் படுகிறேன். அவைகள் நம் எல்லோருக்கும் பிள்ளை வளர்ப்பில் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**I உங்கள் இல்லத்தை முடிந்தவரை பிரகாசமான, கவர்ச்சிகரமான ஓர் இடமாக மாற்றுங்கள்.**

அநேக குழந்தைகள் நல்ல, சந்தோஷமான சூழ்நிலையில் வளரும் போது, நல்ல சந்தோஷமான குழந்தைகளாவதற்கு அருமையான வாய்ப்பு இருக்கிறது.

**II உங்கள் குழந்தைகளோடு நேரத்தைச் செலவிடுங்கள்**

அநேக குழந்தைகள் தங்கள் தாயும், தகப்பனும் நேரத்தை ஒதுக்கி தங்களைக் கவனிக்காதபடியால் பாசத்திற்காக ஏங்குகிறார்கள். பெரும்பாலும் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை விட தங்கள் காப்பாளர்களை நன்றாக அறிந்து கொள்கிறார்கள். நம் குழந்தைகளுக்கு நாம் தேவை! பிள்ளைகள் சீக்கிரமாக நம்மை விட்டுப் போய் விடுவார்கள், அதன்பிறகு, நமக்காகவும், மற்ற காரியங்களுக்காகவும் அதிக நேரம் நமக்கிருக்கும்.

**III வீட்டில் குறிப்பிட்ட கடமைகளுக்கு அவர்களைப் பொறுப்பாளிகளாக்குங்கள்**

இது அவர்களுக்குப் பொறுப்பையும், வேலையின் முக்கியத்துவத்தையும் படிப்பிக்கும்.

**IV உங்கள் குழந்தைகளின் மனதில் பணம் சம்பாதிப்பதை விட குணத்தை சம்பாதிப்பது தான் முக்கியமானது என்பதைப் பதிய வையுங்கள்.**

எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள் என்று பவுல் சொன்னார் (ரோமர் 12:7). நேர்மையின் முக்கியத்துவத்தை நம் பிள்ளைகளுக்கு நாம் போதிக்க வேண்டும்.

## V முன்மாதிரியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுங்கள்

நம் பிள்ளைகள் மீது நாம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு நம் முன் மாதிரி வல்லமை மிகுந்ததாகக் காணப்படுகிறது. உங்கள் பிள்ளைகள் கிறிஸ்துவைப் போல் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அவர்களுக்கு முன்பாக ஓர் நாடமாடும் கிறிஸ்துவாகவே வாழுங்கள்.

பெற்றோர்களாக நம்முடைய வேலை கடினமானது தான். ஆனால், நிச்சயமாக முடியாததல்ல. தேவனுடைய உதவியால் நாம் ஒழுங்காகப் பிள்ளைகளை வளர்க்க முடியும். அதற்கு அதிகமான ஜெபமும், ஞானமும், முயற்சியும் அவசியப்படுகிறது. *இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத் தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்* (சங். 127:3,5).

### கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டும்

1. நாம் உலகக் கவலையற்றவர்களாக இருக்க வேண்டும் (மத் 13:22)
2. நாம் ஆன்மாவை நஷ்டப்படுத்தி உலகத்தை ஆதாயப்படுத்தக்கூடாது (மத் 16:26)
3. நாம் உலகத்தார் நடந்து கொள்வது போல் நடந்து கொண்டு மற்றவர்களுக்கு இடறுதலாக இருக்கக்கூடாது (மத் 18:7)
4. நாம் இவ்வுலகத்தில் நம் ஜீவனை சிநேகிக்கக்கூடாது (யோ 12:25)
5. நாம் இப்பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களைப்போல் வாழ வேண்டும் (கலா 1:4)
6. நாம் இவ்வுலகத்திற்குச் சிலுவையில் அறையப்பட வேண்டும் (கலா 6:14)
7. நாம் உலகத்தில் சுடர்களைப் போல் பிரகாசிக்க வேண்டும் (பிலிப் 2:15)
8. நாம் இவ்வுலகத்தின் இச்சைகளை வெறுத்து, தேவ பக்தியாய் வாழவேண்டும் (தீத்து 2:12)
9. நாம் உலகத்தால் கறைபடாத வாழ்க்கையை வாழ வேண்டும் (யாக். 1:27)
10. நாம் இவ்வுலகத்திற்கு ஒத்த வேடந்தரிக்கக்கூடாது (ரோமர் 12:2)

# ராஜ்யத்தின் விதையைத்தான் விதைக்கிறீர்களா?

# Are You Sowing The Seed of The Kigndom?

*Maxie B. Boren*



ராஜ்யத்தின் விதை தேவனுடைய வசனம் என்று இயேசு போதித்தார் (லூக். 8:11). விதை உண்மையும், நன்மையுமான இருதயத்தில் விதைக்கப்படும் போது தேவனுடைய மகிமைக்கென்று அது பலன் கொடுக்கும். தேவனுடைய வார்த்தை வெறுமையாய் தேவனிடத்தில் திரும்பாமல், அது தேவன் விரும்புகிறதைச் செய்து, அது எதற்காக அனுப்பப்பட்டதோ அதை நிறைவேற்றிச் செல்லும். (ஏசாயா 55:11; யாக். 1:18; 1 பேதுரு 1:23) போன்ற வசனங்களை கவனியுங்கள்.

என்னைப் பாடாய்ப் படுத்துகிற கேள்வி என்னவென்றால், உண்மையாகவே விதைத்தலில் சபையானது சுறுசுறுப்பாக இருக்கிறதா? சபை தனிப்பட்ட நபர்களை உள்ளடக்கியதாக இருக்கிறபடியால், ஒவ்வொருவரிடமும் இக்கேள்வி கேட்கப்பட வேண்டும். ராஜ்யத்தின் விதையை விதைக்கிறீர்களா? தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற எண்ணற்ற கிறிஸ்தவர்கள் இக்கேள்விக்கு அவர்களாகவே உண்மையாக பதிலளித்தால், இல்லை, நான் வேறு காரியங்களில் என்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளேன் என்று ஒத்துக்கொள்வார்கள். அதுபோல, என்னால் நேரத்தைக் கண்டு பிடிக்கமுடியவில்லை, குறிப்பாக, விதைப்பதற்கு என்னால் நேரத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லை. என்று கூட ஒத்துக்கொள்வார்கள்.

எங்குமுள்ள சகோதரர்களிடம் நான் வேண்டிக் கொள்ளுகிறதென்னவென்றால், முதலாவது. நாம் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடி, ராஜ்யத்தின் விதையை நமக்குப் பிரியமானவர்களுடைய, நண்பர்களுடைய, நமக்குத் தெரிந்தவர்களுடைய இருதயங்களில் விதைக்கத் தொடங்குவோம். இது மிகவும் அவசரமாகச் செய்ய வேண்டிய வேலை. ஏனென்றால், மக்கள் தங்கள் நித்தியத்தை எங்கே செலவிடப் போகிறார்கள் என்பது கவலை தருவதாக இருக்கிறது!

பிசாசு மிகவும் சுறுசுறுப்பாகக் "களைகளை" விதைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் நிச்சயப் படுத்திக் கொள்ள முடியும்! அவன் அப்படிச் செய்து கொண்டிருக்கும் போது சபையில் பலர் "தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்" (மத். 13:24,30, 36,43). எவ்வளவு துக்கமானது இது! பிசாசுக்கும் அவனுடைய உதவியாளர்களுக்கும் நியாயத்தீர்ப்பில் ஐயோ!, ஐயோ!!. ஆனால், தூங்கினவர்களுடைய கதி என்னவாயிருக்கும்? நாம் எபேசியர் 5:14யை வாசிக்கவேண்டும்.



# இழந்து போனவர்களுக்குப் போதிக்க எளிய முறை

## A Simple Method Of Teaching The Lost

***Jack Hariman***

வேதாகமத்தின் அடிப்படைக் காரியங்களை விசுவாசித்து, சுவிசேஷத்தைப் புரிந்து கொள்ளாமலும், அதற்குக் கீழ்ப்படியாமலும் இருக்கும் ஒருவரிடம் வேத வசனங்களைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் போது இந்த நான்கு வழிமுறைகளைப் பின்பற்றுகிறேன்;

**முதலாவது,** நாம் புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்கிறோம், பழைய ஏற்பாட்டின் கீழ் அல்ல என்கிற உண்மையை நிலைநிறுத்துவேன். மேலும், அந்த உண்மையின் முக்கியத்துவத்தை உணரவைப்பேன். பழைய ஏற்பாடு சீனாய் மலையில் இஸ்ரவேல் தேசத்தாருக்கும், தேவனுக்கும் இடையில் மாத்திரம் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையாகும் (உபா. 5:1,3; சங். 147:19,20). புறஜாதி உலகம் ஒரு போதும் இந்த உடன்படிக்கையின் கீழ் இருந்ததில்லை, அதுபோல், யூத உலகமும் இயேசுவின் மரணத்திற்குப் பிறகு அதன் கீழில்லை. எனவே, புதிய ஏற்பாட்டிலிருந்து நாம் ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

**இரண்டாவது,** வேதபாட வகுப்பிற்கு பொது அறிவு அணுகுமுறையை கையாளுவேன். இது இரண்டு காரியங்களை உள்ளடக்கியது. (1) எல்லா உண்மைகளும் சேகரிக்கப்பட வேண்டும். உதாரணமாக: இயேசுவைக் கைது செய்யக் காவலாளர்கள் வந்தபோது அங்கே சுற்றி நின்றவர்களில் ஒருவன் பட்டயத்தை உருவி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரின் காதை வெட்டினான். மத்தேயு ஆசிரியர் அந்த பட்டயத்தைப் பயன்படுத்தியது இயேசுவின் சீஷன் தான் என்று சொல்கிறார். லூக்கா வெட்டப்பட்டது வலது காது என்று சொல்கிறார். யோவான் பட்டயத்தால் காதை வெட்டியது பேதுரு என்றும் வெட்டப்பட்டவர் மல்குஸ் என்றும் கூறுகிறார். (2) ஒரு மாணவன் துல்லியமாக எல்லா உண்மைகளிலிருந்தும் காரண காரியங்களை அறிய வேண்டும். எந்த ஒரு வேத பாடமும் இவ்விதமாகத்தான் அணுகப்பட வேண்டும்.

**மூன்றாவது,** பிரதான கட்டளையை உள்ளடக்கிய புத்தகங்களைப் படிப்பதன் மூலமாக இவை எல்லாவற்றையும் ஒருவர் எப்போது எப்படி

இரட்சிக்கப்படுகிறார் என்கிற கேள்வியோடு பொருத்திப் பார்க்கிறேன். மத்தேயு, ஒருவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்கிறார் (28:19). மாற்கு, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்கிறார் (16:16) லூக்கா மனந்திரும்புதலும், பாவமன்னிப்புமென்று காட்டுகிறார் (24:46). எனவே, ஒருவர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அதை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது இரட்சிக்கப்படுகிறார் என்பது ஒட்டுமொத்தமாக நாம் சேர்த்துப் பார்க்கும் போது நமக்கு விளங்குகிறது.

**நான்காவது,** அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தைப் படித்ததினால் இந்த முடிவை நான் உறுதி செய்து கொள்ளுகிறேன். சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் அதை விசுவாசித்தார்கள் (வசனம் 14-37), அவர்கள் வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்று கேட்டபொழுது அவர்கள் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது (வச. 38).

விசுவாசிப்பது, மனந்திரும்புவது மற்றும் ஞானஸ்நானம் போன்றவற்றைப் பற்றி இரண்டு காரியங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். முதலாவதாக, இது சேர்ந்து ஒன்றாக நிற்கிறது. இவைகளில் ஒன்றை விட்டு விட்டு பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளமுடியாது. இரண்டாவதாக, விசுவாசத்திலிருந்து மனந்திரும்புதலுக்கும், மனந்திரும்புதலிலிருந்து ஞானஸ்நானத்திற்கும் - ஞானஸ்நானத்திலிருந்து இரட்சிப்புக்கும் படிப்படியான முன்னேற்றம் இருக்கிறது. இந்த முன்னேற்றமானது மத உலகிலுள்ள பிரிவினைச் சபைகளில் சீர்குலைக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி? உங்கள் கீழ்ப்படிதலில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

## இரட்சிப்பிற்கான திறவுகோல்கள்

| | |
|---|---|
| நற்செய்தியைக் கேள்விப்பட வேண்டும் | ரோமர் 10:17 |
| நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும் | யோவான் 3:16 |
| உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் | லூக்கா 13:3 |
| கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும் | மத்தேயு 10:32 |
| ஞானஸ்நானம் பெற வேண்டும் | மாற்கு 16:16; அப். 2:38 |
| உண்மையாக வாழ வேண்டும் | வெளி. 2:10 |

இரட்சிப்பு

# சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள்! பரவசமடையுங்கள்!

## Be Challenged! Be Excited!

***David Chadwell***

வேதாகமத்தின் ஒவ்வொரு முக்கியமான காலக்கட்டத்திலும் தலைமைத்துவம் முக்கியப்பங்கு வகித்திருக்கிறது என்கிற உண்மையை நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்களா? இஸ்ரவேலையும், ஆதித் திருச்சபையையும் வழி நடத்தின தேவ மனிதர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தின் தன்மையைத் தீர்மானித் தார்கள். தேவன் தம்முடைய ஆவிக்குரிய நோக்கத்தை நிறைவேற்ற அவர்களுடைய தலைமைத்துவத்தை முதன்மையான வழியாகப் பயன்படுத்தினார்.

அதைப்பற்றி நீங்கள் சிந்தித்தால், ஒவ்வொரு தலைமுறையிலும் ஏற்பட்ட மிகப்பெரிய ஆவிக்குரிய முன்னேற்றங்கள் தனித்துவம் வாய்ந்த தலைவர்களோடு சம்மந்தப்பட்டுள்ளதென்பதை அறிந்து கொள்ள முடியும். அந்த மாபெரும் தலைவர் களின் பெயர்கள் இன்னும் பரிச்சயமானதாகவும், அடிக்கடி பயன்படுத்தப்படுகிற தாகவும், கிறிஸ்தவர்கள் மத்தியில் எல்லோராலும் அறியப்படுகிற வார்த்தை யாகவும் இருக்கும்.

*மோசே, பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன்* (எண். 12:3). இவர் அநேகமாக வேதாகம வரலாற்றின் மிகவும் கடின மான காலக் கட்டத்தில் மிகப் பெரும் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். மோசே, முன்னொரு போதும் இல்லாத அளவில் மாம்ச சிந்தையுடைய, அறியாமை கொண்ட, விசுவாச மற்ற, சுயநலமான மக்களை வழி நடத்தினார்.



யோசுவா, தேவனுடைய வல்லமையிலும், தேவன் தாம் செய்த வாக்குதத்தங்களை நிறைவேற்ற வல்லவர் என்பதிலும் முழு நம்பிக்கை கொண்டிருந்த மூவரில் ஒருவராக இருந்தார் (எண். 14:1-10). இவர் இஸ்ரவேல் சரித்திரத்தில் விசுவாசம் நிறைந்த, தேவ பக்தியுள்ள தலைமுறைகளில் ஒன்றைத் தலைமையேற்று வழி நடத்தினார் (நியா. 2:7-10).

தாவீது, தன் வாழ்க்கையின் மூலமாகத் தேவனுக்கு மிகுந்த மரியாதை செலுத்தின ஒரு மனிதன் (1சாமு. 17:23-26). இந்த தாவீது, தேவன் சவுல் ராஜாவைக் கொல்வதற்கு இரண்டு முறை வாய்ப்புகள் கிடைத்தும் அவனைக் கொல்வதைத் தவிர்த்தார் (1சாமு. 24:3-7; 26:5-12). இவருடைய வழி நடத்துதலினால் இஸ்ரவேல் தேவ பக்திக்கேற்ற காரியங்களில் உச்சத்தைத் தொட்டது.


பேதுரு, இயேசுவை மறுதலித்ததினால் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய ஆவிக்குரிய தோல்வி, தன்பேரில் நம்பிக்கை வைக்காமல் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைக்க அவருக்குப் பாடம் புகட்டியது (லூக். 22:55-62). இந்த பேதுரு சபை ஆரம்பிக்கப்பட்டபோது யூதக் கிறிஸ்தவர்களைச் சிறப்பாகத் தலைமையேற்று நடத்தினார்.

பவுல், இவர் கிறிஸ்தவர்களை வன்முறையின் மூலமாகத் துன்பப்படுத்தி இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பேசி பின்பு மனமாற்றமடைந்தவர் (அப். 26:8-11). இவருடைய சிறப்பான தலைமை சபையானது ஒரு யூத இயக்கம் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, ஒரு உலக இயக்கமாக மாறியது.

இஸ்ரவேல் சரித்திரத்தில், அதன் ஆவிக்குரிய வீழ்ச்சி நேர்ந்த காலங்களில் சரியான தலைமை இல்லாமலிருந்திருக்கிறதென்பது கவலை தரும் ஒன்று. (புதிய ஏற்பாடு சபை பற்றி ஒரு 70 ஆண்டு கால சரித்திரத்தை மட்டும் வெளிப்படுத்துகிறபடியால், இப்படிப்பட்ட நிலை ஏற்படுவதற்குக் கால அவகாசம் குறைவாகவே இருந்துள்ளது). இஸ்ரவேல் சரித்திரத்தின் தேவ பக்தியற்ற காலங்களில், தேவனுக்காகப் பேசின சாமுவேல், எலிசா, ஏசாயா, எரேமியா போன்றவர்கள் இருந்தார்கள். ஆனால், சரியான தலைவர்கள் இருக்கவில்லை.

நாம் வாழும் இக்காலத்தில் நாம் இதேவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்ளுகிறோம். மகத்தான நெருக்கடியும், மகத்தான வாய்ப்புகளும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்லுகின்றன. இந்தத் தலைவர்களுடைய வாழ்க்கை நமக்கு அதைத்தான் சொல்லுகிறது. நாம் அம்மாதிரியைப் பின்பற்றுவோம். ✱

ஒவ்வொரு நாளும் நீங்கள் சரியாக வாழ்ந்தால், நாளையைக் குறித்தும் நீங்கள் பயப்படமாட்டீர்கள், நேற்றைய தினத்தைக் குறித்தும் வெட்கப்படமாட்டீர்கள்.



இரட்சிப்பு

# வாழ்க்கையின் மேன்மை

## The Greatness of life

*Sunny David*

**வா**ழ்க்கையின் மேன்மையானது இப்பூமிக்குரிய உடைமைகளிலோ, அல்லது மனிதனுடைய சக்தியிலோ இல்லை. இப்பூமியிலுள்ளவைகளெல்லாம் நம் ஜீவன் உட்பட தற்காலிகமான தன்மையைக் கொண்டதுதான், அது கொஞ்ச காலத்திற்குத்தான். ஆயினும் மனிதன் தன்னைப் பற்றி பராக்கிரமசாலியாக, வல்லமை மிகுந்தவனாக எண்ணிக் கொள்ளலாம். மனிதன், வாழ்க்கையைப் பற்றி தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த உண்மைகளை ஒத்துக்கொள்ள வேண்டும்: *ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்: அவன் பூவைப் போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப் போல நிலை நிற்காமல் ஓடிப்போகிறான்* (யோபு 14:1,2). *மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலத்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே* (யாக். 4:13,14). *எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல* என்று போதித்தார் (லூக். 12:15).

பூமிக்குரிய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, மேற்சொல்லப்பட்ட வாக்கியங்களெல்லாம் மனிதர்களைப் பொறுத்தளவில் உண்மையாயிருக்கிறது. ஆனால், பரலோகக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மனித வாழ்க்கையின் மேன்மை மனிதன் ஆரம்பத்திலேயே தேவனுடைய ரூபத்தின்படியேயும் அவருடைய சாயலிலும் படைக்கப்பட்டான் என்கிற உண்மையில் இருக்கிறது (ஆதி. 1:26,27). ஆகவே, மனிதன் ஆவிக்குரிய சிருஷ்டியாகவும், சாவாமைக்குப் பங்காளியாகவும், தேவனிடத்திலிருந்து வந்த ஈவாகவும் இருக்கிறான். வெடிக்கத்தக்கதான ஏதோ ஒரு சக்தியோ அல்லது மரணமோ கூட மனிதனுக்கு முடிவைக் கொண்டு வர முடியாது. எனவே, மனிதனுடைய வாழ்க்கையின் மேன்மை அவனுடைய சிருஷ்டிகரைப் போலவே, அவருடைய சந்ததியாக அவனும் என்றென்றுமாய் வாழ்வான் என்பதே (அப். 17:29).

ஆனால், மனிதன் எங்கே இருக்கிறான்? மனிதன் சிருஷ்டிக்கப் பட்டபோது அவன் தூய்மையானவனாகவும், பரிசுத்தமானவனாகவும், தேவனைப் போல் பாவமில்லாதவனாகவும் இருந்தான். அவன் தேவனோடு ஐக்கியம் கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய கீழ்ப்படியாமையின் காரணமாகவும் தன்னுடைய தெரிந்துகொள்ளுதலின் காரணமாகவும் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகச் செயல்பட்டதினாலும், சிருஷ்டிகரிடமிருந்து அவன் தன்னைப் பிரித்துக் கொண்டான். வேதாகமத்தின் மிக சோககரமான வசனங்களில் ஒன்று ரோமர் 3:23ல் இடம் பெற்றிருக்கிறது. அங்கே நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். *எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி* என்று தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான், ஆனால், அவன் பாவம் செய்ததன் காரணமாக தேவனுடைய மகிமைக்கு அபாத்திரமாக தன்னை ஆக்கிக் கொண்டான். பாவத்தினிமித்தம் அவரிடத்திலிருந்து பிரிந்ததினால், மனிதர்கள் ஆவிக்குரிய தண்டனையின் கீழ் இருக்கிறார்கள். மனிதன் எப்போதுமே தன்னுடைய பாவத்தில் தான் இருப்பான். மனிதன் இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்துபோன பிறகும் கூட, அவன் தொடர்ந்து வாழ்வான், ஆனால், நித்தியமாக தேவனிடத்திலிருந்து பிரிந்து விடுகிறான். அந்நிலையை வேதாகமம் நரகம் என்று விவரிக்கிறது.

மனிதனுடைய ஜீவனின் மேன்மையையும், அவனுடைய நித்திய மதிப்பையும் தேவன் அறிந்திருக்கிறபடியால், இழந்துபோன மனித இனத்தை மீட்டமைக்கத் தேவன் தம்முடைய குமாரனைக் கூட விட்டு வைக்கவில்லை. கிறிஸ்து இயேசு இப்பூமிக்கு வந்தார், தேவன் மனிதனை பாவத்திலிருந்தும், அதன் விளைவாக நரகத்திலிருந்தும் இரட்சிக்க தேவன் என்னவெல்லாம் செய்ய வேண்டியதாயிருந்தது என்று பாருங்கள். *அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப் படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்* (பிலி. 2:6-8). *அன்றியும், நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக் காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன், மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்* (ரோமர் 5:6-8). நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5:21).

இயேசு கிறிஸ்துவின் நீதியில் பங்கு பெறுவதன் மூலமாக மனிதன் தேவனுடைய மகிமைக்கு மறுபடியும் பாத்திரராகி, பரலோகத்தில் என்றென்றுமாய் வாழ முடியும். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளாகி, அவருடைய அடிச்சுவடுகளைப்

பின்பற்றி நம் அனுதின வாழ்வில் கிறிஸ்துவை நம் மாதிரியாக்கி, புதிய ஏற்பாட்டில் நாம் செய்யும்படியாகக் கட்டளையிட்டிருக்கிறவைகளைச் செய்தால் அது சாத்தியமாகும். அது மட்டுமல்ல, இவ்வுலகில் நம்முடைய தற்காலிக வாழ்வு முடிவடையும் போது அழியாததும், மாசற்றதும், வாடாதது மாகிய சுதந்தரத்தை நாம் பெற்றுக் கொள்வோம். அது அன்பு சந்தோஷம், சமாதானம் போன்றவைகளை உள்ள டக்கிய நித்திய ஜீவனாகும். அது பரலோகத்தில் நம் சிருஷ்டிகரோடு என்றென்றும் வாழ்கின்ற ஒரு நிலையாகும்.

பரலோகக் கண்ணோட்டதிலி ருந்து பார்க்கும்போது நம் ஜீவன் மேன்மையானதல்லவா? இவ்வுலகின் செல்வம், புகழ், பூமியில் சேர்த்து வைப்பவைகள் அல்ல. பரலோகமே முக்கிய நோக்கமாக இருக்க வேண் டும். தேவன் நம்மை நிம்மதியாக அவருடைய சமுகத்தில் வாழப் பாத்திரமாக்க எப்படி தேவன் எல்லா வற்றையும் செய்திருக்கிறாரோ, அதேப் போல் பரலோகத்தில் நாம் நித்திய ஜீவனை சுதந்தரிக்க தேவன் நம்மிட மிருந்து எதிர்பார்க்கிற எல்லா வற்றையும் செய்ய வேண்டும். ⁂

## நாம் மறந்து விட்டோமா?

**ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்கர்களைப் பற்றிச் சொன்னது?**

“ நாம் வானத்தின் மிகச் சிறந்த அபரிமிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு வருகிறோம், நாம் எந்த ஒரு தேசமும் ஒரு போதும் வளர்ந்திராத அளவுக்கு எண்ணிக்கையிலும், செல்வத்திலும், வல்லமையிலும் வளர்ந்திருக்கிறோம்.

ஆனால், நாம் தேவனை மறந்துவிட்டோம். நாம் நம்மை சமாதானத்தோடு பாதுகாத்து, நம்மைப் பெருகச் செய்து, வளமாக்கிப் பலப்படுத்திய கிருபையுள்ள கரத்தை மறந்துவிட்டோம். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய மேலான அறிவினால் உண்டான தென்று வஞ்சனையுள்ள இருதயங்களில் வீணாக கற்பனை செய்து விட்டோம். வெற்றிப் போதையில் மிகவும் தன்னிறைவு அடைந்து, மீட்கும் மற்றும் பாதுகாக்கும் கிருபையின் அவசியத்தை உணராமல், நம்மை உண்டாக்கின தேவனிடத்தில் ஜெபிக்கப் பெருமையுள்ளவர்களா யிருக்கிறோம்”.

# நான் பாவம் செய்தேன்

## "I Have Sinned"

*Cecil May, Jr.*

"**நா**ன் பாவம் செய்தேன்". இதை ஒவ்வொருவரும் சொல்ல முடியும். *நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது (1 யோவான் 1:10). எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள்* (ரோமர் 3:23). *இப்படிச் சொல்வதில் பிரச்சினை ஏதுமில்லை. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்* (நீதி. 28:13).

நான் பாவம் செய்தேன் என்று வெறுமனே சொல்வதில் பிரயோஜனம் இல்லை. மனந்திரும்பிய இருதயத்திலிருந்து அந்த வார்த்தைகள் வர வேண்டும். தாவீதைத் தவிர வேதாகமத்தில் சவுல் ராஜா தான் மற்றெல்லாரையும் விட அதிகமாக இப்படிச் சொன்னான். ஆனால், அவன் நிராகரிக்கப்பட்டான், பார்வோன் ஓர் உயரிய அறிக்கையை செய்தான். *நான் இந்த முறை பாவம் செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர்* (யாத். 9:27). ஆனால், மோசே, *ஆகிலும் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னும் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன்* என்று சொன்னார் (யாத். 9:30). மழையும், கல்மழையும், இடி முழக்கமும் நின்று போனதைப் பார்வோன் கண்டபோது, அவனும் அவன் ஊழியக்காரரும் பின்னும் பாவம் செய்து, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினார்கள் (யாத். 9:34).

இன்றும் அப்படித்தான் நடக்கிறது. ஆம் பிரசங்கியாரே, இன்னும் அதிகமாக ஆராதனையில் பங்கு பெற வேண்டுமென்பதை அறிவேன். ஆனால், அந்த நபர் அப்படிச் சொல்லும் போது கூட ஆராதனைக்கு வருவதற்கான உத்தேசமே இருக்காது. "இந்தப் பழக்கம் என்னுடைய சிறந்தவைகளை எடுத்துப் போடுகிறது. இது தவறு என்று எனக்குத் தெரிகிறது. உண்மையாகவே, இதிலிருந்து நான் விடுபட விரும்புகிறேன்" என்று சொல்லுகிறார்கள். ஆனால், அவர்கள் அப்படிச் செய்வதில்லை. "கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருக்கிற விதத்தைப் பார்த்தால், நான் இன்னும் உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும்". ஆனால், அப்படிச் செய்யாமல் அதிகமான பொருளை வாங்கி கடனைக் கட்டுவதற்காக செலவழிக்கிறார்கள். நான் எளிதில் திடீரெனக் கோபப்பட்டு, மக்களுடைய

உணர்வுகளைப் புண்படுத்தி விடுகிறேன் என்று சொல்லிவிட்டு தொடர்ந்து அதையே செய்கிறார்கள்.

நீதிமொழிகளில் சொல்லப்பட்டிருக்கிறபடி, பாவத்திலிருந்து விடுபடுவதற்கான மாற்று வழி அதை அறிக்கை செய்து விட்டு விடுவது தான்.

தாவீது, *நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன்* என்று சொன்னார். ஏனென்றால், நாத்தான் சொன்ன உவமையில் அவர் தன்னுடைய பாவத்தை உணர்ந்து கொண்டார் (2 சாமு. 12:13). சங்கீதப் புத்தகங்களில் அவர் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்திருக்கிறார், தன்னுடைய ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்திருக்கிறார், மேலும், தான் தேவனுக்குக் கடன்பட்டவன் என்பதையும் ஒத்துக்கொண்டிருக்கிறார். *என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது; தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்* (சங். 51:3,4). *நான் அடக்கி வைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்து போயிற்று, நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்* (சங். 32:3,5). தாவீது உண்மையாகவே மனந்திரும்பி, எவ்வித சாக்குப் போக்குமின்றி தேவனிடத்தில் தன்னுடைய பாவத்தை ஒப்புக்கொண்டார், அத்தோடு நீதியைப் பின்பற்றும்படி தன் இருதயத்தையும் திருப்பினார். ஆகவேதான், அவர் *தேவனுடைய இருதயத்துக்கேற்ற தாசனாயிருந்தார்* (அப். 13:22).

பாவத்தைக் குறித்து பெருமை பாராட்டுவதோ, பன்றி குப்பையிலும், சகதியிலும் புரள்வதை போல் பாவத்தில் மூழ்கிப் போவதோ ஆகாது. சிலர் தங்கள் அவமானங்களில் மகிமைப்படும்படியாக தாங்கள் பாவத்தை வெட்கமில்லாமல் வெளிப்படுத்துகிறார்கள். பாவத்தை அறிக்கையிடுவது என்பது குற்றத்தை அல்லது பாவத்தை ஒப்புக்கொண்டு, பொறுப்பை ஏற்றுக்கொண்டு தேவனுடைய சித்தத்தைச் செய்வதாகும்.

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்* (1 யோவான் 1:9).

**பாவத்தின் கனிகள் உங்களுக்கு வேண்டாமென்றால்,**
**பிசாசின் பழத்தோட்டத்திலிருந்து விலகியிருங்கள்.**
**பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும்**
**விட்டு விலகுங்கள் (1 தெச. 5:22).**



# ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே!

## Alas Master For IT Was Borrowed

*Michael L.King*

**மா**பெரும் தீர்க்கதரிசியாகிய எலிசாவின் நாட்களில் தீர்க்கதரிசிகளின் புத்திரராகப் பயிற்சி எடுத்த தீர்க்கதரிசிகள் தாங்கள் வாழ்ந்த அல்லது குடியிருந்த இடத்தைக் காட்டிலும் அதிகமாகப் பெருகினார்கள். எலிசா எல்லோராலும் நன்றாக மதிக்கப்பட்டார். அவருடைய செல்வாக்கால் ஈர்க்கப்பட்ட வாலிபர்கள் ஊழியத்திற்கு வந்தார்கள். அவர்கள் கர்த்தரை சேவிக்கிற காரியத்தில் எலிசா அவர்களுக்கு ஆலோசகராக இருந்தார். அவர்கள் எலிசாவினிடத்ல் வந்து தாங்கள் யோர்தான் மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஓர் இடத்தை உண்டாக்குவோம். அதற்கு அனுமதிதர வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு எலிசாவும் அனுமதிக் கொடுத்தார். அவர்கள் யோர்தானுக்கு அருகிலிருந்த மரங்களை வெட்டினார்கள். ஒருவன் ஓர் உத்திரத்தை வெட்டி வீழ்த்துகையில், கோடாரி தண்ணீரில் விழுந்தது; அவன்; *ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே* என்று எலிசாவிடம் கூறினான். ஏனன்றால், அவன் மிகவும் குழப்பமடைந்திருந்தான் (2 ராஜா 6:1-7).

அந்த உத்திரத்தை வெட்டினவன் வீணாக அந்தக் கோடாரியைத் தேடியது வெளிப்படையாகத் தெரிகிறது. ஜார்கி என்னும் எழுத்தாளர் கடன் வாங்கியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். தீர்க்கதரிசியின் புத்திரருக்கு அதைத் திருப்பி செலுத்துவதற்கு ஒன்றுமே இல்லாதிருந்தது என்பதை மனதில் வைத்து

இவ்விதமாக வலியுறுத்துகிறார். எலிசா அங்கே வரவழைக்கப்பட்டார், அவர் அங்கே வந்தபோது அந்த கோடாரி தொலைந்து போன இடத்தை விசாரிக்கிறார். அந்த வேலைக்காரன் தன்னுடைய எஜமானிடத்தில் நம்பிக்கை வைத்திருந்தான். ஏனென்றால், இதற்கு முந்தைய ஒரு சந்தர்ப்பத்தில் எலிசா கெட்ட தண்ணீரை உடைய ஒரு நீரூற்றில் உப்பைப் போட்டு அந்தத் தண்ணீரை நல்லதாக மாற்றினார் (2 ராஜா 2:19-22). இந்த அவசர நேரத்தில் எலிசா ஒரு கொம்பை வெட்டி, தண்ணீருக்குள் போட்டு அந்த இரும்பை மிதக்கப் பண்ணினார். அந்த உத்திரத்தை வெட்டினவன் தன் கையை நீட்டி கோடாரியை எடுத்துக்கொள்ளும்படி போதிக்கப்பட்டான், அவன் அப்படியேச் செய்தான்.

இந்தப் பழைய ஏற்பாட்டு சம்பவத்திற்கும், ஒருவருடைய ஆத்துமா இன்றைக்குப் பராமரிக்கப்படுவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் குறிப்பிடத்தக்க ஒப்புமை உண்டு. *கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்* (1 கொரி. 6:19,20). நமக்கு ஆத்துமாவைப் பார்த்துக் கொள்ளும்படியான பொறுப்பான பணி கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆத்துமா நாம் தேவனிடமிருந்து இரவலாகப் பெற்றுக்கொண்ட பொருள், அது தேவனிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் (1 கொரி. 15:35-55). மனிதன் எப்போது தன்னிடத்தில் இருக்கும் ஆத்துமா தேவனுடையது என்று உணர்கிறானோ, அதற்கு நித்திய மதிப்பு உண்டு என்று நினைக்கிறானோ, அப்போது ஜாக்கிரதையாக இருந்து அதைப் பாதுகாப்பான். ஏனென்றால், அது தொலைந்து போனால் அவனால் திரும்பச் செலுத்தவே முடியாது, அது தொலைந்து போகலமா! (மத். 16:26). இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும், எஜமானுக்கு மாத்திரமே அதை மீட்கும் சக்தி உண்டு (லூக். 19:10).

இழந்துபோன கோடாரியைத் தேடுவது போலவே, நம் எஜமானாகிய தேவன் ஒரு கொம்பைப் போடவில்லை, மாறாக, இருளும், குழப்பமும் நிறைந்த இவ்வுலகில் என்னைப் போன்ற பாவிகளைத் தேடி கண்டுபிடிக்க தம்முடைய குமாரனையே அனுப்பிக் கொடுத்தார். அங்கே தீர்க்கதரிசி செய்த அற்புதம் ஒரு கொம்பைத் தூக்கிப் போட்டதல்ல. இதை எந்த ஒரு மனிதனும் செய்திருக்க முடியும். இயற்கையின் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து இரும்பை மிதக்கச் செய்ததில் தான் அற்புதம் அடங்கியிருக்கிறது. இயேசு பாவ உலகில் தூக்கி வீசப்பட்டு, ரோமச் சிலுவையில் மரித்தது ஆச்சரியமல்ல. அது ஒரு சாதாரண வழக்கமான நிகழ்வாகத்தான் இருந்தது. அங்கே ஆச்சரியம் ஒரு கோடாரி வெளியே எழும்பியது போல் உயிர்த்து, மனுக்குலத்துக்குத் தொடர்ந்து நன்மையாய்க் கொடுத்துக் கொண்டிருப்பது தான்.

நாம் உதவியற்ற, நம்பிக்கையற்ற நிலையில் இருந்தபோது அந்நியர்களாக, பிரிந்துபோன, இழந்துபோன நிலையில் ஏமாற்றமான சூழ்நிலையில் இருந்தபோது கிறிஸ்து நமக்காக அனுப்பப்பட்டார் (ஏசா. 59:2) தேவன் நமக்காக கிறிஸ்துவைப் பாவமாக்கி,

மரணத்தின் அந்தகாரத்திலிருந்து இயேசுவை உயிரோடு எழுப்பினார் (2 கொரி. 5:21). அத்தோடு நாமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரு பொருட்டாக எண்ணப்பட்டு பிரயோஜனம் உண்டாகும்படி எழுந்திருக்கும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

இயேசு அடக்கம் பண்ணப்பட்டபோது மண்ணுக்கு அடியில் புதைந்தார். ஆனால், தொடர்ந்து மீட்பராக, பரிந்து பேசுபவராக, மத்தியஸ்தராக, இரட்சகராக, சேவை செய்வதற்காக வெற்றிகரமாக எழுப்பப்பட்டார் (எபி. 9:12; 1 யோவான் 2:1; 1 தீமோ. 2:5; 1 யோவான் 4:14). கிறிஸ்து தாவீதின் கிளையாக இருந்து இவ்வுலகத்திற்குள் விடப்பட்டதற்கும், தண்ணீருக்குள் தூக்கிப்போடப்பட்ட கொம்புக்கும் ஒற்றுமை உண்டு (எரே. 33:15). நாம் நம்முடைய அஜாக்கிரதையினாலே, தேவனிடமிருந்து அந்நியப்பட்டு நம் திறமைகளையெல்லாம் வெளிப்படையாகவே விரயமாக்கிவிட்டோம் (ஏசா. 59:2; யாக். 1:12-15). நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க கோபாக்கினை நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப் படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:8,9). எஜமான் இழந்துபோன விலையேறப்பெற்ற ஒன்றை நமக்காக மீட்டார்.

கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டது போல, தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றதால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்படுவார்களென்று வாக்குத்தத்தம் பெற்றார்கள் (ரோமர் 6:4-11). அந்த கொம்பு தண்ணீருக்குள் போடப்பட்டது எப்படி அற்புதம் இல்லையோ அதுபோல் ஞானஸ்நானமும் எந்த் அற்புதத்தையும் செய்வதில்லை, இரவலாக வாங்கப்பட்ட கோடரி எழுப்பப்பட்டது போல, ஞானஸ்நானத்தின் மூலம் நாம் ஆத்துமாவில் உயிர்ப்பிக்கப்படுகிறோம்.

அந்த வேலைக்காரன் அதை எடுத்துக் கொள்ளும்படியாக போதிக்கப்பட்டான். அப்படியே தன் கையை நீட்டி அதை எடுதுதக்கொண்டான் (2 ராஜா 6:7). தாகமாயிருந்து, ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ள விருப்பமாயிருக்கிறவனுக்குத்தான் இரட்சிப்பு இலவசமாய் கொடுக்கப்படுகிறது. (வெளி. 22:17). நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் அதனிடத்தில் போய் விசுவாசத்தைக் கொண்டு அதை ஏற்றுக்கொள்வதினால் பெற்றுக் கொள்கி றோம் (எபே. 2:8). இவ்விதமாக நாம் நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்கிறோம் (1 தீமோ. 6:12). ஆவிக்குரிய பிரகாரமாகப் பேசுகிறேன், நாம் இழந்து போனதை எஜமானால் தான் திரும்பப் பெற முடியும் (யோவான் 14:6). எஜமான் நாம் பயன்படும்படி செய்தார். கிளை போடப்பட்டிருக்கிறது இழந்துபோனது எழும்பத்தக்கதாக வலிமை கொடுக்கப்பட்டது. இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் (எபிரெயர் 2:4).

# மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள்

## The Great Cloud Of Witnesses

*Tim Nichols*

*ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்* (எபி. 12:1,2).

எபிரெயர் பன்னிரெண்டாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களில் உண்மையுள்ள தேவனுடைய வேலைக்காரர்களாக நாம் இருப்பதற்கு நம் வாழ்க்கையில் தடையாக இருக்கும் எல்லாவற்றையும் நீக்கிப்போட வேண்டு மென்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட எபிரெய எழுத்தாளர் நாம் ஓர் ஓட்டப்பயந்தயத்திற்கு ஆயத்தமாவதையும் அந்தப் பந்தயத்தில் ஓடுவதையும் உருவகமாகப் பயன்படுத்தியிருக்கிறார். அவர், அநேகர் அந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஓட்டத்தை முடித்ததையும் நம் முன்பாகக் காட்டு கிறார். அவர்களெல்லாரும் மிக பயங்கரமான விளைவுகளை எதிர்கொண்ட போதிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்த விசுவாசத்தின் ஜனங்களாக இருந்தார்கள். விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் (எபி. 11:4). விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத் தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான் (எபி. 11:5). நோவா பேழையை உண்டு பண்ணினான் (11:7). ஆபிரகாமும், சாராளும் தேவன் எங்கே போகச் சொன்னாரோ அங்கே போய், தேவன் என்ன சொன்னாரோ அதைச் செய்தார்கள். ஆபிரகாம் தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கை தேவனுக்குப் பலியாகக் கொடுத்ததி னாலே தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தார். ஆபிரகாம் தன்னுடைய குமாரனைத் தேவன் மறுபடியும் உயிரோடு எழுப்புவார் என்று விசுவாசித்தபடியால் ஈசாக்கை பலியாகக் கொடுத்தார் (11:8-12,17-19). ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு மோசே, ராகாப், கிதியோன், பாராக், சிம்சோன், தாவீது, யெப்தா மற்றும் தேவனு டைய தீர்க்கதரிசிகளெல்லாம் விசுவாசத்தில் செயல்பட்டார்கள். அவர்கள் தேவனை விசுவாசித்து அந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவருக்குக் கீழ்ப்படிய மனமுவந்தார்கள்.

அவர்கள் எதைச் சகிக்க வேண்டியதாயிருந்தது? அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக என்ன விலைகொடுக்க வேண்டியதாயிருந்தது? மோசே எகிப்து ராஜாவின் கோபத்தையும், அவனுடைய வல்லமையுள்ள சேனையையும் எதிர் கொண்டான் (11:27). சிலர் சித்திரவதை செய்யப்பட்டார்கள். சிலர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிலர் கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள். பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள். சிலர் வனாந்தரங்களிலேயும், மலை களிலேயேும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள் (11:36-38).

அவர்கள் தேவன் நிமித்தம் அப்படிச் செய்ததினால் என்ன நன்மை பெற்ற ார்கள்? நோவா தன் வீட்டாரை இரட்சித்தார். ஆபிரகாம் கிறிஸ்துவுக்கு முற் பிதாவானார். யோசேப்பு பஞ்சத்தினால் தேவனுடைய ஜனங்கள் மரணத்தினால் மடிந்து போகாதபடிக்கு அவர்களைக் காப்பாற்ற தேவனால் பயன்படுத்தப்பட்டார். மோசே எகிப்தின் அழிவிலிருந்து தேவன் தம்முடைய மக்களை மீட்கத் தேவனால் பயன்படுத்தப்பட்ட கருவியாக இருந்தார். ராகாப் எரிகோவில் பிரவேசித்த வேவுகாரரைக் காப்பாற்றினாள். தேவனுக்கு உண்மையாயிருந்தவர்களில் சிலர் ராஜ்யங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார்கள், நீதியை நடப்பித்திருக்கிறார்கள், வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்திருக்கிறார்கள், சிங்கங் களின் வாயைக் கட்டியிருக்கிறார்கள், அக்கினியின் உக்கிரத்தை அணைத்திருக் கிறார்கள், பட்டயத்திற்குத் தப்பித்திருக்கிறார்கள் (11:33,44). பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள் (11:34). ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள் (11:35).

மேற்சொல்லப்பட்ட காரியங்களையெல்லாம் அவர்கள் எப்படி நிறை வேற்றினார்கள்? விசுவாசத்தினால் அவர்கள் இந்தக் காரியங்களை நிறைவேற்ற தேவனால் பயன்படுத்தப்பட இவைகளையெல்லாம் ஏன் சகித்தார்கள்? ஏனென்றால், அவர்கள் தங்கள் குறுகிய கால ஜீவியங்களுக்கு அப்பால் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மேல் நோக்கமாயிருந்தார்கள். ஆபிரகாம் தேவன் தாமே கட்டி உண்டாக்கிய அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான் (11:10). மோசே அதரிசனமான தேவனைத் தரிசித்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (11:24-27). இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவை களை தூரத்தில் கண்டு விசுவாசத்தோடே மரித்தார்கள் (11:13-16). சிலர் உபத்திர வங்களை எதிர்கொண்ட போதிலும், மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும் படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள் (11:35).

அவர்களுடைய வாழ்க்கை, விசுவாசம், தியாகங்கள், செயல்பாடுகள் பற்றிய பதிவுகள் எல்லாம் நாம் ஓட்டத்தில் ஓடும்போது நம் வாழ்வில் அவர்களைப் பின்பற்றுவதற்காகத்தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வாழ்வில்

நடந்த உண்மைச் சம்பவங்களெல்லாம் நம்முடைய நன்மைக்காக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 15:4). இந்த மாபெரும் மனிதர்களின் பக்தி வாழ்க்கை, ஓட்டத்தை ஓட முடியும் என்கிற உண்மைக்குச் சாட்சி பகர்கிறது. அவர்களுடைய உதாரணங்கள், நமக்குப் பலவீனங்கள் இருந்தாலும் அது சீர் செய்யப்பட முடியும், நம்மால் செய்ய முடியும் என்பதை நமக்கு சத்தமிட்டுச் சொல்கிறது. அவர்கள் தேவனை நம்பினது போல் தேவனை நம்புங்கள். விளைவுகள் எதுவாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள். நமக்குப் பரலோகத்தில் காத்திருக்கும் பலன் நாம் மரித்துப் பெற்றுக் கொள்வதற்கு பாத்திரமான நம்பிக்கையாக இருக்கிறது. இந்தப் பூமிக்குரிய ஓட்டப்பந்தயத்தில் நம்மை உற்சாகப்படுத்துவதற்கு அநேகர் இருப்பதைப் போல் அவர்களுடைய உதாரணங்கள் பல ஆயிரமடங்கு பெருகி நம்மால் முடியும் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறது!.

இந்த மாபெரும் மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் உற்சாகமும், பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொரு அடியிலும் நம்மை வழி நடத்தினாலும் கூட, நாம் மனப்பூர்வமாக ஓட வேண்டும். நாம் நம்மை ஆயத்தமாக்க வேண்டும்; நம்மை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஓடும்போது எவைகளை எடுத்துச் செல்ல வேண்டும், எவைகளை தூக்கி எறிய வேண்டும் என்பது சம்மந்தமாக தேவனுடைய ஆலோசனைகளைச் செவி சாய்த்துக் கவனிப்போம். நமக்காக வழியை ஆயத்தப்படுத்தி, நமக்கு முன்பாக ஓடி, நம்மை வரவேற்பதற்காக எல்லைக்கோட்டில் நமக்காகக் காத்திருக்கும் இயேசு கிறிஸ்துவின் மீது நம் கண்களை வைப்போம். ⁂

## கர்த்தர் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஏழு ஆசீர்வாதங்கள்

1. நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்
2. நான் உன்னை ஆசீர்வதிப்பேன்
3. உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்
4. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்
5. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்
6. உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்
7. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்

(ஆதி. 12:1-3)

# ஆவிக்குரிய தன்மையோடு விளக்குதல்

# *DEFINING SPIRITUALLY*

## *Clarence De Loach, Jr.*

> சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு (கலா. 6:11).

**ஆ**விக்குரிய தன்மை என்று குறிப்பிடப்படும் போது உங்கள் மனதில் என்னென்ன எண்ணங்கள் தோன்றுகிறது? ஆமென் என்று சொல்வதா? சத்தமாகப் பாடுவதா? நீண்ட ஜெபங்களா? ஓர் நல்ல உணர்வா?

உண்மை என்னவென்றால், ஆவிக்குரிய தன்மையைப் பற்றி மனங்கள் குழப்பமடைந்திருக்கின்றன. பலர் இது உணர்வுகளை அடிப்படையாக வைத்து அமைகிறது என்று விளக்கம் கொடுக்கிறார்கள்.

### பவுல் மூன்று வகையான மக்களைப் பற்றி விவரிக்கிறார்

1. ஜென்ம சுபாவமான மனிதன் (1 கொரி. 2:14) இவன் ஜென்ம சுபாவமான மனிதனுக்குரிய புரிந்து கொள்ளுதலோடு இருக்கிறான்.
2. மாம்சத்துக்குரிய மனிதன் (1 கொரி. 3:1,2) இவன் ஜென்ம சுபாவமான மனிதனைப் போல நடந்து கொள்ளுகிற கிறிஸ்தவனாயிருக்கிறான்.
3. ஆவிக்குரிய மனிதன் (ரோமர் 8:2) இவன் ஆவிக்குரிய காரியங்களில் அக்கறை கொண்டு அதன்படி நடக்கிறான்.

கலாத்தியருக்குப் பவுல் ஆவிக்குரிய தன்மையின் மனநிலைகளையும், செயல்பாடுகளையும் அடிப்படையாக வைத்து அமைகிறது என்று விளக்கமளிக்கிறார். அந்த மனநிலைகள் தான் ஆவியின் கனி என்று ஒன்பது கனிகள் பட்டியலிடப்பட்டிருக்கிறது (கலா. 5:22,23). ஒருவருடைய வாழ்க்கையில் உள்ள ஆவி சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றில் வெளிப்படுத்தப்படும். இதே வசனப்பகுதியில் ஆவிக்குரிய ஒன்பது செயல்பாடுகள் விளக்கப்பட்டிருக்கிறது (கலா. 6:1).

1. அவர் விழுந்துபோன சகோதரனையோ அல்லது சகோதரியையோ சீர்பொருந்தப் பண்ணுவார். அதை அகந்தையோடு அல்ல, சாந்தத்தோடு அவர் செய்கிறார். வழிதப்பிப்போன ஒரு சகோதரனை சீர்பொருந்தப் பண்ணுவதற்கு எப்போதாவது முயற்சி எடுத்திருக்கிறீர்களா?

2. **அவர் மற்றவர்களுடைய பாரத்தை சுமப்பார் (வசனம் 2)**
பல வகையான பாரங்கள் உண்டு. நாம் அவைகளைக் கவனித்து, சம்பந்தப் பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். **ஒரு சகோதரன் தன் பாரத்தை சுமக்க நீங்கள் உதவி செய்திருக்கிறீர்களா?**

3. **அவர் தன்னைக் குறித்து உயர்வாக எண்ணமாட்டார் (வசனம் 3)**
அவர் தன்னுடைய பலத்தைக் குறித்து வஞ்சிக்கப்படமாட்டார். பெருமை ஆவிக்குரிய தன்மையோடு ஒத்துப்போவதில்லை. **நீங்கள் தாழ்மையாக இருக்கிறீர்களா?**

4. **அவர் தேவனுக்கான பங்களிப்பில் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் இருப்பார் (4)**
அவர் தன்னுடைய வாழ்க்கையை சோதித்துப் பார்த்து, தன்னுடைய குறைகளை சரி செய்துவிட்டு, பின்பு பிறரை விமர்சனம் செய்வார். **நீங்கள் உங்கள் குறைகள் கொண்ட பட்டியலை இன்று தயாரித்து விட்டீர்களா?**

5. **அவர் தன்னுடைய செயல்பாடுகளுக்குத்தானே பொறுப்பேற்றுக் கொள்வார் (வசனம் 5)**
அவர் மற்றவர்களைக் குற்றப்படுத்துவதில்லை. அவர் தான் செய்ய வேண்டிய வீடு சந்திப்புகளை, ஆத்தும ஆதாயத்தை, ஊழியத்தைப் பிறர் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கமாட்டார். **உங்கள் தனிப்பட்ட பொறுப்பை உணர்கிறீர்களா?.**

6. **அவர் தனக்கு சத்தியத்தைக் கொண்டு வருபவரை சந்தோஷமாகத் தாங்குவார் (வசனம் 6)**
மூத்த மேய்ப்பர்கள் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். திருவசனத்தைப் போதிப்பவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் உளவியல் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் தாங்கப்படுகிறார்கள். அவர் உலகமுழுவதும் சுவிசேஷம் பரவ உதவி செய்வதற்கு மனங்கசந்து கொள்வதில்லை. **கர்த்தருக்குள் உங்களுக்கு போதித்தவர்களிடத்தில் உங்கள் பாராட்டை வெளிப் படுத்தியிருக்கிறீர்களா?**

7. **அவர் விதைத்தல் மற்றும் அறுத்தலுக்கான விதியைப் புரிந்து கொள்கிறார் (வசனம் 7)** தேவன் சேவைக்கு அதேவிதமாகவே பலனளிக்கிறார். ஆவிக்கென்று விதைப்பது ஜீவனைக் கொண்டு வரும். **நீங்கள் ஆவிக்கென்று விதைக்கிறீர்களா?**

8. **அவர் விடாமுயற்சி உடையவர் (வசனம் 9).** அவர் அவ்வப்போது முயற்சி எடுப்பவருமல்ல, அனலுமில்லாத, குளிருமில்லாத ஒரு நபரும் அல்ல. ஆனால், விடாமுயற்சி உடையவர்! அடிக்கும் காற்றுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவருமல்ல. **நீங்கள் உறுதிப்பட்டவர்களாயிருக்கிறீர்களா?**

**9. அவர் நன்மை செய்வதற்கான வாய்ப்புகளைப் பற்றிக்கொள்கிறார் (வசனம் 10)**

அவர் எல்லோருக்கும் நன்மை செய்கிறார் - நீதிமான்களுக்கும், துன்மார்க்கருக்கும்; இரட்சிக்கப்பட்டவர்களுக்கும், இரட்சிக்கப்படாதவர் களுக்கும் நன்மை செய்கிறார். மற்றவர்களிடத்தில் அவர் காட்டும் அன்பு இருதயங்களில் சத்தியம் போய்ச் சேர வழியைத் திறந்து விடுகிறது. பிறருக்கு **நீங்கள் நன்மை செய்கிறீர்களா?**

இருதயத்திலுள்ள ஆவியின் மனப்பான்மைகள், வாழ்க்கையில் ஆவியின் செயல்பாடுகளில் வெளிப்படுத்தப்படும். இப்போது, ஆவிக்குரிய தன்மையை நன்றாகப் புரிந்து கொண்டீர்களா?

**சிலுவை நமக்கு இரட்சிப்பை சாத்தியமாக்கியிருந்தாலும் கூட, மனிதன் அறிந்த மிக ஆச்சரியமான முரண்பட்ட கருத்துக்களை அது வழங்குகிறது**

அது வரலாற்றில் மிகவும் பரிதாபகரமான சம்பவம்...

**ஆனாலும், நடந்த எல்லாவற்றிலும் மிகவும் அற்புதமான காரியம்.**

அது மனித இனம் கண்ட சோகமான காட்சி...

**ஆனாலும், அதன் மூலம் மிகப்பெரிய மகிழ்ச்சி வந்தது.**

அந்த கரடுமுரடான சிலுவை சாத்தானின் மிகப்பெரிய வெற்றி...

**ஆனாலும், அந்த சிலுவையால் சாத்தான் அதிர்ச்சியுட்டும் தோல்வியைத் தழுவினான்.**

சிலுவை தெய்வீக நீதியின் மிகப்பெரிய வெளிப்பாடாய் இருக்கிறது...

**ஆனாலும், அது தெய்வீக இரக்கத்தின் அற்புதமான நிரூபணமாயிருக்கிறது.**

அந்த சிலுவை மூலமாகத்தான் தேவன் பாவத்தை கண்டனம் பண்ணினார்...

**ஆனாலும், அதன் மூலமாகத்தான் அவர் பாவியை மன்னித்தார்.**

சிலுவை தேவனுக்கு பாவத்தின் மீதிருக்கும் பகையை அடையாளப்படுத்துகிறது....

**ஆனாலும், பாவிக்கு அது அவருடைய அன்பின் மிகப் பெரிய நிரூபணமாயிருக்கிறது.**

சிலுவை மனித இனத்தின் இருளான வேளையாக இருந்தது...

**ஆனாலும், எல்லா வெளிச்சத்திலும் அது மிகப் பெரியதாயிருந்தது.**

அந்த நாளில் சூரியன் நடுப்பகலில் பிரகாசிக்க மறுத்தது...

**ஆனாலும், அந்த நாளில் குமாரன் இவ்வுலகின் ஒளியானார்.**

# அநேக காலேப்கள் தேவை

# WANTED, MORE CALEBS

*Bill Dillon*

எண்ணாகமம் 13:17; 14:10; (யோசுவா 14:6-15) போன்ற வசனங்களை வாசியுங்கள். காலேப்பின் வாலிப வயதின் அருமையான தருணம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை வேவுபார்க்க அனுப்பப்பட்ட கூட்டத்தில் இடம் பெற்றிருக்கும்படி நியமிக்கப்பட்டது தான். அனுப்பப்பட்ட பண்ணிரெண்டு வேவுகாரரில் பத்துப் பேர் துர்செய்தியைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அங்கிருந்த திராட்சைக் குலைகள், பெரிய பட்டணங்கள், தேசத்திலிருந்த ராட்சதர்கள் போன்றவைகளைப் பெரிதாகப் பேசினார்கள். அவர்கள் தங்களை வெட்டுக் கிளிகளாகச் சித்தரித்தார்கள். காலேப்பின் பலமும் தெளிவும் நிறைந்த பேச்சு பீதியடைந்திருந்த இஸ்ரவேலர்கள் மத்தியில் மோசமான வரவேற்பைத்தான் பெற்றது. ஏனென்றால், தேவனுடைய உதவியால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியை உடனடியாக சுதந்தரிக்க வேண்டுமென்று சொன்னான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர உறுதியான வீரம் வெளிப்படுத்தப்பட்டதற்கு அருமையான உதாரணம் யோசுவா, காலேப் தவிர வேறு இல்லை. எப்படியெனில், கையில் கற்களுடன் தேவனுடைய மனிதர்களை அடித்து நொறுக்கி அவர்கள் வாயை அடக்க ஆயத்தமாயிருந்த கோழைகளுக்கும், கலகக்காரருக்கும் நடுவே தேவனுக்காக எழும்பி நின்றவர்கள் இவர்கள்.

அத்தகைய ஈடுபாடும், முழுமையும் பெற்ற உன்னதமான தேவனுடைய தாசனாகிய காலேப் பின்னாட்களில் எண்பத்தைந்தாவது வயதில் எபிரோனையும், அந்த மலை நாட்டையும் எனக்குத் தாரும் என்று யோசுவாவிடம் கேட்டார். ஏனென்றால், அப்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் விகிதாச்சார அடிப்படையில் பங்கு போடப்பட்டிருந்தது. காலேப், நாற்பது வருடக் காத்திருப்புக்குப்பின் வலிமையான அந்த பத்து வேவுகாரரை அச்சுறுத்திய ஏனாக்கியரை முறியடிக்க வேண்டியதாயிருந்தது. சில மனிதர்கள் தங்கள் பொறுப்பையும், தியாகத்தையும் தட்டிக் கழிக்க நினைக்கும் வயதில், காலேப் இவ்விதமாகச் சொல்வதை நீங்கள் ஒருபோதும் கேட்கவே முடியாது. " உனக்காக ஜெபிக்கிறேன். என்னை மன்னியுங்கள். இளைஞர்கள் செய்யட்டும், எனக்கு வயதாகி விட்டது" என்று இப்படியெல்லாம் காலேப் சொன்னார் என்று ஒருபோதும் கேட்க முடியாது.

சகோதரர்களே, நாம் போதகர்களுக்காக, வேலையாட்களுக்காக, போராடுபவர்களுக்காக, பாடுபடுபவர்களுக்காக, உதவியாளர்களுக்காக இன்று அழைப்புவிடுக்கப்படும் போது, காலேப்களுக்கான அழைப்பு எங்கே? புயல் அடிக்கும் போது பதறானது காற்று போகும் திசையில் தான் போகும்; ஆனால், முதலாவதும், கடைசியும், எப்போதும் தீர்மானத்துடன், அர்ப்பணிப்புடன் கர்த்தரை முழுமையாகப் பின்பற்றும் காலேப்கள் எங்கே? மகத்தான சேவையில் ஈடுபடுவதற்குத் தூண்டு கோலாக கருதப்படும் வெளிப்புறமான பரவசம், பகட்டான காட்சி, மிகைப்படுத்தப்பட்ட புகழ்ச்சி போன்றவைகளில்லாமல் சேவை செய்ய காலேப்கள் எங்கே? பணத்தினால் அல்ல மனதினால் வல்லமை மிகுந்தவர்களாய்த் திகழும் வீரர்கள் எங்கே? முழு இருதயத்தோடு கூடிய ஒருவருக்கு நூறு அரை மனதுடன் கூடிய கிறிஸ்தவர்கள் நிகரானவர்களல்ல.

தேவனே, காலேப்களை அனுப்பும்!

ஒரு காலேப் போதாது.

பத்து காலேப்களும் போதாது


நூறு காலேப்கள் கூட போதாது

தேவனே, உம்முடைய ஊழியத்தில் தைரியமாய் எழும்பி நிற்க ஆயிரமாயிரம் காலேப்களை அனுப்பித்தாரும்.

## தொடர்ந்து நடைபோடுங்கள்

**கா**ரியங்கள் கடினமாக இருந்து, வாழ்க்கையில் நெருக்கப்படும் போது நின்று கொண்டு தூரத்தில் பார்க்க வேண்டாம், தொடர்ந்து நடைபோடுங்கள். கடினமான பாதைகள் கடந்து போகும்போது அங்குலம் அங்குலமாகப் பாதை குறைந்து போகும். அப்போது நீங்கள் திரும்பிப் பார்த்து பல மைல்கள் கடந்து போனதை எண்ணி ஆச்சரியப்படுவீர்கள். அதி சீக்கிரம் அலுப்பை ஏற்படுத்தும் நீண்ட தூரப் பயணம் முடிந்து போகும். நீங்கள் உச்சியில் வெற்றிகரமாக நிற்பீர்கள்.

நானும், நீங்களும் பரம கானானாகிய பரலோகம் சென்றடைய இப்படிப்பட்ட ஆவியின் சிந்தை தான் தேவை!





# மோசேயின் வாழ்க்கை பற்றிய விரிவான பார்வை

## A Panoramic View of the Life of Moses

*Jane Mcwhorter*



மோசே எகிப்தில் பார்வோனின் கோபத்திலிருந்து எபிரெயர்களை மீட்டு நாற்பது வருடங்கள் வழி நடத்தின போது அந்தப் பிரயாணம் நீண்ட, கடின மான பிரயாணமாகத்தான் இருந்தது. மோசே தேவன் அந்த ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தின் எல்லை வரை அவர்களைக் கொண்டு போய்விட்டார். தெய்வீகக் கட்டளைக் குக்குக் கீழ்ப்படியாமல் போனது இந்த மாபெரும் தலைவரைப் பாலஸ்தீன தேசத்திற்குள் பிரவேசிக்கவிடாமல் தடுத்தது (எண். 20:8-12). ஆனால். அந்தக் கானான் தேசத்தின் நீளத்தையும், அகலத்தையும் நேபோ மலையின்

உச்சியிலிருந்து அவரால் பார்க்க முடிந்தது. தென்மேற்குப் பக்கமாக அவர் திரும்பிப் பார்த்தபோது, எவ்வித சந்தேகமுமின்றி எகிப்தின் நிலப் பரப்பைக் கண்டார். தான் பிறந்த இடத்திலிருந்து கிழக்கு நோக்கி அவருடைய கண்கள் திரும்பிய போது, அவரால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. ஆனால், மீதியான் தேசத் தைப் பார்க்க முடிந்தது, அந்தத் தேசத் தில் தான் மோசே தப்பியோடி நாற்பது வருடங்கள் ஆடுகளை மேய்த்தார். மீதியான் தேசத்தின் வடமேற்கில் சீனாய் தீபகற்பத்தின் விரிவைக் கண்டார், அங்கே அவர் தைரியமான தலைமைத்துவத்தை வெளிப்படுத் தினார், அங்கே ஜனங்களை வழி நடத் தினபோது ஏற்பட்ட ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் அவரால் உணர முடிந்தது, அந்த ஜனங்கள் சோர்வை ஏற்படுத்துகிறவர்களாகவும், சில வேளைகளில் வெறுப்பை ஏற்படுத்து கிற ஜனங்களாகவும் தான் இருந்தி ருக்க வேண்டும்.

மோசேயின் நாட்களில் பல துரதிஷ்டவசமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. அவர் மலையிலிருந்து தெளிவான, விரிவான காட்சியைக் காணும் போது, சிதறிப்போனவை களைப் புதிர்ப் போட்டியில் இணைப்ப தைப் போல், அவரால் இணைக்க முடிந்திருக்கும். மேலும், இறுதியில் காரியங்களெல்லாம் எப்படி நன்மை யாக முடிந்தது என்று உண்மை யாகவே புரிந்து கொண்டார்.

மோசே பிறந்த போது சோகமான ஒரு சூழ்நிலைதான் நிலவியது. எபிரெய அடிமைகள் எகிப்திய ஆட்சியாளர் களின் கோபத்திற்கு ஆளானபடியால், எல்லா ஆண் குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை கொடூரமாகத்தான் இருந்தது. ஆயினும், மோசேயின் தாய் அந்தக் குழந்தையை ஒரு நாணல் பெட்டியில் மறைத்து வைக்காதிருந்தால், அந்தக் குழந்தை பார்வோனின் குமாரத்தியின் கண்ணி லும் பட்டிருக்காது, ராஜ அரண்மனை யில் அதற்கு வாழ்க்கையும் கிடைத்தி ருக்காது. மோசே அரண்மனையில் கழித்த வருடங்கள் எவ்வித சந்தேகமு மின்றி அவருடைய தலைமைத்துவப் பண்பிலும், செல்வாக்கு நிலையிலும் தடயங்களைப் பதித்து விட்டுச் சென்றன. மோசே ஓர் எகிப்தியனைக் கொலை செய்தது மிகப் பெரிய பாவம் தான். ஆனால், அது வனாந்திரப் பகுதி யான மீதியான் தேசத்துக்கு உடனடி யாக ஓடிப்போகக் காரணமாயிருந்தது. அங்கு தான் மோசே புடமிடப்பட்டு வனையப்பட்டார். அவர் பார்வோனின் அரண்மனையில் சுகமாய் வாழ்ந்த கை யோடு மக்களை வழிநடத்தியிருந்தால் கடுமையான சரீர வேதனைகளை உள்ளடக்கிய அந்த வனாந்திர யாத்திரையில் அவரால் ஒரு நல்ல தலைவராக இருந்திருக்க முடியாது. மோசேயின் பின் வரும் வருடங்க ளுக்கு மீதியான் ஒரு நல்ல பயிற்சிக் களமாக அமைந்தது. இங்கே மோசே வெளியே வாழவும், கைகளால் வேலை செய்யவும் பழகினார். மோசே தனிமை யில் வாழ்ந்த நாட்களும், வருடங் களும் நெருக்கமாகப் பழக நேரத்தைக் கொடுத்திருக்க வேண்டும். ஒருவேளை அவைகள் மோசேக்கு தன் தாயின் ஆரம்ப காலப் போதனையை நினைத் துப் பார்க்க வாய்ப்பைக் கொடுத்திருக் கலாம்.

ஒவ்வொரு துரதிஷ்டமான சூழ்நிலையும் மோசேயின் வளர்ச்சியில் ஓர் ஏணிப்படியாக இருக்க அது ஒன்றன் பின் ஒன்றாக தேவனுடைய ஜனங்களுக்கும், யூத தேசத்தின் வரலாற்றுக்கும் நன்மையாக முடிந்தது. மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியைப் பார்த்து தன்னுடைய கடந்த கால வாழ்க்கையைச் சிந்தித்த போது அவருடைய மனிதில் என்ன ஓடிக் கொண்டிருக்கிறது என்பது நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால், தன்னுடைய வாழ்க்கையைக் குறித்த தெளிவான பார்வை உடையவராக அதைப்புரிந்து கொள்ளும் நல்ல நிலையில் இருந்தார்.

நம் ஒவ்வொருவருக்கும் கசப்பான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கிறது. அவ்விதமாக ஏற்படும். ஆனால், தேவனுடைய பிள்ளைக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று நமக்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 8:28). அவைகள் மோசேக்கும், தேவனுடைய ஜனங்களுக்கும் நன்மையாக முடிந்தது. மோசே இதை அநேகமாக நேபோ மலையை அடைந்த போது புரிந்து கொண்டிருப்பார். ஒட்டுமொத்தக் காட்சிக்கு நம் கண்களையும், நம் இருதயங்களையும் திறந்து அதே விதியைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வோம்.

## இயேசு வந்தால்

அவரை உள்ளே விடுவதற்கு முன்பு பத்திரிக்கைகளை மறைத்து, வேதாகமம் எங்கே இருந்ததோ அங்கே வைப்பீர்களா?

உலகப் பிரகாரமான இசையை மறைத்துவிட்டு, சில கீர்த்தனைப் புத்தகங்களை வெளியில் வைப்பீர்களா?

இரட்சகர் உங்களோடு இரண்டு அல்லது மூன்று நாட்களைச் செலவழித்தல் நீங்கள் எப்போதும் செய்கின்ற காரியங்களைச் சரியாகச் செய்வீர்களா?

நீங்கள் எப்போதும் செய்கின்ற காரியங்களைச் சரியாகச் செய்வீர்களா? அல்லது ஒரு நாளைக்காக உங்கள் திட்டங்களை மாற்றி அமைப்பீர்களா?

உங்களோடு இயேசு எப்போதும் இருக்க வேண்டுமென்று மகிழ்ச்சியடைவீர்களா? அல்லது அவர் உங்களை விட்டுப் போனதும் பெருமூச்சு விடுவீர்களா?

இயேசு உங்களோடு சில நேரத்தைச் செலவிட நேரில் வந்தால் நீங்கள் செய்யும் காரியங்களை அறிவது ருசிகரமாக இருக்கும்.



# யோனா

## Jonah

***Frances Parr***

*அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார்* (யோனா 1:1,2).

யோனா ஒரு தேவ மனிதர். அவர் கடலையும், வெட்டாந்தரையையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய ஒன்றான மெய்தேவனுக்குப் பயந்த ஒரு மனிதன். ஆனால், அவர் செய்ய விரும்பாத ஒரு காரியத்தைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட போது ஞானமற்ற முடிவை எடுத்தார்: அவர் ஓடிப்போக முயற்சித்தார்.

நாகூம் மூன்றாம் அதிகாரத்தின்படி, நினிவே மகாப்பெரிய, துன்மார்க்கமான, கொடுமை நிறைந்த நகரமாக இருந்தது. அது 1,20,000 ஆத்துமாக்களைக் கொண்ட நகரமாக இருந்தது. அந்நகரம் பொய்களினாலும், கொள்ளையினாலும், வேசித்தனத்தினாலும், அநியாயத்தினாலும், மிருகத்தனமான மனிதர்களாலும், கொலை, விக்கிரகாராதனை போன்றவைகளாலும் நிறைந்த பட்டணமாக இருந்தது.

கர்த்தர் கட்டளையிட்டபடி நினிவேக்குப் போகாமல் யோனா தர்ஷீசுக்குப் போகும்படியாக நின்று கொண்டிருந்த கப்பலில் ஏறினான். பயணத்திற்கான தொகையைக் கொடுத்து, கப்பலில் ஏறி, கப்பலின் அடித்தட்டிற்குப் போய் தூங்கினான். கர்த்தரிடமிருந்து மறைந்து கொள்வதற்கு அது நல்ல இடமா? உண்மையாகவே இல்லை!

பயங்கரமான காற்று வீசியபடியால் அந்தக் கப்பல் ஆபத்திற்குள்ளானது. கப்பற்காரர் தங்களுடைய பல் வேறுபட்ட தெய்வங்களிடத்தில் ஜெபித்தார்கள், ஆனால், பெருங்காற்று ஓய்ந்தபாடில்லை. அக்கப்பலின் தலைவன் யோனாவைக் கண்டு உன் தேவனிடத்தில் வேண்டிக்கொள் என்று கேட்டுக்கொண்டான். கப்பற்காரர் விருப்பமில்லாமல் இருந்தாலும் யோனா கேட்டுக் கொண்டபடியால் அவனைக் கப்பலிலிருந்து தூக்கி எறிந்தார்கள். அந்தப் பெருங்காற்று உடனடியாக நின்றது. யோனா தன்னுடைய ஜீவனை விட அதிகமான முக்கியத்துவத்தை கப்பலின் பாதுகாப்புக்கும், அதில் இருந்தவர்களுடைய பாதுகாப்புக்கும் கொடுத்தான். அந்த செயலின் காரணமாக கப்பலில் இருந்தவர்கள் எல்லோரும் மெய்யான தேவனை விசுவாசித்து, ஆராதித்துப் பலிகளைச் செலுத்தினார்கள்.

யோனா மூழ்கிப் போனான். அவர் கீழ்நோக்கிச் சென்றார், தன் தலை கடற்பாசியினால் சுற்றப்பட்டு இப்பூமியிலிருந்து தன் உயிர் பிரிந்து போய் விட்டது என உணரும் வரை கீழ்நோக்கிச் சென்றார். ஆனால், தேவன் யோனாவின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை; யோனாவை மீட்கும்படியாகத் தேவன் ஒரு மீனை ஆயத்தப்படுத்தி இருந்தார். யோனா மீனின் வயிற்றிலிருந்து துதி மற்றும் மனந்திரும்புதலுடன் கூடிய ஓர் அழகான ஜெபத்தை ஏறெடுத்தார். அவர் நம்பிக்கையின்மையின் ஆழத்திலிருந்து தனக்கு யார் உதவுவார் என்பதை அறிந்திருந்தார். யோனா பாவம் செய்திருந்தாலும் கூட அவரை மன்னித்து அவருடைய சிக்கலான சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் படியான போக்கை உண்டாக்க தேவன் அங்கே தான் இருந்தார்.

ஆயினும் தேவன், யோனாவை தாம் நடப்பிக்கவிருந்த வேலையிலிருந்து விடுவிக்கவில்லை. அந்த மீன் யோனாவை கடற்கரையிலே கக்கிப் போட்டது, அப்போது தேவன் ஆரம்பத்தில் சொன்ன அதே வார்த்தையை மறுபடியும் சொன்னார். நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போ.... என்று.

நினிவே மூன்று நாள் பிரயாண விஸ்தாரமான மகாப்பெரிய நகரமாயிருந்தது. யோனா முதல் நாள் நடையை ஆரம்பித்தபோது வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற மிகச் சிறிய பிரசங்கத்தைச் செய்தார். *இன்னும் நாற்பது நாள் உணடு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்* (யோனா 3:4). அந்தப் பிரசங்கத்தில் அதிகமான வார்த்தைகள் இல்லை, ஆனால், அது எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது! ராஜா முதல் வேலைக்காரன் வரை தேவனில் விசுவாசம் வைத்து, உபவாசத்தை அறிவித்து, இரட்டுடுத்திக் கொண்டார்கள். அவர்கள் தங்கள்

பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினார்கள். தேவன் அதைப் பார்த்து அவர்களுக்குச் செய்வதாக இருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். தேவன் நினிவேயை அழிக்கவில்லை.

யோனாவின் ஊழியம் வெற்றிகரமான ஒன்றாயிருந்தது. அவர் சந்தோஷப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக அவர் கோபமாக இருந்தார். ஒருவேளை நினிவே பட்டணத்து மக்கள் தன்னை பொய்யனாக நினைத்து விடுவார்கள் என்று பயந்தார். யோனா மரிக்க விரும்பினார்! அவர் நகரத்திலிருந்து வெளியே போய், அங்கே தனக்கு ஓர் இருப்பிடத்தைக் கட்டி, அதற்குக் கீழ் அமர்ந்தார். தேவன் யோனாவுக்கு நிழலைக் கொடுக்கவும், அவரைப் பாதுகாக்கவும் ஒரு செடியை முளைக்கப் பண்ணினார். அந்தச் செடியின் நிமித்தம் யோனா மிகவும் சந்தோஷமடைந்தார். அடுத்த நாள் காலையில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார். அது செடியைச் சேதப்படுத்தியதால் அது காய்ந்து போயிற்று. தேவன் உஷ்ணமான கீழ்க் காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான் (யோனா 4:8). இங்கே தேவன், கோபத்தை வெளிப்படுத்துகிற பிள்ளையிடம் எப்படி பெற்றோர்கள் பேசுவார்களோ அதைப் போல் யோனாவிடம் பேசுகிறார். நீ ஆமணக்கினிமித்தம் எச்சரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார் (யோனா 4:9). அதற்கு யோனா மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லது தான் என்றான். யோனாவின் சம்பவம் திடீரென பதிலளிக்கப்படாத பல கேள்விகளுடன் முடிவடைகிறது. யோனாவுக்கு என்ன நடந்தது? அவர் சுய நினைவுக்கு வந்து தொடர்ந்து கர்த்தரை ஆராதித்தாரா? நினிவே பட்டணத்து மக்கள் உண்மையாகவே மனந்திரும்பினார்களா? அவர்கள் மெய்யான தேவனைத் தொடர்ந்து ஆராதித்தார்களா?

யோனா புத்தகத்தின் கடைசி வசனம், இதை வாசிக்கும் வாசகருக்கு அன்புள்ள தேவனுடைய கண்கள் மூலமாக நினிவே மக்களைப் பார்க்க உதவுகிறது - அதில் அந்த மக்கள் இழந்து போனவர்களாகவும், பரிதாபத்திற்குரிய ஆத்துமாக்களாகவும், வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத மக்களாகவும் தான் இருந்திருக்கிறார்கள். யோனாவின் சம்பவத்தில் தேவனுடைய அன்பு வெளிப்படையாகவே காட்டப்பட்டிருக்கிறது. நாம் அவருக்குக் கீழ்ப்படியாமலிருந்து, நம் செயல்களினால் அவருக்குப் பிரியமில்லாமல் நடந்து கொள்ளும்போது கூட தேவன் நம்மிடத்தில் அன்பு காட்டுகிறார். நம்முடைய ஜீவியங்களிலும், இருதயங்களிலும் அவர் முதலிடம் கொண்டிருக்க அவரை அனுமதிக்கும் போது அவர் சர்வ வியாபியாக இருந்து, நம்மீது அக்கறை கொண்டு, நமக்கு உதவ எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார்.

எல்லா மக்களும் தங்கள் ஜீவியங்களில் நினிவேக்களை எதிர் கொள்கிறார்கள், யோனாவைப் போல

சில வேளைகளில் செயல்பட நாமும் சோதிக்கப்படலாம், அப்படிப்பட்ட வேளைகள் நம் வாழ்வில் வரும். அப்போது சங். 139:7-10 வசனங்களில் தாவீதின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள், "*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன். நான் வானத்துக்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கைப் போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப் பிடிக்கும்*".

## உங்கள் சிந்தனைக்கு

நீங்கள் எப்படி வாழ்கிறீர்களோ அதைவிட உயர்வான நிலையில் மற்றவர்கள் வாழும்படி அவர்கள் மேல் தாக்கத்தை ஏற்படுத்துவது முடியாத காரியம்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் சரியாக வாழ்ந்தால், நாளையைக் குறித்தும் நீங்கள் பயப்படமாட்டீர்கள், நேற்றையை தினத்தைக் குறித்தும் வெட்கப்படமாட்டீர்கள்.

உங்கள் பாக்கெட்டில் என்ன வைத்திருக்கிறீர்களோ அது உங்களை நன்றியுள்ளவர்களாக ஆக்குவதில்லை, ஆனால், உங்கள் இருதயத்தில் என்ன வைத்திருக்கிறீர்களோ அது தான் உங்களை நன்றியுள்ளவர்களாக ஆக்குகிறது.

தேவனுடைய தரிசனத்தை உடைய ஒரு மனிதன் வேறு எந்தக் காரியத்திலும் அர்ப்பணிப்புடன் இருப்பதில்லை; அவன் தேவனிடத்தில் மட்டுமே அர்ப்பணிப்புடையவனாக இருக்கிறான்.

நாம் இவ்வுலகத்திற்கு எதைச் சொல்ல வேண்டுமென்பதற்கும் தேவனுடைய அன்பு காரணமாயிருக்கிறது; அதை ஏன் சொல்ல வேண்டுமென்பதற்கும் தேவனுடைய அன்பே காரணமாயிருக்கிறது.

# கொர்நேலியு

## " இப்பொழுது நாங்கள் இங்கே கூடியிருக்கிறோம் "

# Now Here We Are

*Frances Parr*

கொர்நேலியுவின் சம்பவம் என்னை அதிகமாகக் கவர்ந்த ஒன்றாகும். இது இவ்வுலகத்தில் ஏற்கனவே நேசித்து, சேவை செய்ய ஆர்வமாயிருக்கிற, தேவனை உண்மையாக அறிந்து கொள்ளக் காத்திருக்கிற தனித்துவம் வாய்ந்த மக்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள உதவுகிறது.

உண்மையாகவே, இச்சம்பவத்தில் கொர்நேலியுவைப் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கொர்நேலியுவின் கவனத்தையும், மரியாதையையும் ஈர்க்கக் கூடிய வகையில் தங்கள் பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த வேறு சிலரும் அங்கே இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. தனக்கு அறிமுகமாயிருந்த யூதர்களாலும் மற்றும் அவர்கள் போதனையாலும், தான் சேவிக்க விரும்பிய தேவனுக்குத் தானம் செய்வது பிரியமானது என்பதை அறிந்து கொண்டார். அவருடைய தேறின விசுவாசம் அவர் எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணத் தூண்டுகோலாக இருந்தது.

கொர்நேலியுவின் சம்பவத்தில் என்னை அதிகமாகக் கவர்ந்த பகுதி அவர் *தன்னுடைய வீட்டாரனைவரின் மீதும் ஏற்படுத்திய தாக்கம் தான்.* இது அவருடைய மனைவியும், பிள்ளைகளும் மாத்திரம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்று பொருள்படாது. இது அவருடைய வேலைக்காரர்களும், அவர்களுடைய குடும்பங்களும் கூட அவருடைய வார்த்தைக்குக்கட்டுப்பட்டார்கள் என்றே தெரிகிறது. *அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தான்* என்று வாசிக்கிறோம் (அப். 10:2). அவனுடைய வீட்டாரில் சிலர் மட்டும் அல்ல, அவனுடைய வீட்டாரில் பெரும்பாலான வர்கள் மட்டுமல்ல அவனுடைய வீட்டாரனைவரும் தேவனுக்குப் பயந்தார்கள்.

கொர்நேலியுவின் வீட்டிற்குப் போகும்படி தெய்வீகக் கட்டளை பெற்றிருந்த பேதுரு அங்கே வந்த போது கொர்நேலியு தன் உறவின் முறையாரையும், தன்னுடைய விசேஷித்த சிநேகிதரையும் கூட வரவழைத்து, அவர்களுக்காகக் காத்திருந்தான் (வசனம் 24). *பின்பு நான் அதிகமாக விரும்புகின்ற வார்த்தைகள் அந்த தேவபக்தியுள்ள மனிதன் சொன்னவைகள். அந்த வார்த்தைகளை ஒவ்வொரு தலைமுறையின் ஒவ்வொரு குடும்பத் தலைவரும் தேவனைப் பற்றிய காரியங்களில் சொல்லப்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.* " ...*தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்டயாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்தில் கூடியிருக்கிறோம்* " என்றான் (வசனம் 33).

# பாவங்களை அறிக்கையிடுதல்

# Confessing Sins

***David Pharr***

**பா**வங்களை அறிக்கையிடுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் ஆராதனையின்போது அழைப்புப் பாடலில் சில கிறிஸ்தவர்கள் முன்பாகச் சென்று பாவங்களை அறிக்கையிடுவதை அறிந்திருக்கலாம். இது எப்பொழுது அவசியமாகிறது?

**அ**றியாமையினாலோ அல்லது பெலவீனத்தின் காரணமாகவோ நீங்கள் பாவம் செய்வீர்கள். நீங்கள் சோதனையை எதிர்க்கத்தக்கதாக பலத்தில் வளர முடியும். ஆனால், உங்கள் வாழ்க்கையில் இனிமேல் ஒருபோதும் வராது என்கிற நிலையை ஒருபோதும் எட்டவே முடியாது. ஆனால், ஒரு கிறிஸ்தவனாக, ஒளியில் நடக்கும்போது மன்னிப்பின் நிச்சயம் உங்களுக்கு உண்டு (1 யோவான் 1:7).

1 யோவான் 1:9 ல் பாவங்கள் அறிக்கையிடப்பட வேண்டுமென்று வாசிக்கிறோம். இந்த வசனம் தேவனிடத்தில் பாவங்களை அறிக்கையிடுவதைக் குறிக்கிறது. நாம் எப்போதெல்லாம் தவறு செய்துவிட்டோம் என்று உணர்கிறோமோ அப்போதெல்லாம் உண்மையான மனந்திரும்புதலோடு தேவனிடத்தில் அறிக்கையிட வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அருமையான வாக்குதத்தம் நாம் அப்படி அறிக்கையிட்டவுடனேயே தேவன் நம்மை மன்னித்து விடுகிறார் என்பதாகும். *(ஏற்கனவே கிறிஸ்தவராயிருக்கிற ஒருவர் இவ்விதமாகத்தான் மன்னிப்பைப் பெறுகிறார் என்பதை மனதில் வையுங்கள். ஆனால், கிறிஸ்தவரல்லாத ஒருவர் இந்த சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும்)*

ஆனால், எப்போது பாவங்கள் மற்றவர்களிடத்தில் அறிக்கையிடப்பட வேண்டும்? யாக். 5:16 நம் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட வேண்டும் என்று சொல்கிறது. எப்போது மற்றும் எந்த அளவுக்கு இது அவசியமானது?

முதலாவது, அறிக்கையிடுதல் என்கிற வார்த்தை பாவங்களை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்துவது என்று பொருள்படாது. மாறாக, அவைகளை ஒத்துக்கொள்வது என்று பொருள்படும். சிலர் இது ஒருவருடைய இருதயங்களிலுள்ள அந்தரங்கமான காரியங்களை மற்றவர்களுக்கு அறிவிப்பது எனப் பொருள்படுவதாகக் கூறுகிறார்கள், ஆனால், இதன் பொருள் அதுவல்ல.

மற்றவர்களைப் பாதிக்கிற காரியமாக இருந்தாலோ அல்லது அவர்களுடைய உதவி நமக்குத் தேவைப்படுகிற காரியமாக இருந்தாலோ நாம் மற்றவர்களிடத்தில் அறிக்கையிட வேண்டும். உதாரணமாக, மற்றவர்கள் புண்படும்படியான ஏதோ ஒரு காரியத்தை நீங்கள் செய்துவிட்டால், நீங்கள் அவரிடத்தில் அறிக்கையிட வேண்டும். சில பாவங்கள் எல்லோருக்கும் தெரியவரும் பட்சத்தில் சபையார் எல்லோரிடத்திலும் அறிக்கையிடுவதற்கு, அது ஏதுவாகிறது. ஏனென்றால், நீங்கள் செய்த பாவம் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடியால், நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்கள் என்பதை எல்லோருக்கும் முன்பாக அறிக்கையிடுவது அவசியமாயிருக்கிறது.

சபையார் எல்லோரும் அறிந்திருக்கிற பாவத்தை ஒருவர் சபையார் முன்பாக அறிக்கையிடுவதற்குப் பொருத்தமான நேரம் அழைப்புப் பாடல் தான். பாவங்களை அறிக்கையிடுவதற்கான வழி இது மட்டுமல்ல. கடிதத்தின் மூலமாகவோ, அறிவிப்பின் மூலமாகவோ நிச்சயமாகவே பாவங்களை அறிக்கையிட முடியும், இருந்தபோதிலும், சபையார் முன்பாக வந்து அறிக்கையிடுவதே நடைமுறைக்கு சாத்தியமானதும், திருப்திகரமான விதமுமாகும்.

பாவங்களை எல்லோருக்கும் முன்பாக பொதுவாக அறிக்கை செய்வது சம்மந்தமாக இரண்டு நிலைகள் உள்ளன. அவைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

முதலாவது, சிலர் தங்கள் உண்மையற்ற தன்மை பிறரால் வெளிப்படையாக அறியப்பட்டிருந்தாலும் கூட அவைகளை வெளிப்படையாகச் சபையார் முன்பாக அறிக்கையிட விருப்பமில்லாமல் இருப்பது. அநேகமாக, பெருமை அவர்கள் அறிக்கையிட தடையாக இருக்கலாம். இரண்டாவது, சம்பந்தப்பட்டவர்களுக்கிடையே சிறந்த முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டிய தனிப்பட்ட, சொந்தப் பிரச்சினைகளுக்குக் கூட சபைக்கு முன்பாக அடிக்கடி போக வேண்டியது அவசியமாகும் என எண்ணுவது.

இங்கே நாம் பின்பற்ற வேண்டிய சுலபமான வழிமுறை என்னவென்றால் நாம் நம்முடைய பாவங்களை வெளிப்படையாக அறிக்கையிட வேண்டும். அது யாரும் அறியாத இரகசிய பாவமாக இருந்தால் தேவனிடத்தில் மட்டும் அறிக்கையிடுங்கள். அந்தப் பாவம் சிலருக்கு மட்டும் தெரிந்திருந்தால் அவர்களிடமும், தேவனிடமும் மட்டும் அறிக்கையிடுங்கள். அது எல்லோருக்கும் பொதுவாகத் தெரிந்திருந்தால் அந்தப் பாவத்தை சபையார் எல்லாருக்கும் முன்பாகவும் அறிக்கையிட வேண்டும்.

அப். 8:13-24 வசனங்களில் சமாரியாவிலுள்ள சீமோனைப் பற்றி நாம் வாசிக்கிறோம். பதிமூன்றாம் வசனத்தில் அவன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனானதை வாசியுங்கள். ஆனால், 18,21 வசனங்களில் சீமோனுடைய கடுமையான பாவத்தையும் அதன் காரணமாக பேதுருவினுடைய கடிந்து கொள்ளுதலையும், நாம் கற்றுக்கொள்கிறோம். பின்னர், பேதுரு

மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள் (வசனம் 22) என்றார்.

இருபத்தி நான்காம் வசனத்தில் சீமோன் பேதுருவிடம் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டான். இந்த உதாரணம், ஞானஸ்நானம் பெற்ற ஒரு விசுவாசி வெளிப்படையாகப் பாவம் செய்யும்போது, மனந்திரும்பிப் பாவமன்னிப்புக்காகத் தேவனிடத்தில் வேண்டிக்கொண்டு, தனக்காக மற்றவர்கள் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

பாவ அறிக்கை மற்றவர்களிடத்திலோ அல்லது சபையார் எல்லோருக்கும் முன்பாகவோ அவசியப்படும் போது அதைச் செய்யத் தவறக்கூடாது. சபையார் எல்லோருக்கும் முன்பாக ஒருவர் பாவத்தை அறிக்கையிட்டாலும், தனிப்பட்ட முறையில் தேவனிடத்தில் பெரும்பாலும் அறிக்கையிட வேண்டும். இத்தகைய அறிக்கைகள் சிந்தனையுடனும், குறிப்பாகவும், செய்த பாவங்களைக் குறித்து உண்மையான மனந்திரும்புதலுடனும் இருக்க வேண்டும்.

**ந**மக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை யிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்

(1 யோவான் 1:8,9).

**மனிதர்களால், அது என்ன செய்து விடும் என்று நினைக்கின்ற பாவங்கள், அவன் நித்திய காலத்திற்கும் வேதனைப்பட்டு கண்ணீர் விடக்கூடிய நித்திய நரகத்தில் கொண்டு போய் சேர்த்துவிடும்.**

# தர்மமும், கொடுத்தலும்

# Charity And Giving

*E. Claude Gardner*

## I. முன்னுரை

A. வசனப் பகுதி - மத். 6:1-4.

B. மலைப்பிரசங்கத்தின் மூலமாக இயேசு நற்கிரியை பற்றியும், கொடுத்தல் பற்றியும் இவ்விரண்டு கடமைகளுக்கிடையே உள்ள தொடர்பு பற்றியும் போதித்தார்.

## II விவாதம்

**A. இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் "தர்மம் செய்யும்படியாக" போதித்தார்**

1. அங்கே "நீதி" என்று மேலெழுந்தவாரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, கொடுத்தல் ஒரு நீதியுள்ள செயலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரசங்கத்தின் பின்பு, இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் "வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிருக்க வேண்டும் " என்று புத்தி சொன்னார் (மத். 5:20).

2. தர்மம் செய்தல் என்பது உதாரத்துவமாய்க் கொடுப்பது அல்லது ஏழைகளுக்கு மற்றும் தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்வது என்று பொருள்படும். கிரேக்க மொழி இதை "இரக்கம்", "பரிதாபம்" என்று உட்பொருளாகச் சொல்லு கிறது. ஆனால், எபிரெய மொழி இதை "நீதி" என்று அடையாளப்படுத்துகிறது.

3. தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள் (மாற்கு 14:7)

4. தர்மம் செய்வதென்பது கட்டளையிடப்படாமலேயே நாம் செய்யும் ஒரு செயல் என்பதைச் சுட்டிக்காட்டினார். மனிதர்கள் கொடுப்பார்கள் என்பதை இயேசு யூகித்து, கொடுப்பதன் சரியான நோக்கத்தை வலியுறுத்தினார்.

a. நாம் பவுலின் ஆவியைக் கொண்டிருக்க வேண்டும் (கலா. 2:10) (1 கொரி. 16:1,2; அப். 24:7) மாபெரும் சுவிசேஷகரும், ஊழியருமான பவுல் ஏழைகள் மீது மென்மையான மனதைக் கொண்டிருந்தார்.

b. சகேயுவும் (லூக். 19:8), கொர்நேலியுவும் (அப். 10:2) வேறு சிலரும் முன் மாதிரிகளாயிருக்கிறார்கள்.

5. ஏழைகளுக்கு உதவுவது சபையின் பணியாக இருக்கிறது (அப். 6; 11:27-30)

B. இயேசு கொடுத்தலைப் பற்றிய வழிமுறைகளை வகுத்திருக்கிறார்.

1. செயல் முக்கியமானதுதான், ஆனால் நோக்கமும் அவசியமாகிறது. தர்மமானது " *மனிதர்கள் காணும்படியாக* " இருக்கக்கூடாது.

2. இயேசு, " *உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது* " என்று போதித்தார். அதாவது, நாம் செய்யும் தர்மமானது " பகட்டான தற்புகழ்ச்சிக் " காக இருக்கக்கூடாது என்பதை இது வேறுவிதமாக அறிவிக்கிறது.

3. இது ஒருவருடைய உள்நோக்கம் சரியாக இருந்தால் அவர் செய்யும் தர்மம் விளம்பரமாகாமலிருக்காது. இயேசு அந்த ஏழை விதவையின் காணிக்கையை வெளிப்படையாகச் சொன்னார் (மாற்கு 12:41-44). பர்னபாவின் உதாரத்துவத்தை லூக்கா வெளிப்படையாக அறிவிக்கிறார்.

4. இயேசு கொடுத்தலையும், நற்கிரியையும் தொடர்புப்படுத்திப் பேசுகிறார். அவர் கொடுப்பதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது - கொடுப்பதற்கான காரணம் இருக்கிறது என்பதைக் காட்டினார்.

5. கொடுத்தலைப் பற்றிய வேறு சில வழிமுறைகளும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கொடுப்பது என்பது அன்பின் நிமித்தமாக, கைம்மாறு கருதாததாக இருக்க வேண்டும் (லூக்கா 6:35; 14:12-14). மேலும், கொடுத்தல் என்பது உற்சாகத்தோடு மனதில் நியமித்தபடி செய்யப்பட வேண்டும் (2 கொரி. 9:7).

C. கொடுப்பது ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது என்று போதித்தார்.

1. உன் பிதா தாமே உனக்கு "வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" என்று இயேசு சொல்வதில் கொடுப்பதற்கான இருதயம் சரியாக இருக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. (அப். 20:35)யை பாருங்கள்.

2. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி. 19:17: மத். 25:40,45).

3. உதாரத்துவமாய்க் கொடுக்கிறவனைத் தேவன் பொருளாதார ரீதியாக ஆசீர்வதிக்கிறார் என்பதைக் கற்றுக்கொள்கிறார் (லூக். 6:38; மல்கியா 3:10; II கொரி. 9:10,14).

III முடிவுரை :

A. ஏழைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் அதற்கான வாய்ப்புகள் பற்றியும் நாம் அதிகமாகப் போதிப்போம்.

1. சபைகள் ஏழைகளுக்குக் கொடுக்கும் வரவு செலவு அறிக்கையின் சதவீதத்தை மறுபரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

2. ஏழைகளுக்கு உதவி செய்வதற்கும், சுவிசேஷத்திற்கான வாய்ப்புகளுக்கும் இடையில் உள்ள தொடர்பை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

B. வறுமையால் பிடிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு, வீடுகள் இல்லாதவர்களுக்கு, மருத்துவப் பணிகளுக்கு, கிறிஸ்தவ மருத்துவமனைகளுக்கு உதவ ஏங்குகிற நம் ஆசைகள் நிறைவேற எண்ணற்ற வழிகள் இருக்கின்றன.